# திருமறைத்தீபம்



BIBLE LAMP
திருமறைத்தீபம்

**Issue No.4 of 2008**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Mt. Wellington, Auckland 1641
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

# வாசகர்களே!

*இந்த இதழிலே புதிய உடன்படிக்கையைப் பற்றிய முக்கியமான ஒரு தொடரை ஆரம்பித்திருக்கிறோம். பழைய, புதிய ஏற்பாடுகளாக கர்த்தர் நமக்குத் தந்திருக்கும் வேதத்தை சரிவர புரிந்துகொள்ள புதிய உடன்படிக்கை பற்றிய இந்த இறையியல் போதனை அவசியமானது. அத்தோடு, மலைப்பிரசங்கத்தின் கடைசிப் பகுதிக்கு ரைல் எழுதிய விளக்கவுரையையும் தந்திருக்கிறோம். முக்கியமாக பிரசங்க ஊழியத்தில் இருப்பவர்கள் இதை வாசிப்பது அவசியம். ரைல் எத்தனைத் தெளிவாக, ஆணித்தரமாக மலைப் பிரசங்கத்தின் பயன்பாட்டை மனித பயமில்லாமல் இதில் வெளிப்படுத்தியிருக்கிறார். ரைலின் பிரசங்கத்தோடு ஒப்பிடும்போது தமிழினத்துப் பிரசங்க ஊழியத்தின் தரக்குறைவை எண்ணி எம்மால் மனம் வருந்தாமல் இருக்க முடியவில்லை. அடுத்ததாக, நம்மினத்துக்கு இன்று எத்தகைய கிறிஸ்தவ தலைமை அவசியம் என்பதை விளக்கும் ஒரு ஆக்கமும் இந்த இதழில் வந்திருக்கிறது. தொடர்ந்து வரும் சில ஆக்கங்களை இதில் வெளியிட முடியவில்லை. அவை மீண்டும் வரப் போகின்ற இதழ்களில் வெளிவரும். பொறுத்துக்கொள்ளுங்கள்.*

*இந்தப் பத்திரிகை தனி மனித வழிபாட்டிற்கோ, தனி மனிதன் ஊழியத்தில் உயரப் படிக்கட்டாக அமையவோ அல்லது உப்புச் சப்பில்லாத செய்திகளைக் கர்த்தரின் பெயரில் பணத்தைச் செலவிட்டு அச்சிட்டுப் பெயர் தேடிக்கொள்ளவோ ஆரம்பிக்கப்படவில்லை. இதன் ஒரே நோக்கம் கர்த்தரின் வேதத்தைத் தெளிவாக விளக்கி அதைத் தமிழினத்துக் கிறிஸ்தவ சமுதாயம் வாசித்து வேத ஞானத்திலும் ஆவிக்குரிய வாழ்விலும் வளரத் துணைபுரிய வேண்டுமென்பதுதான். அந்த நோக்கம் நிறைவேறப் பல்வேறு சபை ஊழியங்களுக்கு மத்தியிலும் பொருட்செலவையும் பொருட்படுத்தாது இதனைத் தயாரித்து வெளியிட இந்நாள்வரைக் கர்த்தர் எங்களுக்குத் துணை புரிந்திருக்கிறார். இதில் வருகின்ற ஆக்கங்கள் தேவ பயத்தோடு, வேத அதிகாரத்துக்கு மதிப்பளித்து, அதற்கு எந்தவித மாசும் ஏற்படுத்திவிடக்கூடாது என்ற ஆத்மார்த்த உணர்வுடன் எழுதப்படுகின்றன. இந்த ஊழியம் இதே நோக்கத்தோடு தொடர பத்திரிகை குழுவுக்காக நீங்கள் தொடர்ந்து ஜெபியுங்கள். கர்த்தரை மகிமைப்படுத்தி வாழ புதிய வருடம் உங்களுக்கு உதவட்டும். நலமான புத்தாண்டு வாழ்த்துக்கள்! - ஆசிரியர்.*

# மலைப்பிரசங்கம்

## விளக்கவுரை - 2

**ஜோன் சார்ள்ஸ் ரைல் வேதபூர்வமாக பிரசங்கமளிப்பதில் வல்லவராக இருந்ததுமட்டுமல்லாமல் எழுதுவதிலும் வல்லவராக இருந்தார். எளிமையான சொற்களைப் பயன்படுத்தி தெளிவாக சத்தியங்களை விளக்குவதில் அவர் தன்காலத்தில் நிகரற்றவராக இருந்தார். புதிய ஏற்பாட்டு சுவிசேஷ நூல்கள் நான்கிற்கும் அவர் விளக்கவுரை எழுதியுள்ளார். ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் இருக்கும் அந்நூல்களால் பயனடைகிறவர்கள் அநேகர். மத்தேயு சுவிசேஷ நூலில் காணப்படும் கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்திற்கு ரைல் அளித்துள்ள விளக்கவுரையை இங்கே தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறோம். இவை தமிழில் நூல்களாக மலரப்போகும் காலம் தொலைவிலில்லை. - ஆசிரியர்.**

**வேதப்பகுதி: மத்தேயு 7:1-11**
**தலைப்பு: குற்றம் கண்டுபிடிப்பது தவிர்க்கப்பட்டு ஜெபம் உற்சாகப்படுத்தப் படுகிறது.**

*இந்த வசனங்களின் முதல் பாகம், அது தரும் மெய்யான அர்த்தத்திற்கு மாறான விளக்கமளிப்பதைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியதைச் சுட்டிக்காட்டும் வேதப் பகுதிகளில் ஒன்றாகும். மெய்க் கிறிஸ்தவத்தின் எதிராளிகளால் அடிக்கடி இது துஷ்பிரயோகம் பண்ணப் படுகிறது. வேத வார்த்தைகளை நாம் பலவந்தம் பண்ணும்போது, அவை மருந்தாகப் பயன்படாமல், விஷமாய் மாறுவதற்கான வாய்ப்பிருக்கிறது.*

*"குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று நமது ஆண்டவர் கூறும்போது, பிறருடைய நடத்தை மற்றும் கருத்துக்களைக் குறித்த அனுகூலமற்ற தீர்ப்பை எந்தவொரு சூழ்நிலையிலும் வழங்காமலிருப்பது தவறு என்று அவர் இங்கு அர்த்தப்படுத்தவில்லை. நாம் தீர்மானிக்கப்பட்ட கருத்துக்களைக் கொண்டிருக்க வேண்டும், "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து," நாம் "ஆவிகளையும் சோதித்து அறிய" வேண்டும். நாம் பூரணராயும், குற்றமற்றவர்களாயும் மாறும்வரை, பிறருடைய பாவங் களையும், குற்றங்களையும் கண்டிப்பது முழுத்தவறு என்றும் அவர் இங்கு அர்த்தப்படுத்தவில்லை. அப்படிப்பட்ட விளக்கம் வேதத்தின் ஏனைய வேதப் பகுதிகள் தரும் போதனைக்கு முரணாயிருக்கும்; அது பிழையும் போலியுமான கொள்கைகளைக் கண்டிக்கவும் வழி இல்லாமல் ஆக்கி விடும். அத்தோடு, மந்திரி அல்லது நீதிபதி போன்ற பணிகளையும் எவரும் ஏற்க முடியாதபடி இது தடைசெய்துவிடும். "உலகம் துன்மார்க்கர் கையில் விடப்பட்டிருக்கிறது" (யோபு 9:24); இணங்காமை அபிவிருத்தி அடையும்; தீமை செய்வது பெருகும்.*

*குற்றங்குறை கண்டுபிடிக்கின்ற இருதயத்தைக் கடிந்துக்கொள்ள வேண்டும் என்றே நமது ஆண்டவர் அர்த்தப்படுத்துகிறார். அலட்சியமான போக்கு அல்லது அற்பமான குற்றங்களுக்காக பிறரை நிந்திப்பது, மடத்தன மான, அஜாக்கிரதையான நியாயத்தீர்ப்புகளை வழங்குவது, நம்முடைய அயலாரின் குற்றங்களையும், பிழைகளையும் பெரிதுபடுத்தி அவைகளை இன்னும் மோசமான நிலைக்குள்ளாக்குவதில் ஆர்வம் காட்டுவது ஆகிய நடவடிக்கைகளையே நமது ஆண்டவராகிய இயேசு குறை காண்கிறார். பரிசேயர்கள் மத்தியில் இவ்வழக்கம் பொதுவாகக் காணப்பட்டது. அவர்களுடைய காலந்தொடங்கி இந்நாள் மட்டும் இது பொதுவாய்க் காணப்படுகிறது. இதைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். நாம் மற்றவர்களைக் குறித்து நாம் "சகலத்தையும் விசுவாசித்து, சகலத்தை யும் நம்ப" வேண்டும். அதேவேளை, குற்றம் கண்டுபிடிப்பதில் வெகு நிதானமாய் இருக்க வேண்டும். இதுவே கிறிஸ்தவனின் பண்பு (1 கொரிந் தியர் 13:7).*

*மத சம்பந்தமான காரியங்களை நாம் மனிதர்களோடு பேசும்போது, விவேகத்தோடிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை இந்த வசனங்களின் இரண்டாம் பாகம் நமக்குப் போதிக்கிறது. ஒவ்வொன்றும், அதனதனுடைய காலத்திலும், இருக்கின்ற இடத்திலும் அழகாய் இருக்கும். நம்முடைய வைராக்கியமானது காலங்கள், இடங்கள் மற்றும் மனிதர்களின் விவேக முள்ள சிந்தனையால் உரமூட்டப்பட வேண்டும். "பரியாசக்காரனைக் கடிந்துக் கொள்ளாதே, அவன் உன்னைப் பகைப்பான்" என்று சாலொ மோன் கூறுகிறார் (நீதிமொழிகள் 9:8). ஆன்மீக காரியங்கள் மீதான நமது எண்ணங்களை வெளிப்படையாக அனைவரிடமும் கூறுவது ஞானமற்றது. இன்று அநேகர், மூர்க்க மனநிலைமை அல்லது வெளிப்படையான ஒழுக்க மற்ற பழக்கங்களினால் சுவிசேஷத்தின் காரியங்களை மதிக்க முற்றிலும் இயலாதவர்களாய் இருக்கிறார்கள். நாம் அவர்களுடைய ஆத்துமாவிற்கு நன்மை செய்ய முயற்சித்தால், அவர்கள் உணர்ச்சி வசப்பட்டு, மேலும் பாவங்களைச் செய்ய முற்படுவார்கள். இப்படிப்பட்ட ஜனங்களுக்கு கிறிஸ்துவின் நாமத்தை விளக்கப் பார்ப்பது, மெய்யாகவே "பன்றிகளுக்கு முன் முத்துக்களை போடுவதற்கு" சமமாகும். அது அவர்களுக்கு நன்மை செய்யாமல், தீமையையே அளிக்கிறது. அது அவர்களுடைய எல்லா அசுத்தங்களையும் கிளறி, அவர்களை மூர்க்கமடையச் செய்கிறது. சுருக்கமாகக் கூறுவோமானால், அவர்கள் கொரிந்துவிலுள்ள யூதர்களைப் போலவும் அல்லது நாபாலைப் போலவும் இருக்கிறார்கள் (அப்போஸ்தலர் 18:6). வேதம் நாபாலைக் குறித்து இப்படியாக எழுதியுள்ளது "இவரோ, ஒருவரும் தம்மோடே பேசக்கூடாதபடிக்கு, பேலியாளின் மகனாயிருக் கிறார்" (1 சாமுவேல் 25:17).*

*இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் பாடத்தை நாம் சரியான முறையில் பயன்படுத்த வேண்டுமானால் அதில் விசேஷமாய்க் கவனம் செலுத்த வேண்டும். அதினுடைய சரியான பயன்பாட்டிற்கு நமக்கு அதிக ஞானம் தேவைப்படுகிறது. அதிக வைராக்கியத்தைக் காட்டிலும் அதிக அஜாக் கிரதையினாலேயே நம்மில் அநேகர் தவறிழைக்கிறோம். பொதுவாக, நாம்*

*“பேசுகின்ற காலத்தை” விட “அமைதலாய் இருக்கின்ற காலத்தை” ஒழுங்கு படுத்த எண்ண வேண்டும். இருந்தபோதும், நம்முடைய எல்லா இருதயங் களிலும் சுய பரிசோதனை செய்கின்ற ஆவி எழுப்பப்பட வேண்டும் என்று இந்தப் பாடம் வலியுறுத்துகிறது. நம்முடைய கோபம் மற்றும் எரிச் சலான ஆவியினால், நம்முடைய நண்பர்களால் நமக்கு அளிக்கப்படும் நல்லறிவுரைகளை நாம் என்றாவது உதறித்தள்ளியிருக்கிறோமா? நம் முடைய அகம்பாவத்தாலும், புத்திகூறுவதில் காட்டும் பொறுமையின்மை யினாலும், பிறருக்கு என்றாவது உதவாமலிருந்திருக்கிறோமா? நமக்கு அன்போடு ஆலோசனையளிப்பவர்களுக்கு விரோதமாகத் திரும்பி, நம்முடைய மூர்க்கத்தனத்தினாலும், உணர்ச்சி வேகத்தாலும் என்றாவது அவர்களைப் பேசாமலிருக்கச் செய்திருக்கிறோமா? இந்த விஷயத்தில் நாம் அடிக்கடி தவறிழைத்திருப்பதைக் குறித்து பயப்பட வேண்டும்.*

*ஜெபத்தின் கடமை மற்றும் ஜெபிப்பதற்கான சிறந்த உற்சாகமூட்டுதலை இந்த வசனங்களின் கடைசிப் பாகம் நமக்குப் போதிக்கிறது. இந்தப் பாடத்திற்கும், இதற்கு முந்தைய பாடத்திற்கும் இடையே ஓர் அருமையான தொடர்பு இருக்கிறது. நாம் எப்போது “அமைதலாய்” இருக்க வேண்டும் அல்லது “பேச” வேண்டும், எப்போது நாம் “பரிசுத்த காரியங்களை” முன் கொண்டுவந்து, நம்முடைய “முத்துக்களைத்” தூவ வேண்டும் என்று அறிய விரும்புகிறீர்களா? அதற்கு நாம் ஜெபிக்க வேண்டும். இதற்கே கர்த்தராகிய இயேசு அதிக முக்கியத்துவம் அளித்தார். அவர் பயன்படுத்திய வார்த்தை களே இதற்கு தெளிவான ஆதாரமாகும் “கேள்”, “தேடு” மற்றும் “தட்டு” என்கிற இந்த மூன்று வெவ்வேறு வார்த்தைகளை அவர் ஜெபத்தின் கருத்தை வெளிப்படுத்தப் பயன்படுத்தியிருக்கிறார். உண்மையாய் ஜெபிக் கிறவர்களுக்கு அவர் அகலமான, நிறைவான வாக்கை வைத்திருக்கிறார் “கேட்கிற யாவரும் பெற்றுக் கொள்வார்கள்.” நம்முடைய ஜெபங்களைக் கேட்கத் தயாராக இருக்கும் கர்த்தருடைய ஆயத்த நிலையை, பூமியிலுள்ள பெற்றோர்கள் மத்தியில் காணப்படும் சாதாரணமான வழக்கத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு உதாரணத்தின் மூலம் அவர் விளக்குகிறார்: இயல் பாகவே, துன்மார்க்கமும், சுயநலமும் உடைய அவர்கள், தங்கள் பிள்ளை களுடைய மாம்சீக தேவைகளை நிறைவேற்ற அசட்டை செய்வதில்லை; இவைகளுக்கு மேலாக, அன்பும், இரக்கமுமுள்ள நம்முடைய தேவன், கிருபையினாலே தம்முடைய பிள்ளைகளாய் இருக்கிற யாவருடைய கூக்குரலுக்கும் செவி கொடுக்கிறார்.*

*ஜெபத்தைக் குறித்த நமது ஆண்டவரின் இந்த வார்த்தைகளை நாம் சிறப்பாய்க் கவனிப்போம். அவருடைய வாக்கியங்களில் சில, இதைப் போன்று பிரசித்திப் பெற்றதும், அடிக்கடி சொல்லப்பட்டதுமாய் இருக்கிறது. “நாம் தேடாவிட்டால், கண்டுபிடிக்க மாட்டோம்” என்று எளியோரும், கல்வியறிவு அற்றவர்களும் பொதுவாக நமக்குச் சொல்வ துண்டு. ஆனால், நாம் அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் வெறுமனே அறிந்திருப்பதில் என்ன நன்மை இருக்கிறது? ஞானமானது, விருத்தியடைந்து, சிறந்த முறையில் பயன்படுத்தப்படாவிட்டால் கடைசி நாளில் நம்முடைய தண்டனை மட்டுமே அதிகரிக்கும்.*

*“கேளுங்கள், தேடுங்கள் மற்றும் தட்டுங்கள்”, இதைக் குறித்து நாம் ஏதாவது அறிந்து வைத்திருக்கிறோமா? நாம் ஏன் அறிந்து கொள்ளக் கூடாது? ஒரு மனிதன் ஜெபிக்கவேண்டும் என்ற மெய்யான மன உறுதியைக் கொண்டிருந்தால், ஜெபிப்பதைப் போன்ற எளிமையான காரியம் வேறொன்றும் இல்லை. மிகவும் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால் மனிதர்கள் இதைத்தான் எப்போதும் செய்யத் தாமதிப் பார்கள். இதை செய்வதற்கு முன்பாக, அநேக மதக் காரியங்களை அவர்கள் பயன்படுத்துவார்கள்; அநேக மதச்சடங்குகளைக் கடைப்பிடிப் பார்கள்; இருப்பினும், ஜெபம் இல்லாவிட்டால், எந்த ஆத்துமாவும் காப்பாற்றப்பட முடியாது!*

*நாம் மெய்யாகவே ஜெபிக்கின்றோமா? இல்லையென்றால், நாம் மனந்திரும்பாவிட்டால், கடைசியில் நாம் கடவுளுக்கு முன்பாகக் குற்ற முள்ளவர்களாய்க் காணப்படுவோம். நாம் செய்யக்கூடாதவற்றை செய்யாத தினாலோ அல்லது அறியக்கூடாதவற்றை அறியாததினாலோ நாம் தண்டிக்கப்பட மாட்டோம்; ஆனால், நாம் ஏன் தொலைந்து போனோம் என்பதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக எது இருக்கும் தெரியுமா? நாம் இரட்சிக்கப்படும்படி நாம் ஒருபோதும் அவரிடம் “கேட்டதில்லை” என்பதுதான்.*

*நாம் உண்மையாகவே ஜெபிக்கின்றோமா? அப்படியானால், நாம் மனந்தளராமல் ஜெபிக்க வேண்டும். அது வீணான பிரயாசமன்று; அது பிரயோஜனமற்றதுமன்று; அநேக நாட்களுக்குப் பிறகு, அது கனி கொடுக்கும். “கேட்கிற யாவரும் பெற்றுக்கொள்வார்கள்” என்ற வார்த்தை கள் ஒருபோதும் தவறாது.*

**வேதப்பகுதி: மத்தேயு 7:12-20**

**தலைப்பு: பிறருக்கான கடமையின் கட்டளை; இரண்டு பாதைகள்; கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எதிரான எச்சரிக்கை**

*மலைப் பிரசங்கத்தின் இப்பகுதியில் நமது ஆண்டவர் தம்முடைய பிரசங்கத்தின் முடிவுரையை ஆரம்பிக்கிறார். அவர் நம்முடைய கவனத்திற் காக இங்கே வலியுறுத்துகின்ற பாடங்கள் யாவும் விசாலமானதும், பொது வானதும் மற்றும் ஆழமான ஞானக் கருத்துக்களைக் கொண்டதுமாகும். அவர், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஏற்படும் எல்லாவித ஐயமுள்ள கேள்விகளுக்குமான ஒரு பொதுவான பதிலை நம்மை வழி நடத்துவதற்காக வரையறுக்கிறார். அது என்ன தெரியுமா? “பிறர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ அதையே நாம் அவர்களுக்குச் செய்ய வேண்டும்” என்பதுதான் அது. பிறர் நமக்கு எப்படிப் பகிர்ந்தளிக்கிறார்களோ அப்படியே நாமும் அவர்களுக்கு செய் யக் கூடாது. ஏனெனில், அது வெறும் சுயநலமும், புறஜாதி வழக்கமுமாகும். உண்மையில், பிறர் நமக்கு எப்படிப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோமோ அதேபோல, நாமும் அவர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். இதுவே மெய் கிறிஸ்தவம் போதிக்கும் சத்தியமாகும்.*

*மெய்யாகவே, இது ஒரு பொன்னான கட்டளை! இது எல்லாவிதமான அற்ப விரோதங்கள், பழிவாங்குதல் மற்றும் எல்லாவிதமான ஏமாற்றுக் காரியங்களையும் அதற்கும் மேலான காரியங்களையும் தடை செய்கின்றது. இந்தப் பாவம் நிறைந்த உலகில், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே எழுகின்ற நூற்றுக்கணக்கான கடினமான காரியங்களை இது தீர்த்து வைக்கின்றது; குறிப்பிட்ட நிலைகளில் நம்முடைய நடத்தைக்கான எண்ணற்ற சிறு சிறு விதிகளை வகுத்துக் கொள்ளுவதின் அத்தியாவசியத் தேவையை இது தவிர்க்கிறது; ஒரு மகத்தான கொள்கையைக் கொண்டு முற்றிலும் விவாதத்திற்குரிய பகுதியை இது நீக்குகிறது; ஒவ்வொருவரும் தங்களுடைய கடமைப் பொறுப்பை உணரக்கூடிய சமநிலையையும், அளவையும் இது நமக்குக் காண்பிக்கிறது. நமது அயலானவர்கள் நமக்கு இதைச் செய்யக்கூடாது என்று நாம் விரும்புகிற காரியம் ஏதாவது உண்டா? அப்படி இருப்பின், அதே காரியத்தை நாம் அவர்களுக்கு செய்யக்கூடாது என்று நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு குறிப்பிட்ட காரியத்தை இன்னொருவர் நமக்கு செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமா? அப்படியானால், அதே காரியத்தை நாம் அவர்களுக்குச் செய்ய வேண்டும். இந்த விதி உண்மையாய்க் கடைபிடிக்கப்படுமானால், எத்தனை நுணுக்கமானக் கேள்விகளுக்கும் உடனடியாக பதில் கிடைத்துவிடும்!*

*இரண்டாவது, நமது ஆண்டவர், கிறிஸ்தவத்தில் அநேகருடைய வழிகளுக்கு எதிரான ஒரு பொதுவான எச்சரிக்கையை நமக்குத் தருகிறார். பிறரைப் போல சிந்தித்து, அவர்களைப் போல நாம் செய்வது மட்டும் போதாது. உலக சிநேகம் உள்ள மனிதர்கள் மத்தியில் வாழ்கின்ற நாம் நாகரீக வழக்கங்களைப் பின்பற்றுவோமானால் அவை நம்மைத் திருப்திப்படுத்த முடியாது. நித்திய வாழ்விற்கு நம்மை வழிநடத்துகின்ற பாதையானது "இடுக்கமானதும்", வெகு "சிலரே" அதில் பயணம் செய்வார்கள் என்றும் ஆண்டவர் கூறுகிறார். மேலும் அவர், நித்திய அழிவிற்கு செல்லும் பாதையானது "விஸ்தாரமானதும்", என்றும் "அநேகர்" அதில் பிரவேசிப்பார்கள் என்றும் கூறுகிறார். "அதின் வழியாய் பிரவேசிப்பவர்கள் அநேகர்" என்று வேதம் கூறுகிறது.*

*இவையனைத்தும் பயப்படத்தக்க உண்மைகள்! இவைகளைக் கேட்கிற யாவரும் தங்கள் இருதயங்களையும், சிந்தனைகளையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். "எந்தப் பாதையில் நான் சென்று கொண்டிருக்கின்றேன்?" "எந்தப் பாதையின் வழியாய் நான் பயணிக்கிறேன்?" என்று நம்மை நாமே கேட்டுப் பார்க்க வேண்டும். இங்கே கூறப்பட்டுள்ள இவ்விரு வழிகளில் ஏதாவது ஒன்றில் மட்டுமே நாம் ஒவ்வொருவரும் காணப்படுவோம். கர்த்தர் தாமே நமக்கு சுத்தமான, தற்பரிசோதனை செய்கின்ற ஆவியை தந்து, நாம் எங்கே இருக்கிறோம் என்று நமக்குக் காண்பிப்பாராக!*

*நம்முடைய கிறிஸ்தவத்தில் கீழ்வரும் விதத்தில் சிந்திக்கும் ஜனங்கள் பெருகி வருவார்களானால், நாம் அதிகமாய் பயப்படவும் நடுங்கவும் வேண்டும். "மற்றவர்கள் எங்கே செல்லுகிறார்களோ, அங்கே நாங்களும்*

போவோம்; அவர்கள் யாரை சேவிக்கிறார்களோ அவர்களையே நாங்களும் செவிப்போம்” என்ற எண்ணப்போக்கைக் கொண்டு வேறொன்றையும் நாம் பொருட்படுத்தாதிருந்தால், நமக்கு நாமே கோபாக்கினையை வருவித்துக் கொள்வோம். இது நாம் “விஸ்தாரமான வழியில்” போவதையல்லாமல் வேறெதை இது சுட்டிக் காட்டுகிறது? இப்பாதையின் முடிவாகிய “நித்திய அழிவில்” நாம் இருக்கிறோம் என்பதை அல்லாமல் வேறெதை இது குறிக்கின்றது? நம்மத்தியில் இன்று பரவலாகக் காணப்படும் கிறிஸ்தவம் மெய்யாகவே இரட்சிக்கும் கிறிஸ்தவம் அல்ல.

நாம் பயபக்தியோடு பின்பற்றுகிற கிறிஸ்தவம், பிரபல்யமானது அல்ல என்பதால் நாம் மனமுறிவடைய வேண்டிய அவசியமில்லை. இதை ஒரு சிலர் நம்மோடிணைந்து அங்கீகரிப்பார்கள். “ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாய் இருக்கிறது” என்று இப்பகுதியில் சொல்லப்பட்டுள்ள நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை நாம் நினைவுகூர வேண்டும். “மனந்திரும்புதல், கிறிஸ்து விலுள்ள விசுவாசம், பரிசுத்த ஜீவியம்”, இவையெல்லாம் ஒருபோதும் பார்வைக்கு நாகரீகமானவையாயிருக்காது. மெய்யான கிறிஸ்துவின் மந்தை எப்போதுமே இந்த உலகில் சிறிய கூட்டமாய்த்தான் இருக்கும். தனிப்பட்ட வர்கள், நூதனமானவர்கள், கொள்கை வைராக்கியம் கொண்டவர்கள், குறுகிய மனப்பான்மை உடையவர்கள் என்று மற்றவர்கள் நம்மைக் குறைகாணுவதால் நாம் மனம் தளர்ந்துவிடக்கூடாது. இது “இடுக்கமும், நெருக்கமுமான வாசல்” நிச்சயமாகவே வெகு திரளான ஜனங்களோடு “நித்திய அழிவிற்குள்” பிரவேசிப்பதைப் பார்க்கிலும் வெகு சிலரோடு நாம் “நித்திய ஜீவனுக்குள்” பிரவேசிப்பதே மேலானது.

கடைசியாக, நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து திருச்சபையில் உள்ள போலிப் போதகர்களுக்கு எதிரான ஒரு பொதுவான எச்சரிப்பை நமக்கு அருளுகிறார். “போலித் தீர்க்கதரிசிகளைக்” குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். இப்பகுதிக்கும் இதற்கு முந்தைய பகுதிக்கும் இடையே யான தொடர்பு விசேஷமானது. “விஸ்தாரமான வாசலை”க் குறித்து நாம் தெளிவுள்ளவர்களாய் இருக்கிறோமா? போலித் தீர்க்கதரிசிகளைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். அவர்கள் எழுந்திருப்பார்கள்; தவறான வித்துக்கள் விதைக்கப்படுவதற்கு முன்பே, அவர்கள் அப்போஸ் தலர்களின் காலத்தில் தோன்ற ஆரம்பித்தார்கள். அதைத் தொடர்ந்து அவர்கள் உருவாக ஆரம்பித்தார்கள். அவர்களுக்காக நாம் ஆயத்தமாகி நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட எச்சரிப்பு நமக்கு மிகவும் அவசியமானது. கிறிஸ்தவத்தில் சொல்லப்படுகின்ற அனைத்தையும், அதிகாரமுடைய ஊழியரிடமிருந்து கேட்கிற எதையும் விசுவாசிக்க ஆயிரக்கணக்கானோர் ஆயத்தமாய் இருப்பார்கள். பாமரர்களைப் போல போதகர்களாலும் தவறிழைக்க முடியும் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். அவர்கள் தவறிழைக்க முடியாதவர்கள் அல்லவே, பரிசுத்த வேதாகமம் என்னும் தராசில் அவர்களுடைய போதனைகள் அளவிடப்படவேண்டும். அவர்களுடைய

கொள்கைகள் வேதத்தோடு ஒத்துப்போகின்றவரை, அவைகள் கைக் கொள்ளப்பட்டு விசுவாசிக்கப்பட வேண்டும். ஆனால், அதிலிருந்து தவறினால், ஒரு நொடிப் பொழுதுகூட அதை விசுவாசிக்கக் கூடாது. "அவர்களுடைய கனிகளினாலே" அவைகளை நாம் சோதித்துப் பார்க்க வேண்டும். இது வலுவான தீர்க்கதரிசிகளுக்கான அடையாளங்கள். இதை நாம் நினைவுகூருவோம். நமது ஊழியக்காரரின் தவறுகள் நம்முடைய தவறுகளை மன்னிக்காது. "குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியில் விழுவார்களே" என்று வேதம் கூறுகிறது (மத்தேயு 15:14).

போலிப் போதனைக்கு எதிரான சிறந்த பாதுகாப்பு எது? சந்தேக மில்லாமல், பரிசுத்த ஆவியானவரின் கற்பித்தல், வேண்டிய ஜெபத்தோடுக் கூடிய கர்த்தருடைய வார்த்தையை முறையாய் தியானித்தல் ஆகியவையே ஆகும். வேதம் நம்முடைய கால்களுக்குத் தீபமாகவும், நம் பாதைக்கு வெளிச்சமாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது (சங்கீதம் 119:105). இதை முறையாய், சரியாய் வாசிக்கிற மனுஷன், ஒருபோதும் பெரிதாக பாவஞ் செய்ய அனுமதிக்கப்படான். வேதத்தை நிராகரிப்பதாலேயே நம்மில் அநேகர் தாங்கள் சந்திக்கின்ற முதல் போலிப் போதகருக்கு இறையாகிவிட நேரிடுகிறது. "நாங்கள் பெரிதான கல்வி அறிவற்றவர்கள், ஆகவே, பெரிய ஞானமுள்ளவர்களைப் போல நாம் நடிக்கக் கூடாது" என்று போலித் தாழ்மையுடன் நடப்பதன் மூலம் அவர்கள் நம்மை நம்பச் செய்வார்கள். உண்மையில், அவர்கள் வேதத்தை வாசிக்க சோம்பேறித்தன முள்ளவர்களாயும், சுயமாக சிந்திக்க விரும்பாதவர்களாயும், தாழ்மை என்னும் அங்கியின்கீழ் மறைந்திருக்கும் ஆத்மீக சோம்பேறிகளுமே யல்லாமல் வேறெவருமில்லை.

நம்முடைய கர்த்தருடைய எச்சரிப்பை நாம் அனைவரும் நம் சிந்தையில் வைப்போமாக. உலகம், பிசாசு மற்றும் மாம்சம் ஆகிய இவைகள் மட்டுமே ஒரு கிறிஸ்தவனின் பாதையில் வரும் அபாயங்கள் அன்று; இதைத் தவிர வேறொன்றும் இருக்கிறது, அதுவே "கள்ளத் தீர்க்கதரிசி" ஆகும். அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்திய ஓநாய்கள். ஜெபித்து, கிறிஸ்தவத்திலுள்ள சத்தியத்திற்கும், கள்ளப் போதனைக்கும் இடையேயான வேறுபாட்டை அறிகிறவன் பாக்கியவான்! இரண்டிற்கும் வேறுபாடு இருக்கின்றது. அதை நாம் அறியவும், நம்முடைய ஞானத்தை பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

**வேதப்பகுதி: மத்தேயு 7:21-29**

**தலைப்பு: பயிற்சியற்ற தொழிலின் பிரயோஜனமற்ற தன்மை; இருவிதமாக வீடுகளைக் கட்டுபவர்கள்.**

கர்த்தராகிய இயேசு, இருதயத்தை ஊடுருவிச் செல்கின்ற பயன்பாடு நிறைந்த ஒரு பகுதியின் மூலம் தன்னுடைய மலைப் பிரசங்கத்தை நிறைவுச்செய்கிறார். அவர், கள்ளத் தீர்க்கதரிசிகளிடம் இருந்து போலி போதனையாளர்களிடமும், சீர்கெட்ட ஆசிரியர்களிடம் இருந்து உண்மை

யற்ற ஜனங்கள் பக்கமுமாகத் திரும்புகிறார். நம்மனைவருக்குமான மெய் வார்த்தைகள் இங்கே இருக்கின்றன. நாம் நம்முடைய இருதயங்களில் இவற்றை பதித்துக்கொள்ள கிருபை பெறுவோமாக!

இங்கே கொடுக்கப்பட்டுள்ள முதலாவது பாடம், வெளிப்புறமான கிறிஸ்தவ ஊழியத்தின் பிரயோஜனமற்ற தன்மையை விளக்குகிறது. "கர்த்தாவே, கர்த்தாவே" என்று கூப்பிடுகிற யாவரும் பரலோக இராஜ்ஜியத் திற்குள் பிரவேசிக்க மாட்டார்கள். கிறிஸ்தவர்கள் என்று தங்களை பகிரங்கமாய் அழைத்துக் கொள்கின்ற யாவரும் இரட்சிக்கப்பட்டவர்கள் அல்ல என்பதே இதன் பொருள்.

இதை நாம் கவனித்துப் படிப்போம். இரட்சிப்பிற்கு தேவையானதாக அநேக ஜனங்கள் கருதுகின்ற காரியங்களைவிட மேலானவற்றை ஓர் ஆத்துமா நாட வேண்டும் என்று இது வேண்டுகிறது. நாம் கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, நம்முடைய உன்னதமான சலுகைகளுக்காக திடநம்பிக்கையோடு பெருமிதம் கொள்ளலாம்; அறிவு பூர்வமான ஞானத்தைக் கொண்டிருந்து, நம்முடைய சொந்த நிலையிலே சுய திருப்தி உள்ளவர்களாய்க் காணப்படலாம். நாம் பிரசங்கிகளாகவோ பிறருக்கு போதிக்கின்ற ஆசிரியர்களாகவோ, திருச்சபையோடு இணைந்த "அநேக உன்னதமான பணிகளை" செய்பவர்களாகவோகூட இருக்கலாம். இருப்பினும், நாம் எந்நேரமும் பரத்திலிருக்கிற நம்முடைய பிதாவின் சித்தத் தின்படியே எல்லாக் காரியங்களையும் செய்கிறோமா? நாம் மெய்யாகவே மனந்திரும்பி, உண்மையாகவே கிறிஸ்துவை விசுவாசித்து, பரிசுத்தமும் தாழ்மையுமான வாழ்க்கை வாழ்கின்றோமா? நாம் எல்லா கிருபையான சலுகைகளையும், ஊழியத்தையும் கொண்டிருந்தபோதும், மேற்சொன்ன வாழ்க்கையை வாழாவிட்டால், நிச்சயமாகவே இறுதியில் நாம் பரலோகத்தை தவறவிட்டு என்றென்றும் நித்திய நரகத்தில் இருப்போம். "நான் உங்களை அறியேன்; என்னை விட்டு அகன்று போங்கள்" என்ற பயங்கரமான கர்த்தருடைய வார்த்தைகளை நாம் கேட்க நேரிடும்.

நியாயத்தீர்ப்பின் நாளிலே அநேக நூதனமான காரியங்கள் வெளிப்படுத்தப்படும். வாழும்போது சிறந்த கிறிஸ்தவர்கள் என்றெண்ணி வாழ்ந்த அநேகருடைய நம்பிக்கைகள் முழுவதுமாக நாசமாக்கப்பட்டு விடும். அந்நாளிலே, அவர்களுடைய கிறிஸ்தவத்தின் பிரயோஜன மற்றத்தன்மை வெளிப்படுத்தப்பட்டு, முழு உலகிற்கு முன்பாகவும் அவர்கள் அவமானப்படுத்தப்படுவார்கள். பின்னர், இரட்சிக்கப்படுவது என்பது "ஊழியம் பண்ணுவது" என்ற கருத்திற்கும் மேலானது என்று அன்று மெய்ப்பிக்கப்படும். நம்முடைய கிறிஸ்தவத்தை நாம் "பகிரங்கமாக அறிவிப்பதைப்" போல அதை "நடைமுறைப்" படுத்த வேண்டும். நாம் அடிக்கடி அந்த முக்கியமான நாளைக் குறித்து சிந்தித்துப் பார்ப்போம். நாம் கர்த்தரால் குற்றவாளிகள் என்று "நியாயந் தீர்க்கப்படாதபடிக்கு நம்மை நாமே அனுதினமும் நியாயந் தீர்க்கக்கடவோம்." நாம் எப்படிப்பட்டவர்களாயினும், உண்மை, சத்தியம் மற்றும் நேர்மை உள்ளவர்களாய் இருக்க முயற்சி செய்வோம்.

*இங்கே கொடுக்கப்பட்டுள்ள இரண்டாவது பாடம் இருவிதமான மக்களைப் பற்றிய ஒரு விசேஷமான சித்திரத்தின் மூலமாகத் தரப்பட்டுள்ளது. கிறிஸ்தவ சத்தியங்களைக் கேட்டு அதன்படி ஒன்றும் செய்யாதவர்கள், கிறிஸ்தவ சத்தியங்களைக் கேட்டு அதன்படி செய்கிறவர்கள் ஆகிய இவ்விரு கூட்டத்தாரும் நமக்கு முன்பாக படம் பிடித்துக் காட்டப்படுகிறார்கள். அவர்கள் அடைகின்ற முடிவு, சென்றடையும் இடம் வரையிலான அவர்களுடைய சரித்திரங்களும் இங்கே விவரிக்கப்பட்டுள்ளன.*

*கிறிஸ்தவ போதனைகளைக் கேட்டு, அவற்றைப் பின்பற்றி நடக்கிற மனுஷன் "கற்பாறையின்மீது தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பாவான்." மனந்திரும்பி, கிறிஸ்துவை விசுவாசித்து பரிசுத்த வாழ்வு வாழ வேண்டும் என்கிற எச்சரிக்கைகளைக் கேட்பதோடு மட்டும் அவன் திருப்தியடைவதில்லை. அவன் மெய்யாகவே மனந்திரும்புகிறான்; அவன் உண்மையாகவே விசுவாசிக்கிறான்; அவன் மெய்யாகவே தீமை செய்வதை நிறுத்தி, நன்மை செய்யக் கற்றுக்கொண்டு பாவமான யாவற்றையும் வெறுத்து, நன்மையானதைப் பற்றிக்கொள்கிறான். அவன் கேட்கிறவன் மட்டுமல்லாமல் செயலாற்றுகிறவனுமாய் இருக்கிறான் (யாக்கோபு 1:22).*

*அதனுடைய விளைவு யாது? சோதனையின் காலத்தில், அவனுடைய கிறிஸ்தவம் அவனைக் கைவிடவில்லை. சுகவீனம், துக்கம், வறுமை, ஏமாற்றம் மற்றும் இழப்புகள் போன்ற வெள்ளங்கள் அவன்மீது மோதினாலும், அவன் சோர்வடையவில்லை. அவனுடைய ஆத்துமா அசையாமல் நின்றது; அவனுடைய விசுவாசம் நீங்கிப்போகவில்லை; அவனுடைய சௌகரியங்கள் முழுவதுமாக அவனைக் கைவிடவில்லை. கடந்த காலத்தில் அவனுடைய கிறிஸ்தவம் அவனுக்கு பிரச்சனைகளைக் கொண்டு வந்திருக்கலாம்; அவருடைய அஸ்திபாரமானது மிகக் கடின உழைப்பாலும், கண்ணீரினாலும் சம்பாதிக்கப்பட்டிருந்திருக்கலாம்; கிறிஸ்து மீதான அவனுடைய ஆர்வத்தைக் கண்டுபிடிக்க அநேக நாட்கள் மெய்த்தேடலிலும், அநேக மணிநேரங்கள் ஜெபத்தில் போராடுவதிலுமாய் இருந்திருக்கும். ஆனால், அவனுடைய உழைப்பு தூக்கியெறியப்படவில்லை. இப்போது அவன் வளமான பலன்களை அறுப்பான். சோதனையை சகிக்கிற கிறிஸ்தவமே மெய்க் கிறிஸ்தவமாகும்.*

*கிறிஸ்தவ போதனைகளைக் கேட்டு, தான் கேட்ட சத்தியங்களுக்கு மேலாக எதையும் செய்யாத மனுஷன், "மணலின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பாவான்." கேட்பதிலும், அங்கீகரிப்பதிலும் மட்டும் அவன் தன்னைத் திருப்தி செய்து கொள்கிறான். ஆனால், அதைத் தொடர்ந்து தன் வாழ்வில் பின்பற்றமாட்டான். தன் ஆத்துமாவில் எல்லாம் சரியாய் இருக்கிறதென்று போலியாகத் தன்னைத்தானே மெச்சிக் கொள்வான். ஏனெனில், ஆத்மீகக் காரியங்களுக்கான சுயநலமான உணர்ச்சிகள், திடநம்பிக்கை மற்றும் விருப்பங்களையே அவன் கொண்டுள்ளான். இவைகளிலேயே அவன் தங்கி இருப்பான்.*

*அவன் ஒருபோதும் பாவத்தைக் களைய மாட்டான். மேலும், உலகத்தின் ஆவியைப் புறம்பே தள்ளமாட்டான்; அவன் மெய்யாகவே கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டிரான். அவன் சிலுவையின் மகிமையைக் கேட்கிறவனாக மட்டுமே இருப்பானேயன்றி, வேறொன்றும் அதிகமாக செய்யமாட்டன்.*

*இம்மனிதனுடைய கிறிஸ்தவ சமயத்தின் முடிவு என்ன? அது சோதனையின் முதல் வெள்ளத்திலே முற்றிலுமாக அடிபட்டுப் போய்விடும்; அவனுடைய தேவை வசனமாய் இருக்கும்போது, அது அவனை கோடைகால வறண்ட நீரூற்றைப்போல முற்றிலுமாக ஏமாற்றுகிறது. அது தன்னை உடையோனை மண்மேடுகளில் மோதி சிதறுண்டவனைப்போல நிர்க்கதியாகவும், திருச்சபைக்கு உண்டாகும் அபகீர்த்தியாயும், அவிசுவாசிக்கு பழிச்சொல்லாயும், தனக்குத்தானே கேடுண்டாக்குகிறவனாயும் விட்டுவிடுகிறது. இதில் மெய்யான கருத்து என்னவெனில் விலை குறைவானது எதுவோ அதன் மதிப்பும் குறைவானதே! நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு உதவாத மதமும், எந்தவொரு ஆன்மீக காரியங்களையும் உள்ளடக்காத மதத்தின் பிரசங்கங்களைக் கேட்பதும் இறுதியில் பிரயோஜனமற்ற காரியமென்று மெய்ப்பிக்கப்படும்.*

*இத்துடன் மலைப்பிரசங்கம் முடிவுக்கு வருகிறது. இப்படிப்பட்ட பிரசங்கம் அதற்குபின்பு இதுவரை பிரசங்கிக்கப்படவில்லை. நம்முடைய இருதயங்களில் இது நீங்காத செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளும்படி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். இது நமக்கும், சத்தியத்தைக் கேட்கிற யாவருக்கும் விசேஷமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஆன்மீகத் தேடலுக்கான பாடங்களைக் கேட்ட நாமே இதற்குக் கடனாளிகளாய் இருக்கிறோம். இப்பாடங்கள் மிகச் சாதாரணமானவை அன்று. “நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்” என்று இயேசுகிறிஸ்து கூறியிருக்கிறார் (யோவான் 12:48).*

**“வேதத்தை நிராகரிப்பதாலேயே நம்மில் அநேகர் தாங்கள் சந்திக்கின்ற முதல் போலிப் போதகருக்கு இறையாகிவிட நேரிடுகிறது. “நாங்கள் பெரிதான கல்வி அறிவற்றவர்கள், ஆகவே, பெரிய ஞானமுள்ளவர்களைப் போல நாம் நடிக்கக் கூடாது” என்று போலித் தாழ்மையுடன் நடப்பதன் மூலம் அவர்கள் நம்மை நம்பச் செய்வார்கள். உண்மையில், அவர்கள் வேதத்தை வாசிக்க சோம்பேறித்தனமுள்ளவர்களாயும், சுயமாக சிந்திக்க விரும்பாதவர்களாயும், தாழ்மை என்னும் அங்கியின்கீழ் மறைந்திருக்கும் ஆத்மீக சோம்பேறிகளுமே யல்லாமல் வேறெவருமில்லை.”**

**- ஜோன் சார்ள்ஸ் ரைல் -**

“நாம் பயபக்தியோடு பின்பற்றுகிற கிறிஸ்தவம், பிரபல்யமானது அல்ல என்பதால் நாம் மனமுறிவடைய வேண்டிய அவசியமில்லை. இதை ஒரு சிலர் நம்மோடிணைந்து அங்கீகரிப்பார்கள். “ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாய் இருக்கிறது” என்று இப்பகுதியில் சொல்லப்பட்டுள்ள நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை நாம் நினைவுகூர வேண்டும். “மனந்திரும்புதல், கிறிஸ்துவிலுள்ள விசுவாசம், பரிசுத்த ஜீவியம்”, இவையெல்லாம் ஒருபோதும் பார்வைக்கு நாகரீகமானவை யாயிருக்காது. மெய்யான கிறிஸ்துவின் மந்தை எப்போதுமே இந்த உலகில் சிறிய கூட்டமாய்த்தான் இருக்கும். தனிப்பட்டவர்கள், நூதனமானவர்கள், கொள்கை வைராக்கியம் கொண்டவர்கள், குறுகிய மனப்பான்மை உடையவர்கள் என்று மற்றவர்கள் நம்மைக் குறைகாணுவதால் நாம் மனம் தளர்ந்துவிடக்கூடாது. இது “இடுக்க மும், நெருக்கமுமான வாசல்” நிச்சயமாகவே வெகு திரளான ஜனங்க ளோடு “நித்திய அழிவிற்குள்” பிரவேசிப்பதைப் பார்க்கிலும் வெகு சிலரோடு நாம் “நித்திய ஜீவனுக்குள்” பிரவேசிப்பதே மேலானது.”

---

“நாம் கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, நம்முடைய உன்னதமான சலுகைகளுக்காக திடநம்பிக்கையோடு பெருமிதம் கொள்ளலாம்; அறிவுபூர்வமான ஞானத்தைக் கொண் டிருந்து, நம்முடைய சொந்த நிலையிலே சுய திருப்தி உள்ளவர் களாய்க் காணப்படலாம். நாம் பிரசங்கிகளாகவோ பிறருக்கு போதிக்கின்ற ஆசிரியர்களாகவோ, திருச்சபையோடு இணைந்த “அநேக உன்னதமான பணிகளைச்” செய்பவர்களாகவோகூட இருக்கலாம். இருப்பினும், நாம் எந்நேரமும் பரத்திலிருக்கிற நம்முடைய பிதாவின் சித்தத்தின்படியே எல்லாக் காரியங்களையும் செய்கிறோமா? நாம் மெய்யாகவே மனந்திரும்பி, உண்மையாகவே கிறிஸ்துவை விசுவாசித்து, பரிசுத்தமும் தாழ்மையுமான வாழ்க்கை வாழ்கின்றோமா? நாம் எல்லா கிருபையான சலுகைகளையும், ஊழியத்தையும் கொண்டிருந்தபோதும், மேற்சொன்ன வாழ்க்கையை வாழாவிட்டால், நிச்சயமாகவே இறுதியில் பரலோகத்தை தவறவிட்டு என்றென்றும் நித்திய நரகத்தில் இருப்போம். “நான் உங்களை அறியேன்; என்னை விட்டு அகன்று போங்கள்” என்ற பயங்கரமான கர்த்தருடைய வார்த்தைகளை நாம் கேட்க நேரிடும்.”

- ஜோன் சார்ள்ஸ் ரைல் -

# புரட்சிகரமான புதிய உடன்படிக்கை

[பழைய ஏற்பாட்டு இறையியலை நம்மினத்தில் அதிகம் பேர் சரியாக அறிந்து வைத்திருக்க வில்லை. அத்தோடு, பழைய ஏற்பாடு நம்மினத்தில் பெரிதும் அலட்சியப்படுத்தப்பட்டு கதை சொல்லுவதற்காகவும், அர்த்தமில்லாத வாக்குத்தத்த வசனங்களை அளிப்பதற்காகவும் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையில் உள்ள தொடர்பு பற்றி அநேகருக்குத் தெரியாமலிருக்கிறது. பழைய ஏற்பாட்டின் உடன்படிக்கை பற்றி சரிவர அறிந்து வைத்திருக்கிறவர்களும் மிகச்சிலரே. பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை புதிய உடன்படிக்கைக்கு அடித்தளமாக இருக்கிறது. புதிய உடன்படிக்கை முதல் உடன்படிக்கையை விட புரட்சிகரமான விதத்தில் புதிய அம்சங்களை உள்ளடக்கியிருக்கிறது. பழைய உடன்படிக்கைக்கும், புதிய உடன்படிக்கைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டையும், புதிய உடன்படிக்கையின் புரட்சிகரமான அம்சங்களையும் சரியாகப் புரிந்துகொள்ளுவது அவசியம். டிஸ்பென்சேஷனலிசப் **(Dispensationalism)** போதனைகளைப் பின்பற்றுகிறவர்களும், ஆர்மீனியனிசப் **(Arminianism)** போதனைகளைப் பின்பற்றுகிறவர்களும், அன்டி நோமியனிசப் **(Antinomianism)** போதனைகளைப் பின்பற்றுகிறவர்களும், புதிய உடன் படிக்கை இறையியல் **(New Covenant Theology or Doctrinal Antinomianism)** போதனைகளைப் பின்பற்றுகிறவர்களும், குழந்தை ஞானஸ்நானத்தைப் **(Paedobaptist)** பின்பற்றுகிறவர்களும் இந்த விஷயத்தில் சீர்திருத்த பாப்திஸ்து போதனைகளோடு பெரிதும் முரண்படுகிறார்கள். எபிரெயர் 8ம் அதிகாரம் புதிய உடன்படிக்கை புத்தம் புதிய அம்சங்களைக் கொண்டிருப்பதாகவும், பழமை வாய்ந்த பழைய உடன்படிக்கை உருவழிந்து போகிறதாகவும் ஆணித்தரமாக விளக்குகிறது. இந்தப் போதனையின் பொருளை சரியாக அறிந்துகொள்வது அவசியம். அநாவசியத்திற்கும் பழைய உடன்படிக்கையை அடியோடு உதறித்தள்ளிவிடாமல் அது எந்தவகையில் 'உருவழிந்து' போகிறதாக இருக்கிறதென்பதையும், கிறிஸ்துவை நாயகனாகக் கொண்டுள்ள புதிய உடன்படிக்கை எந்தவிதத்தில் 'புதிதாக' இருக்கிற தென்பதையும் விளக்கமாகத் தெரிந்து வைத்திருப்பது அவசியம். புதிய உடன்படிக்கை பற்றிய இந்த இறையியல் விளக்கம் வேதத்தைப் பின்பற்றி சரியான முறையில் கர்த்தரை ஆராதித்து, அவருக்குப் பணிந்து வாழவும், சுவிசேஷப் பணியைச் செய்யவும், திருச்சபையை நடத்திச் செல்லவும் நமக்கு மிகவும் அவசியமானது.

நான் பணிபுரியும் சபையில் எபிரெயர் 8ம் அதிகாரத்திலிருந்து நான் ஒருமுறை பிரசங்க மளித்த போது அந்த அதிகாரத்தின் புதிய உடன்படிக்கை பற்றிய வார்த்தைகள் என் இருதயத்தில் சம்மட்டியால் அடித்ததுபோல் பதிந்து அவற்றைப் பற்றி மேலும் சிந்திக்கச் செய்தன. புதிய உடன்படிக்கையின் 'புதிய', புரட்சிகரமான அம்சங்கள் யாவை என்று சிந்தித்து ஆராய ஆரம்பித்தேன். இந்த விஷயத்தைப் பற்றி கடந்த முப்பது ஆண்டு காலப்பகுதியில் சீர்திருத்த பாப்திஸ்து இறையியல் வல்லுனர்கள் நல்ல பயனுள்ள வேத ஆய்வில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆய்வுகள் என்னை மேலும் சிந்திக்க வைத்து இந்தத் தொடரை எழுதத் தூண்டின. இது சீர்திருத்த பாப்திஸ்து போதனைகளின்

சிறப்பை உங்களுக்குப் புரியவைக்குமானால் அதுவே இந்தத் தொடருக்குக் கிடைத்த பலனாக இருக்கும்.

சபை வரலாற்றில் உடன்படிக்கை **(Covenant)** பற்றிய போதனைகள் சபைப்பிரிவுகளால் எந்தளவுக்குப் பின்பற்றப்பட்டன என்பதை சுருக்கமாக இந்த அறிமுகத்தில் விளக்க விரும்புகிறேன். கர்த்தரின் உடன்படிக்கையைப் பற்றி நமக்கு முன்னோடிகளாக இருந்து அதிகம் எழுதியுள்ளவர்கள் பிரெஸ்பிடீரியன் இறையியல் அறிஞர்களே. உடன்படிக்கை பற்றிய போதனைகளின் சில அம்சங்களில் சீர்திருத்த பாப்திஸ்துகள் அவர்களோடு பொருந்திப் போகிறார்கள். அதன் பல அம்சங்களைப் பொறுத்தவரையில் நாம் அவர்களோடு இந்த விஷயத்தில் வேறுபடுகிறோம். இருந்தபோதும், பிரெஸ்பிடீரியன் இறையியலறிஞர்கள் உடன்படிக்கை பற்றிய போதனைக்கு அதிக முக்கியத்துவமளிப்பதற்கு முக்கியமான காரண மொன்றுண்டு. பழைய உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அவர்கள் புதிய ஏற்பாட்டில் எதையும் விளக்க முயல்வதே அந்தக் காரணம். பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அவர்கள் புதிய ஏற்பாட்டு திருச்சபையில் அங்கத்தவர்களை இணைக்கும் வழக்கத்தை, அதாவது கிறிஸ்தவர்களின் குழந்தைகளுக்கு ஞானஸ்நானத்தைக் கொடுத்து சபைக்குள் இணைத்துக்கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள். இதை நியாயப்படுத்த பழைய உடன்படிக்கையை அளவுக்கு மீறி வலியுறுத்துவது அவர்களுக்கு அவசியமாகிறது.

அதேவேளை சகோதரத்துவ **(Brethren)** பிரிவினரும், பொதுவாக பாப்திஸ்து சபைகளும் வரலாற்றில் பரவலாக டிஸ்பென்சேஷனலிசப் போதனைகளைப் பின்பற்றி வந்திருக்கின்றனர். கர்த்தரின் உடன்படிக்கை பற்றி சீர்திருத்தப் போதனைகள் தரும் விளக்கத்துக்கு எதிர்மாறான கருத்துக்களை டிஸ்பென்சேஷனலிசம் கொண்டுள்ளது. இதனால் பாப்திஸ்து சபைகளைப் பிரெஸ்பிடீரியன் சபைப் பிரிவினர் எப்போதுமே சந்தேகக் கண்களோடுதான் பார்த்து வந்திருக்கின்றனர். டிஸ்பென்சேஷனலிசம் மிகவும் ஆபத்தான போதனை. அதனால், பிரெஸ்பிடீரியன் பிரிவினரின் சந்தேகப் பார்வைக்கு நியாயமிருக்கிறது. டிஸ்பென் சேஷனலிசத்தைப் பின்பற்றும் பிரெஸ்பிடீரியன் பிரிவினரை நாம் அதிகம் காணமுடியாது. ஏனெனில், உடன்படிக்கை பற்றி அவர்கள் கொண்டிருக்கும் போதனை அந்தளவுக்கு டிஸ்பென்சேஷலிசத்துக்கு எதிரானது. இறுதிக் கால நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் பெரும்பாலான பாப்திஸ்துகள் பிரிமிலேனியல் போதனைகளைப் பின்பற்றி வந்திருப்பதால், அதோடு பெரும்பாலும் இணைந்து போய்க் கொண்டிருக்கும் டிஸ்பென்சேஷனலிச உடன்படிக்கை பற்றிய போதனைகளையும் அவர்கள் இருகரம் நீட்டிப் பெற்றுக்கொண்டார்கள். இதனால் பாப்திஸ்து சபைப்பிரிவினரின் உடன்படிக்கை பற்றிய போதனைகள் பெரும்பாலும் டிஸ்பென்செஷனலிசப் போதனைகளை ஒத்தே இருந்திருக்கின்றன.

திருச்சபை வரலாற்றில் 1771-1892 வரையுள்ள காலப்பகுதிகளில் வாழ்ந்த பார்டிகுளர் பாப்திஸ்துகள் **(Particular Baptist)** அல்லது கல்வினிச பாப்திஸ்துகள் **(Calvinistic Baptist)** உடன்படிக்கை பற்றிய டிஸ்பென்சேஷனலிசத்துக்கு முரணான சீர்திருத்தப் போதனைகளைப் பின்பற்றியதோடு குழந்தை ஞானஸ்நானத்திறகு எதிராக விசுவாசிகளுக்கான ஞாஸ்நானத்தை வலியுறுத்த உடன்படிக்கை இறையியல் பற்றி அதிகம் விளக்கியிருக்கின்றனர். 1644/1646ல் அவர்கள் எழுதி வெளியிட்ட முதல் இலண்டன் விசுவாச அறிக்கையில் அதை சுருக்கமாக அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு வெளிவந்த 1677/89 இரண்டாம் இலண்டன் விசுவாச அறிக்கையில் பிரெஸ்பிடீரியன்கள் உடன்படிக்கை பற்றி அளிக்கும் விளக்கத்துக்கு மாறான உடன்படிக்கை பற்றிய பாப்திஸ்து இறையியல் விளக்கத்தை

அளித்திருக்கிறார்கள். உடன்படிக்கை இறையியல் பற்றி பார்டிகுளர் பாப்திஸ்துகள் தெளிவான விளக்கத்தை இக்காலத்தில் கொண்டிருந்திருக்கிறார்கள். இக்காலப்பகுதியில் இவர்களும் ஆர்மீனியனிசத்திற்கெதிராகவும், அன்டிநோமியனிசத்திற்கெதிராகவும், அதன் பிரிவான இறையியல் ரீதியிலான அன்டிநோமியனிசத்திற்கெதிராகவும், ஹைபர்-கல்வினிசத்திற்கெதி ராகவும் **(Hyper-Calvinism)** போராட வேண்டியிருந்தது.

அவர்களுக்குப் பிறகு 19ம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும் சரி, அமெரிக்காவிலும் சரி, பாப்திஸ்துகள் மத்தியில் சீர்திருத்த, கல்வினிச செல்வாக்கு பெருமளவுக்குக் குறைந்து ஆர்மீனியனிச, டிஸ்பென்சேஷனலிச, அன்டிநோமியனிசப் போதனைகளுக்கு பாப்திஸ்து சபைகள் இரையாகின. 1970 காலப்பகுதிகளில் ஆரம்பித்த சீர்திருத்த பாப்திஸ்து திருச் சபைகள் பார்டிகுளர் பாப்திஸ்து கோட்பாடுகளைப் பின்பற்றி 1689 விசுவாச அறிக்கையின்படி சபைகளை அமைக்க ஆரம்பித்தபோது ஆர்மீனியனிச, டிஸ்பென்சேஷனலிச, அன்டி நோமியனிசக் கோட்பாடுகளில் இருந்து தங்களை வேறுபடுத்திக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏனெனில், தொடர்ந்தும் பெரும்பான்மையான பாப்திஸ்து சபைகள் ஆர்மீனிய னிசத்தையும், டிஸ்பென்சேஷனலிசத்தையும், அன்டிநோமியனிசத்தையுமே பின்பற்றி வந்திருந்தன. இககாலப்பகுதியில் இரட்சிப்பைப் பொறுத்தவரையில் கல்வினிசப் போதனை களைப் பின்பற்றி வந்திருந்த பாப்திஸ்து சபைகள்கூட டிஸ்பென்சேஷனலிசத்தையும், அன்டிநோமியனிசத்தையும் விடாமல் பின்பற்றி வந்திருந்தன. 1689 விசுவாச அறிக்கையின் போதனையின்படி டிஸ்பென்சேஷனலிசத்துக்கும், அன்டிநோமியனிசத்துக்கும் சீர்திருத்த பாப்திஸ்து இறையியல் கோட்பாட்டில் எந்த இடமும் இருக்க முடியாது. இதன் காரணமாக சீர்திருத்த பாப்திஸ்து திருச்சபைகள், உடன்படிக்கை பற்றிய சீர்திருத்தப் போதனைகளை விளக்கிப் போதித்து ஆர்மீனியனிசத்தையும், டிஸ்பென்சேஷனலிசத்தையும், அன்டிநோமிய னிசத்தையும் பின்பற்றும் பாப்திஸ்து சபைப்பிரிவுகளில் இருந்து தங்களை வேறுபடுத்தி சீர்திருத்த பாப்திஸ்து சபைகளாக அடையாளப்படுத்திக் காட்ட வேண்டிய அவசியம் இருந்தது.

அதேவேளை, சீர்திருத்த பாப்திஸ்துகள் சீர்திருத்த பிரெஸ்பிடீரியன்களோடு டிஸ்பென் சேஷனலிசத்துக்கு எதிராக கிருபையின் உடன்படிக்கை பற்றிய போதனைகளில் ஒன்று பட்டிருந்தபோதும் பிரெஸ்பிடீரியன் பிரிவினரின் உடன்படிக்கை பற்றிய போதனைகளை முழுவதுமாக ஏற்றுக்கொள்ளவில்லை. பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்கும் இடையில் இருந்த வேறுபாட்டையும், புதிய உடன்படிக்கையின் புரட்சிகரமான புதிய அம்சங்களையும் அவர்கள் மேலும் இறையியல்பூர்வமாக ஆராய்ந்து விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கடந்த முப்பது ஆண்டுகாலமாக இந்த அவசியமான ஆய்வில் சீர்திருத்த பாப்திஸ்து இறையியலறிஞர்கள் ஈடுபட்டு வந்திருப்பது பாராட்ட வேண்டியதே. நம்மினத்தில் வளர்ந்து வரும் சீர்திருத்த பாப்திஸ்து சபைகள் இன்று ஆர்மீனியனிசம், டிஸ்பென்சேஷ னலிசம், அன்டிநோமியனிசத்துக்கு எதிராகப் போராட வேண்டியிருப்பது மட்டுமல்லாமல் தாங்கள் பெருமளவுக்கு ஒத்துப் போகும் சகோதரர்களான சீர்திருத்த பிரெஸ்பிடீரியன்களின் உடன்படிக்கை பற்றிய வேதத்துக்கு முரணான போதனைகளை சகோதர மனப்பான்மையோடு திருத்திப் போதிக்க வேண்டிய கட்டாயமும் இருக்கின்றது. இது இரட்சிப்பு, ஞானஸ்நானம், திருச்சபை அமைப்பு பற்றிய சீர்திருத்த பாப்திஸ்து கோட்பாடுகளின் தெளிவான விளக்கங் களையும், மகிமையையையும் சீர்திருத்த பாப்திஸ்து கிறிஸ்தவ சந்ததி அறிந்து உணர்ந்து கிறிஸ்துவில் வளர அவசியமாக உள்ளது. நாம் விசுவாசிக்கின்ற காரியங்களில் நமக்கு விளக்கமும் உறுதியும் இல்லாவிட்டால் நம்முடைய விசுவாசமும், நடைமுறையும் பலவீனமான தாக மட்டுமே இருக்க முடியும். அந்த ஆபத்திற்கு நாம் இடமளிக்கக் கூடாது. இந்த அடிப்படையிலேயே இந்தத் தொடராக்கத்தில் புதிய உடன்படிக்கையின் புரட்சிகரமான

அம்சங்களை சீர்திருத்த பாப்திஸ்து இறையியல் கண்ணோட்ட அடிப்படையில் கர்த்தரின் வேதத்தை மட்டுமே அத்திவாரமாகக் கொண்டு விளக்க முனைந்திருக்கிறேன். - ஆசிரியர்]

*எரேமியா 31:31–34ல் கர்த்தர் புதிய உடன்படிக்கையைப் பற்றி பின்வருமாறு விளக்குகிறார்:*

> *“இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பததோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.” (எரேமியா 31:31–34).*

*எபிரெயர் 8ம் அதிகாரத்தில் எபிரெயரின் ஆசிரியர் எரேமியா 31:31–34 வசனங்களைக் கோடிட்டுக் காட்டி (8–12), பழைய உடன்படிக்கையைப் பற்றி பின்வருமாறு ஆணித்தரமாக எழுதியிருக்கிறார்:*

> *“அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேடவேண்டுவதில்லையே.” (எபிரெயர் 8:7).*

> *“புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது.” (எபிரெயர் 8:13).*

*எபிரெயர் 8, பழைய உடன்படிக்கையைவிட புதிய உடன்படிக்கை மேலானது என்றும், பழைய உடன்படிக்கை அவசியமற்றதாகி, இல்லாமல் போய் புதிய உடன்படிக்கைக்கு வழிவிட்டிருக்கிறது என்றும், பழைய உடன்படிக்கையைவிடப் புதிய உடன்படிக்கை மேலான வாக்குத்தத்தங்களைக் கொண்டிருப்பதாகவும் ஆணித்தரமாக விளக்குகிறது. இதற்கு ஆதாரமாக எரேமியா 31:31–34 வரையுள்ள வசனங்களையும் எபிரெயர் நிருபத்தை எழுதியவர் சுட்டிக்காட்டுகிறார். இந்த அதிகாரத்தையும், வேத வாக்கியங்களையும் மேலெழுந்தவாரியாக வாசிக்கிறவர்கள், இந்தளவுக்கு புதிய*

உடன்படிக்கை சிறப்பானதாக இருக்குமானால் பழைய உடன்படிக்கைக்கு இனி எந்த அவசியமும் இல்லை; அது அநாவசியமானது என்ற முடிவுக்கு வருவதைத் தவிர்க்க முடியாது. உண்மையில் பலர் அந்த முறையில் எபிரெயரின் விளக்கத்தைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். பழைய ஏற்பாடு இஸ்ரவேலருக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருப்பதால் இஸ்ரவேலுக்கும் திருச்சபைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அதனால் புதிய ஏற்பாட்டு சுவிசேஷக் காலத்தில் பழைய ஏற்பாட்டுப் பத்துக் கட்டளைகளுக்கு எந்த அவசியமும் இல்லை என்று போதிப்பவர்களும் (Dispensationalism), கிறிஸ்தவர்களுக்கு இன்றைக்கு எந்தவிதத்திலும் பத்துக் கட்டளைகள் தேவையற்றது என்று கூறுகிறவர்களும் (Antinomianism), கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாக வாழ்வது அவசியமாக இருந்தபோதும், பத்துக் கட்டளைகளை ஒழுக்கவிதிகளாகப் பாவித்து (Ten Commandments as a rule of life) அவற்றின்படி கிறிஸ்தவ வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்படி வேதம் போதிக்கவில்லை என்று சாதிக்கிறவர்களும் (New Covenant Theology or Doctrinal Antinomianism. Also described as Moderate Antinomianism) எபிரெயரை எழுதியவரின் போதனைகளை இந்தவித மாகத்தான் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

அதேவேளை, பழைய உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை அளவுக்கு மீறி அதிகப்படுத்தியும், புதிய உடன்படிக்கையின் முக்கியத்துவத்தைக் குறைத்தும், பழைய உடன்படிக்கையின் அடிப்படையிலேயே புதிய உடன் படிக்கை காலத்தில் ஒருவர் திருச்சபையின் அங்கத்தவராக முடியும் என்று கூறி கிறிஸ்தவர்களின் குழந்தைகளுக்கு ஞானஸ்நானமளித்து சபை அங்கத்த வராக்கும் வழக்கத்தை பிரெஸ்பிடீரியன் சபைப்பிரிவினர் (Presbyterian) பின்பற்றி வருகிறார்கள். புதிய உடன்படிக்கையின் போதனையின்படி இது முழுத்தவறான வழக்கமாகும்.

புதிய உடன்படிக்கை மேலானது, சிறப்பானது, மேலான வாக்குத் தத்தங்களைக் கொண்டிருக்கிறது என்ற எபிரெயரை எழுதியவரின் வாக்கை நாம் நிச்சயம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அழுத்தமான அவருடைய வார்த்தைகள் உண்மையானதே. ஆனால், புதிய உடன்படிக்கை எந்தளவுக்கு சிறப்பானது, மேலானது என்பதை விளக்குவதற்கு முன்னால், கர்த்தரே ஏற்படுத்தித் தந்த பழைய உடன்படிக்கையைப் பற்றிய தவறான எந்த முடிவுக்கும் வந்துவிடாமல் இருப்பதற்காக அது எந்தவிதத்தில் புதிய உடன்படிக்கையைவிடத் தாழ்ந்தது என்பதை விளக்குவது அவசியமாகிறது.

### எபிரெயர் நூலின் போதனை

பழைய உடன்படிக்கை (Old Covenant) என்ற பதங்களின் மூலம் எபிரெ யரின் ஆசிரியர் எதைக் குறிப்பிடுகிறார் என்பதை நாம் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். இதற்கு எபிரெயர் நிருபத்தின் போதனையை சிறிது விளக்குவது அவசியமாகிறது. எபிரெயர் நிருபத்தின் வாசகர்களில் பெரும்பாலானவர்கள் யூதக் கிறிஸ்தவர்கள் என்பதை நூலை வாசிக்கிற எவரும் புரிந்து கொள்ளலாம். அந்தளவுக்கு பழைய ஏற்பாட்டு வாடையை

*நாம் எபிரெயர் நிருபத்தில் காண்கிறோம். அதற்குக் காரணம் யூத மதவாதிகள் யூதக் கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் நுழைந்து கிறிஸ்துவை யூதர்கள் விசுவாசித் தாலும் பழைய ஏற்பாட்டு சடங்காச்சாரங்களையும், வழிபாட்டு முறைகளை யும் உள்ளது உள்ளபடியே பின்பற்றுவது அவசியம் என்று வலியுறுத்தி கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குழப்பி மறுபடியும் அடிமைத்தனத்திற்குள் யூதக் கிறிஸ்தவர்களை நுழைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். இதனால் பல யூதக் கிறிஸ்தவர்கள் பாதிக்கப்பட்டு சபைக்கு வருவதையும், சக கிறிஸ்தவர்களோடு ஐக்கியத்தில் வருவதையும் தவிர்த்து வந்தார்கள். மறுபடியும் அவர்கள் தாம் விட்டுவிட்டு வந்த யூத மத வழக்கங்களைத் தொடரும் ஆபத்திருந்தது. இந்த ஆபத்தில் இருந்து யூதக் கிறிஸ்தவர்களையும், சபையையும் காக்கும் முயற்சியாகவே எபிரெயர் நிருபம் எழுதப்பட்டது.*

*யூத மதவாதிகளினால் ஏற்பட்டிருந்த இந்தப் பிரச்சனையைத் தீர்க்கவே, எபிரெயரின் ஆசிரியர் அதன் முதல் அதிகாரத்தில் இருந்து புதிய உடன் படிக்கையின் நாயகனும், கர்த்தரின் ஒரே குமாரனுமாகிய இயேசு கிறிஸ்து எந்தவிதத்தில் மேலானவர் என்பதை தேவ தூதர்களோடும் (1-2 அதிகாரங் கள்), மோசேயோடும் (3ம் அதிகாரம்), பிரதான ஆசாரியரோடும் (5-7ம் அதிகாரங்கள்) ஒப்பிட்டு விளக்குகிறார். அதுமட்டுமல்லாமல் பழைய ஏற்பாட்டு பலிகளினாலும், ஆலய வழிபாட்டு முறைகளினாலும், சடங்காச் சாரங்களினாலும் தரமுடியாத நித்திய மீட்பை மெல்கிசேதேக்குவின் வழியில் வந்த பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு வெள்ளாட்டுக் கடா, இளங்காளை இவைகளினுடைய இரத்தத்தினால் அல்லாமல் (லேவிய ராகமத்தில் விளக்கப்பட்டிருக்கும் பழைய ஏற்பாட்டுப் பலிகளின் மூலமாக அல்லாமல்) இயேசு கிறிஸ்து தன்னுடைய சொந்த இரத்தத்தினால் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து சம்பாதித்துத் தந்தார் என்று ஆணித்தரமாக விளக்குகிறார் (9:11-12). இதன் மூலம் கிறிஸ்துவின் மூலம் உருவாகியிருக்கும் புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையை விட உயர்வானது என்பது எபிரெயரின் ஆசிரியர் விளக்கும் உண்மை. இதுவே எபிரெயர் நூல் முழுவதிலும் விளக்கப்படுகிறது.*

### பழைய உடன்படிக்கை அவசியமற்றதா?

*அப்படியானால் பழைய உடன்படிக்கையை நாம் முற்றாக நிராகரித்து விட வேண்டுமா? என்ற நியாயமான கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாது. அதற்கான ஆணித்தரமான பதில் 'இல்லை' என்பதுதான். ஏன்? என்பதை இங்கு விளக்கத்தான் வேண்டும். எபிரெயரை எழுதியவர் 'பழைய உடன்படிக்கை' என்பதன் மூலம் எதை விளக்கியிருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளும்போது நமக்கு நியாயமான பதில் கிடைத்துவிடுகிறது. முதலில் 'உடன்படிக்கை' என்ற பதம் வேதத்தில் 280 தடவைகள் பழைய ஏற்பாட்டிலும் 30 தடவைகள் புதிய ஏற்பாட்டிலும் பயன்படுத்தப்பட் டிருக்கிறது. இது வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மிக முக்கியமான தொரு பதமாகும். வரையறுக்கப்பட்ட அல்லது சட்டரீதியாக ஏற்படுத்தப் பட்ட ஓர் உறவு என்ற பொதுவான அர்த்தத்தை இந்தப் பதம் வேதத்தில் கொண்டிருக்கிறது.*

கர்த்தர் ஆபிரகாமோடு (ஆதி. 17:1–8) ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். அந்த உடன்படிக்கை ஆபிரகாமோடும் அவருடைய சந்ததியோடும் ஏற்படுத்தப்பட்டது. இங்கே இந்த 'சந்ததி' சரீரப்பிரகாரமாக வந்த ஆபிரகாமின் சந்ததியினரைக் குறிக்கிறது. அதாவது, இந்த உடன்படிக்கையின் பலன்களை ஆபிரகாமும் அவருடைய வழித்தோன்றல்களும் அனுபவிப்பார்கள் என்று கர்த்தர் சொல்லியிருந்தார். இந்த உடன்படிக்கையின் அடையாளமாக ஆபிரகாமின் குடும்பத்தில் பிறந்த ஒவ்வொரு ஆண் குழந்தைக்கும் எட்டு வயதில் விருத்தசேதனம் செய்யப்பட்டது (ஆதி. 17:9–12). இந்த முறையிலேயே ஆபிரகாமின் சரீரப்பிரகாரமான வழித்தோன்றல்கள் இவ்வுடன்படிக்கையின் பலன்களை அனுபவித்தார்கள்.

கர்த்தரின் உடன்படிக்கையின்படி ஆரம்பிக்கப்பட்ட இந்த வழக்கம் பழைய ஏற்பாட்டுக் காலம் முழுவதும் பின்பற்றப்பட்டது. இந்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயே கர்த்தர் நோவாவுடனும் பின்பு மோசேயுடனும் உடன்படிக்கைகளை ஏற்படுத்தினார். இந்த உடன்படிக்கையின்படியே இஸ்ரவேல் நாடு உருவாகி கர்த்தரின் நேரடி ஆட்சியின் கீழிருந்தது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அந்த நாடு தன்வழி நடக்க வேண்டுமென்பதற்காக மோசேயின் மூலமாக நியாயப்பிரமாணங்களை அதற்கு அளித்தார். அதை மீறாமல் கர்த்தருடைய வழிகளின்படி நடக்க வேண்டிய கடமை இஸ்ரவேலுக்கிருந்தது.

கர்த்தர் பின்பு தாவீதோடும் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். இஸ்ரவேலோடு தான் ஏற்படுத்திய உடன்படிக்கையையே எசேக்கியலின் மூலமாக எசேக்கியல் 16:8ல், "நான் உன் அருகே கடந்துபோனபோது, உன்னைப் பார்த்தேன்; இதோ உன் காலம் பருவகாலமாயிருந்தது; அப்பொழுது என் வஸ்திரத்தை உன்மேல் விரித்து, உன் நிர்வாணத்தை மூடி, உனக்கு ஆணையிட்டுக் கொடுத்து, உன்னோடு உடன்படிக்கை பண்ணினேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; இவ்விதமாய் நீ என்னுடையவளானாய்" என்று கர்த்தர் விளக்கியிருப்பதை வாசிக்கிறோம். இறையாண்மையுள்ள கர்த்தர் தன்னுடைய அநாதிகாலத் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ளுவதற்காக தானே முன்வந்து இறையாண்மையுடன் ஓர் உடன்படிக்கையை இஸ்ரவேலுடன் ஏற்படுத்திக் கொண்டார். 'உடன்படிக்கை' என்ற பதம் இத்தகைய சட்டரீதியான ஓர் உறவு என்ற அழுத்தமான அர்த்தத்துடன் திருமணத்தைக் குறித்தும் வேதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மல்கியா 2:14 "உன் தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு நீ துரோகம் பண்ணினாயே" என்று திருமணத்தைக் குறித்து விளக்குகிறது.

ஆபிரகாமோடு கர்த்தர் ஏற்படுத்திய இந்த உடன்படிக்கை நாம் மேலே கவனித்தவிதத்தில் ஆபிரகாமின் சரீரப்பிரகாரமான வழித்தோன்றல்களுக்கு மட்டும் உரியதாக இல்லாமல் ஆவிக்குரிய விதத்தில் இன்னும் அநேகருக்கும் பலனளிக்கும் இன்னொரு பக்கத்தையும் தன்னில் கொண்டிருந்தது. இந்த உலகத்தில் அது இஸ்ரவேலை நாடாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு கர்த்தர் அந்நாட்டோடு பழைய ஏற்பாட்டுக் கால முழுவதும்

இருந்தபோதும், அதன் ஆவிக்குரிய பலன்கள் பழைய ஏற்பாட்டுக் காலத்தைக் கடந்து இஸ்ரவேலுக்கு புறத்தில் இருந்தவர்களுக்கும் சொந்த மானதாக இருந்தது. இந்த இரண்டு பக்கத்தையும் அந்த முதல் உடன் படிக்கை தன்னில் கொண்டிருந்தது. இதற்கு ஆதாரமாக கலாத்தியர் 3:16ல் பவுல் கூறுவதைக் கவனியுங்கள்: “ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே.” இதன் மூலம் ஆபிரகாமின் வழியில் இஸ்ரவேலுக்கு சொந்தமான பழைய (முதல்) உடன்படிக்கை மெய் விசுவாசியாக இருந்த ஆபிரகாமின் சந்ததியில் பிறந்த கிறிஸ்துவின் மூலமாக ஆவிக்குரியதாக இஸ்ரவேலுக்கு புறத்தில் இருந்தவர்களுக்கும் சொந்த மானது.

‘பழைய உடன்படிக்கை’ என்ற பதம் புதிய ஏற்பாட்டில் ஒரேயொரு இடத்தில் 2 கொரி. 3:14ல் மட்டுமே காணப்படுகிறது. இங்கே அது ‘பழைய ஏற்பாடு’ என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் அது பழைய ஏற்பாட்டு நூல்கள் முழுவதையும் குறிக்கிறது. உண்மையில் ‘ஏற்பாடு’ (Testament) என்ற வார்த்தை கிரேக்க மொழியில் diatheke என்றிருக்கிறது. இதற்கு ‘உடன்படிக்கை’ (Covenant) என்று அர்த்தம். இதன்படி பழைய ஏற்பாட்டைப் ‘பழைய உடன்படிக்கை’ என்றும், புதிய ஏற்பாட்டைப் ‘புதிய உடன்படிக்கை’ என்றும் அழைக்கலாம். நியாயமான முறையில் முழுப் பழைய ஏற்பாட்டையும் நாம் பழைய உடன்படிக்கை என்று அழைப்போமானால் நிச்சயமாக பழைய ஏற்பாடு முழுவதும் இன்றைக்குத் தேவையற்றது என்று எபிரெயரின் ஆசிரியர் ஒருபோதும் எபிரெயர் 8ல் கூறியிருக்க மாட்டார். பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் சேர்ந்தே கர்த்தரின் வேதமாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் ‘பழைய உடன்படிக்கை’ எந்தவிதத்தில் ‘பிழையுள்ளதாக இருக்கிறது’ (எபிரெ. 8:7), ‘நாள்பட்டது’ (எபிரெ. 8:13), ‘உருவழிந்து போகிறது’ (எபிரெ. 8:13), என்ற கேள்விக்கான பதிலை நாம் தொடர்ந்து தேடத்தான் வேண்டும்.

### பழைய உடன்படிக்கையின் உருவழிந்த அம்சங்கள்

நாம் மறுபடியும் எரேமியா 31:31–34 வசனங்களை வாசிப்பது அவசியம்.

> “இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பததோடும் புது உடன் படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத் திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர் களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கை யாவது; நான் என் நியாயப் பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள்

*இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர் களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்."*

இந்த வசனங்களின் மூலம் கர்த்தர் இஸ்ரவேலோடு முதல் தடவையாக ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையை இஸ்ரவேலர் அவமாக்கிப் போட்டார்கள் என்றிருப்பதைக் காண்கிறோம். இந்த முதல் உடன்படிக்கையே 'பழைய உடன்படிக்கை' என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பழைய உடன் படிக்கையில் இருந்த ஒரு விசேஷம் என்னவென்றால் விசுவாசத்தோடு இதன்படி நடந்தால் மட்டுமே இஸ்ரவேலர்கள் கர்த்தரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இஸ்ரவேலர்கள் இந்த உடன்படிக்கையை மீறி நடந்துகொண்டார்கள். அதனால்தான் எரேமியா 31, இஸ்ரவேலர்கள் 'அதை அவமாக்கிப் போட்டார்கள்' என்கிறது. இதையே எபிரெயரின் ஆசிரியரும், 'அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலை நிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்' என்று விளக்குகிறார். இஸ்ரவேலர்கள் தங்களுடைய பாவத்தினால் அந்த உடன்படிக்கையின்படி நடந்துகொள்ளும் இருதயத்தைக் கொண்டிருக்க வில்லை; அதன்படி நடந்துகொள்ளவும் அவர்களால் ஒருபோதும் முடிய வில்லை. ஆனால் புதிய உடன்படிக்கை அப்படிப்பட்டதாக இருக்காது என்கிறார் கர்த்தர். இந்தப் புதிய உடன்படிக்கையின் விசேஷித்த தன்மை களை நாம் பின்பு விளக்கமாகப் பார்க்கப்போகிறோம்.

இந்த வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் உடன்படிக்கை எத்தகையது என்பதை எபிரெயர் நூல் நாம் அறிந்துகொள்ள உதவுகிறது. பழைய ஏற்பாட்டை ஆராய்ந்து பார்க்கும்போது அது பற்றிய மேலும் விளக்கங்களை நாம் பெற்றுக்கொள்ள முடிகிறது. பழைய ஏற்பாட்டில் யாத்திராகமம் நூலை வாசிக்கும்போது அங்கே கர்த்தர் மோசேக்கு சீனாய் மலையில் இரண்டு பலகைகளில் தானே கைப்பட பத்துக் கட்டளைகளை எழுதிக் கொடுத்தார் என்று வாசிக்கிறோம்.

*"அப்பொழுது கர்த்தர் மோசையை நோக்கி: நீ மலையின்மேல் என்னிடத்திற்கு ஏறிவந்து, அங்கே இரு; நான் உனக்குக் கற்பலகை களையும், நீ அவர்களுக்கு உபதேசிப்பதற்கு, நான் எழுதின நியாயப் பிரமாணத்தையும் கற்பனைகளையும் கொடுப்பேன் என்றார்." (யாத். 24:12)*

*"சீனாய்மலையில் அவர் மோசேயோடே பேசி முடிந்தபின், தேவனு டைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளை அவனிடத்தில் கொடுத்தார்." (யாத். 31:18).*

*"அந்தப் பலகைகள் தேவனால் செய்யப்பட்டதாயும், அவைகளிலே பதிந்த எழுத்து தேவனால் எழுதப்பட்ட எழுத்துமாயிருந்தது." (யாத். 32:16).*

*"கர்த்தர் மோசேயை நோக்கி: முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்துக்கொள்; நீ உடைத்துப்போட்ட முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை அவைகளில் எழுதுவேன்." (யாத். 34:1).*

*"அக்காலத்திலே கர்த்தர் என்னை நோக்கி: நீ முந்தினவைகளுக்கொத்த இரண்டு கற்பலகைகளை வெட்டிக்கொண்டு, மலையின்மேல் ஏறி, என்னிடத்தில் வா; ஒரு மரப்பெட்டியையும் செய்வாயாக. நீ உடைத்துப்போட்ட முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை நான் அந்தப் பலகைகளில் எழுதுவேன்; நீ அவைகளைப் பெட்டியிலே வைப்பாயாக என்றார்." (உபா. 10:1, 2).*

*"முன்னே சபை கூடிவந்த நாளில் கர்த்தர் மலையில் அக்கினி நடுவிலிருந்து உங்களுக்கு விளம்பின பத்துக் கற்பனைகளையும் அவர் முன் எழுதியிருந்த பிரகாரம் அந்தப் பலகைகளில் எழுதி, அவைகளை என்னிடத்தில் தந்தார்." (உபா. 10:4).*

மேலே பார்த்த வசனங்கள் கர்த்தர் தன் கைப்பட பத்துக் கற்பனைகளையும் எழுதிக் கொடுத்திருப்பதை விளக்குகின்றன. இஸ்ரவேல் மக்கள் கர்த்தர் தந்த நியாயப்பிரமாணங்கள் அனைத்தையும் ஒன்று தவறாமல் பின்பற்ற வேண்டியிருந்தபோதும் அவற்றில் பத்துக் கற்பனைகளை இந்த விதத்தில் பிரித்துக் காட்டி அவற்றின் விசேட தன்மையைக் கர்த்தர் வெளிப்படுத்தியிருப்பதைத் கவனிக்காமல் இருக்க முடியாது. "இரண்டு கற்பலகைகளை வெட்டிக் கொண்டு வா" என்று மோசையைப் பார்த்துக் கூறிய கர்த்தர் (உபா. 10:1, 2) அவனையே அந்தப் பலகைகளில் பத்துக் கற்பனைகளை எழுத வைத்திருக்கலாம். அல்லது, மீண்டும் எழுதித் தரும் முயற்சிகளில் ஈடுபடாது, அவற்றை மோசைக்கு நினைவுறுத்தி இஸ்ரவேலுக்கு போதிக்கும்படி சொல்லியிருக்கலாம். ஆனால், அவர் அப்படியெல்லாம் செய்யாமல், "நான் அந்தப் பலகைகளில் எழுதுவேன்" என்று கூறினார். கர்த்தர் அப்படிச் செய்தது பத்துக் கட்டளைகளின் தனித்துவத்தையும், முக்கியத்துவத்தையும் கோடிட்டுக் காட்டுகிறது.

இந்தப் பத்துக் கற்பனைகளைக் கொடுத்த அதேவேளை கர்த்தர் சீனாய் மலையில் மோசேயோடு பேசி மேலும் பல நியாயப்பிரமாணங்களைக் கொடுத்தார் என்றும் வேதத்தில் வாசிக்கிறோம். அவற்றைக் கர்த்தர் பத்துக் கட்டளைகளைக் கற்பலகைகளில் எழுதியதுபோல் எழுதிக் கொடுக்காமல் மோசேயோடு வார்த்தைகளால் பேசிக் கொடுத்தார், பின்பு மோசே அவற்றை ஒரு நூலாக எழுதி வைத்து இஸ்ரவேலருக்கு விளக்கிப் போதித்தார். (யாத். 24:4; 34:27–28). இதன் மூலம் பத்துக்கட்டளைகளைவிட கர்த்தர் கொடுத்த ஏனைய நியாயப்பிரமாணங்கள் முக்கியத்துவம் இல்லாதவை என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. இஸ்ரவேலரைப் பொறுத்தவரை

அவர்கள் சகல நியாயப்பிரமாணங்களையும் ஒன்று தவறாமல் பின்பற்ற வேண்டிய கடமை இருந்தது. இருந்தபோதும் அவற்றில் ஒழுக்கவிதிகளான பத்துக் கட்டளைகள் மட்டும் எக்காலத்துக்கும் உரியதாக, உலக முடிவு பரியந்தமும் நிலைத்திருந்து மனித வர்க்கத்தால் பின்பற்ற வேண்டியதாக இருந்தன. அதுமட்டுமல்லாமல் அவை மட்டுமே புதிய உடன்படிக்கையின் அடித்தளமாகவும் இருந்தன. அவை இருதயத்தில் எழுதப்படாமல் ஒருவர் புதிய உடன்படிக்கையின் பங்காளனாக இருக்க முடியாது.

பத்துக்கட்டளைகளைத் தவிர கர்த்தர் மோசேக்கு அளித்த ஏனைய நியாயப்பிரமாணங்கள் பலிகள், சடங்காச்சாரங்கள் பற்றியதாகவும் (Ceremonial law), நீதிச்சட்டங்களாகவும் (Judicial law) இருந்தன. இவற்றை இஸ்ரவேல் மக்கள் பின்பற்றித் தனக்கு விசுவாசமாக இருக்க வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். இதுவே கர்த்தர் இஸ்ரவேலோடு செய்துகொண்டிருந்த முதல் உடன்படிக்கை. இதை இஸ்ரவேலர் விசுவாசத்தோடு பின்பற்றவில்லை. அவர்கள் அவற்றை வாழ்க்கையில் அலட்சியப் படுத்தினார்கள். இதனாலேயே கர்த்தரின் கோபம் அவர்கள் மேல் வெளிப் படுத்தப்பட்டு இஸ்ரவேல் தண்டனையை அனுபவித்தது; கர்த்தரின் பிரசன்னத்தையும், ஆலயத்தையும், நாட்டையும் கூட இறுதியில் இழக்க நேரிட்டது.

இஸ்ரவேலர் மத்தியிலிருந்த பக்திவிருத்தியுள்ள யூதர்களுக்கு இந்த நியாயப்பிரமாணங்களில் இருந்த மூன்று பிரிவுகளும் எவை, எவை என்பது சந்தேகமெதுவுமில்லாமல் நன்றாகத் தெரிந்திருந்தது. சிலர் பழைய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணம் இவ்வாறாகப் பிரித்துக் கொடுக்கப்படவில்லை என்றும், இவை மனிதனால் செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட பிரிவுகள் என்றும் குறை கூறுவார்கள். அவர்களுடைய கூற்றில் எந்த உண்மையும் இல்லை. நியாயப்பிரமாணத்தில் பத்துக் கட்டளைகள் ஒழுக்க விதிகளாக (Moral law) இருந்தன. இந்த ஒழுக்கவிதிகளையே, அவற்றை மட்டுமே இஸ்ரவேல் குடும்பத்தாரின் இருதயத்தில் எழுதப்போவதாக எரேமியா 31:31–34ல் கர்த்தர் சொல்லியிருக்கிறார். இதையே பவுல் அப்போஸ்தலனும் 2 கொரி. 3:1–8 வரையுள்ள வசனங்களில் எரேமியாவில் காணப்படும் அதே வசனங்களைப் பயன்படுத்தி விளக்குகிறார். இந்த வசனங்களில் யாத்திராகமம் மற்றும் எரேமியா 31 பகுதிகளில் குறிப்பிடப்பட்ட, எழுத்தில் கற்பலகைகளில் எழுதப்பட்டிருந்த பழைய உடன்படிக்கையைப் புதிய உடன்படிக்கையோடு ஒப்பிட்டு புதிய உடன்படிக்கை இருதயத்தில் எழுதப் பட்டிருப்பதால் அது ஆவிக்குரியதென்று பவுல் விளக்குவதைத் தெரிந்து கொள்ளுகிறோம்.

இதுவரை நாம் பார்த்தவற்றில் இருந்து கர்த்தர் ஆபிரகாமோடு ஏற்படுத்திக் கொண்ட பழைய உடன்படிக்கையின்படி இஸ்ரவேல் நாடு உருவாகி அந்த நாடு பின்பற்றும்படியாக பத்துக் கட்டளைகளையும் ஏனைய நியாயப்பிரமாணங்களையும் கொண்டிருந்தது என்பதை அறிந்து கொள்ளுகிறோம். இந்த உடன்படிக்கைக்கு சொந்தக்காரர்களாக இஸ்ரவேலர் இருந்தனர். அவர்களுடைய சந்ததியினரும் இதற்கு உரித்தானவர்களாக இருந்தனர். இருந்தபோதும் இந்த உடன்படிக்கை இஸ்ரவேலருக்கு ஆத்மீக

விடுதலையை அளிக்கவில்லை. சிலர் மட்டுமே ஆத்மீக விடுதலையை அடைந்திருந்தபோதும் முழு நாடும் கர்த்தரை நிராகரித்தே வாழ்ந்து வந்திருந்தது. இந்தப் பழைய உடன்படிக்கை இவ்வாறாக இஸ்ரவேலருக்கு விடுதலை அளிக்காததனாலேயே கர்த்தர் எரேமியா மூலம் புதிய உடன் படிக்கையொன்றைத் தாம் ஏற்படுத்தப் போவதாகவும், அதன்படி அந்த உடன்படிக்கைக்கு உரியவர்கள் அனைவரும் ஆத்மீக விடுதலை அடைவார் கள் என்றும் சொல்லியிருக்கிறார். இந்த ஆசீர்வாதம் பழைய உடன்படிக்கை மூலம் முழு இஸ்ரவேலுக்கும் கிடைக்கவில்லை. பழைய உடன்படிக்கை புதிய உடன்படிக்கைக்கு அடித்தளமிட்டிருந்தாலும் அதன் பல பகுதி களுக்கு புதிய உடன்படிக்கையில் இடமிருக்கவில்லை; தொடரவில்லை (ஆராதனைக்குரிய பலி மற்றும் சடங்காச்சாரங்கள், தண்டனைகள், நாட்டுச் சட்டங்கள்). அதன் ஒழுக்க விதியான பத்துக்கட்டளை மட்டும் புதிய உடன்படிக்கையில் நிலைத்திருந்ததோடு புதிய உடன்படிக்கைக்கு உரித் தானவர்களின் இருதயத்தில் நிலையாக கர்த்தரால் எழுதப்பட்டது. பழைய உடன்படிக்கையின் சொந்தக்காரர்களான இஸ்ரவேலர் பத்துக் கட்டளையை பலகைகளில் பெற்றுக்கொண்டிருந்தார்களே தவிர அது அவர்களுடைய இருதயத்தில் நிலையாக எழுதப்பட்டிருக்கவில்லை. இதனா லேயே பழைய உடன்படிக்கையைவிட புதிய உடன்படிக்கை மேலானதாக புதுப்பொலிவோடு, புரட்சிகரமான அம்சங்களோடு காணப்படுவதாக இருக்கிறது.

## புதிய உடன்படிக்கையின் புரட்சிகரமான புதிய அம்சங்கள்

எபிரெயர் 8, எரேமியா 31:31–34 வசனங்களை மறுபடியும் அடிக்கோடிட்டு காட்டி கர்த்தர் ஏற்படுத்தியிருக்கும் இரண்டாம் உடன்படிக்கை, புதிய உடன்படிக்கையையே நினைவுறுத்துகிறது. இந்த உடன்படிக்கையைப் பற்றி எபிரெயரை எழுதியவர் விளக்குவதைக் கவனிப்பது அவசியம்.

**(1)** புதிய உடன்படிக்கை புத்தம் புதிய உடன்படிக்கை**.**

இது புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கை அல்ல. பழையதிலிருந்து புதிதாக் கப்பட்ட உடன்படிக்கை அல்ல. இது பழைய உடன்படிக்கையை அடித்தள மாகக் கொண்டிருந்தபோதும் முற்றிலும் புதிதான உடன்படிக்கை. இல்லாவிட்டால் இந்த உடன்படிக்கையைக் கர்த்தர் 'புதிய' உடன்படிக்கை என்று அழைத்தற்கு பொருளில்லாமல் போய்விடும். எல்லா வேத மொழிபெயர்ப்புகளும் 'புதுப்பிக்கப்பட்ட' என்ற வார்த்தையைப் பயன் படுத்தாமல் 'புதிய' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியே இந்த உடன் படிக்கையை அடையாளம் காண்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் எபிரெய மொழியில் இந்த வார்த்தை Kadesh என்பது. இது புத்தம் புதிய என்ற அர்த்தத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு சங். 33:3ல், "அவருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்" என்ற வார்த்தைகளில் இந்த வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் எரேமியா 31:31–34 வசனங்களின் இறுதிப்பகுதியில் புதிய உடன்படிக்கை பற்றி விளக்கியிருக்கும் கர்த்தர், "நான் எகிப்து தேசத்தில் இருந்து கைப்பிடித்து

அழைத்து வந்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கை யின்படி அல்லாமல்” என்று கூறி இந்தப் புதிய உடன்படிக்கையைப் பழைய உடன்படிக்கையில் இருந்து பிரித்து, வேறுபடுத்தி அதைப்போல இருக்காது என்று அழுத்தமாகக் கூறியிருக்கிறார்.

கர்த்தரின் உடன்படிக்கை பற்றி அதிகம் விளக்கிப் பேசும் பிரெஸ்பிடீரி யன் சபைப்பிரிவினர் பழைய உடன்படிக்கைக்கு அளவுக்கு மீறி முக்கியத்து வம் அளித்து புதிய உடன்படிக்கையின் மகிமையைக் குறைத்துக் காட்டி விடுகிறார்கள். கிறிஸ்தவர்களின் குழந்தைகளுக்கு ஞானஸ்நானமளித்து திருச்சபை அங்கத்தவர்களாக்கும் அவர்களுடைய தவறான திருச்சபை அமைப்பு முறைக்கு பழைய உடன்படிக்கையை உயர்த்திக் காட்டுவது அவர்களுக்கு அவசியமாகப்படலாம். ஆனால், அப்படிச் செய்வதால் புதிய உடன்படிக்கையின் மகிமை குறைக்கப்படுவதோடு, புதிய ஏற்பாட்டுக் கால திருச்சபை அமைப்பின் சிறப்பும் மகிமையுங்கூட குறைவுபடுத்தப்படுகிறது. “புதிய உடன்படிக்கையின் மகிமை மிகப் பரந்தளவில் காணப்படுவதால் அதனை முழுமையாக பழைய உடன்படிக்கைக்குள் நுழைத்து விளக்கிவிட முடியாது” என்று அலன் கோர்னர் (Alan Corner) எழுதியிருப்பது முற்றிலும் உண்மையான வார்த்தைகள்.

புதிய ஏற்பாட்டில் கிரேக்க மொழியில் ‘புதிய உடன்படிக்கை’ என்ப தற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளும் புதிய உடன்படிக்கையின் மகிமையை வலியுறுத்துகின்றன. ‘புதிய’ என்பதற்கு இரண்டு கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒன்று Naos. இந்த வார்த்தையை (Naos) நாம் எபிரெயர் 12:24ல் பார்க்கிறோம். இவ்வார்த்தை ‘புதிய’ என்பதை கால அடிப்படையில் விளக்குகிறது. அதாவது, சமீப காலத்தில் உருவாக் கப்பட்ட உடன்படிக்கை என்ற அர்த்தத்தைத் தருவதாக இருக்கிறது. இதன் மூலம் எரேமியா 31ல் விளக்கப்பட்டிருக்கும் புதிய உடன்படிக்கை கிறிஸ்துவில் ஆரம்பித்து நிறைவேறும்வரை நடைமுறையில் இருக்கவில்லை என்பதையும் அது பழைய உடன்படிக்கையில் இருந்து மாறுபட்டது என்பதையும் அறிந்துகொள்கிறோம். பழைய உடன்படிக்கையின் புதிய நிர்வாக அமைப்பாக மட்டும் புதிய உடன்படிக்கையைக் கருதிவிடக் கூடாது. அந்த முறையில் மட்டுமே பிரெஸ்பிடீரியன் பிரிவினர் உடன் படிக்கை பற்றிய விளக்கத்தைத் தருகிறார்கள். புதிய உடன்படிக்கை அதை யெல்லாம்விட மேலானது; பழைய உடன்படிக்கையைப் பழமையான தாக்கி அதிலிருந்து மாறுபட்டுப் புரட்சிகரமான புதிய ஆவிக்குரிய அமைப்பைக் கிறிஸ்துவை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தி யிருக்கிறது புதிய உடன்படிக்கை. இந்தளவுக்கு புதிய உடன்படிக்கையின் புதுமையை வலியுறுத்துவது புதிய உடன்படிக்கையின் சிறப்பை உணர்வ தற்கு அவசியமாகிறது.

முதல் வார்த்தையான Naos கால அடிப்படையில் புதிய உடன் படிக்கையை விளக்குவதாக இருக்கும்போது அடுத்த வார்த்தையான kainos புதிய உடன்படிக்கையின் தன்மையை விளக்குவதாக இருக்கிறது. அதாவது, பழைய உடன்படிக்கையைவிட இது தன் மெய்த்தன்மையில் மாறுபட்

*டிருப்பதோடு முதல் உடன்படிக்கையைப் பழமையானதாக்கி விடுகிறது. எபிரெயர் 8:6–7ல் விளக்கப்பட்டிருப்பதுபோல் பழைய உடன்படிக்கையை விட விசேஷித்ததாக புதிய உடன்படிக்கை இருக்கிறது. பழைய உடன் படிக்கை பழமையானதாக, உருவழிந்து போகிற நிலைமையை புதிய உடன்படிக்கை ஏற்படுத்தியிருக்கிறது. பழைய உடன்படிக்கையைப் போல இது தற்காலிகமானதாக இல்லாமல் நித்தியமானதாகவும், விசேஷித்த தாகவும், மகிமையுள்ளதாகவும் இருக்கிறது.*

(2) புதிய உடன்படிக்கை உடைக்க முடியாதது.

*பழைய உடன்படிக்கையை இஸ்ரவேலரால் உடைக்க முடிந்தது (எரே. 31:32). அது உடைக்கப்படக்கூடிய பலவீனத்தைத் தன்னில் கொண்டிருந்தது. உடைக்க முடியாதபடி பின்பற்றக்கூடிய கிருபையை அதனால் இஸ்ர வேலருக்கு கொடுக்க முடியவில்லை. அதனாலேயே, இஸ்ரவேலர் காலத் துக்கும் உடன்படிக்கையை மீறியவர்களாக, மீறுகிறவர்களாக இருந்தார்கள். ஆனால், புதிய உடன்படிக்கையை ஒருவராலும் உடைக்க முடியாது. கிருபையைத் தன்னில் கொண்டு புதிய உடன்படிக்கையை உடைக்காதபடி ஒரு விசுவாசி பரலோக வாழ்க்கையை இந்த உலகத்தில் வாழும் வசதியை புதிய உடன்படிக்கை ஏற்படுத்தித் தருகிறது. இதைக் கர்த்தர் எரேமியா 32:39–41ல் பின்வருமாறு விளக்குகிறார். "அவர்கள் தங்களுக்கும், தங்கள் பின்னாடியாருக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகும்படி சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும்படிக்கு நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிட்டு, அவர்களுக்கு நன்மை செய்யும்படி, நான் அவர்களைவிட்டுப் பின்வாங்குவதில்லையென்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னை விட்டு அகன்று போகாதபடிக்கு, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைத்து அவர்களுக்கு நன்மை செய்யும்படி . . . அவர்களை நாட்டுவேன்." இந்த வார்த்தைகள் நிச்சயமாக புதிய உடன்படிக்கை பற்றிய தாகும். புதிய உடன்படிக்கையின் அங்கத்தவரொருவரே இவ்வசனங்களில் காணப்படும் சத்தியங்களை அனுபவித்து ஆசீர்வாதமடைய முடியும்.*

*திருச்சபையில் ஒருசில போலிகள் நுலைந்துவிடுவதைத் தவிர்க்க முடியாது. கர்த்தர் ஒருவருக்கே மனிதனின் இருதயம் முழுமையாக தெரிந்திருக்கின்றபடியால் திருச்சபையில் சில வேளைகளில் போலிகள் அங்கத்தவர்களாக நுழைந்து விடக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. ஆனால், மெய்யான புதிய உடன்படிக்கையின் அங்கத்தவர்கள் கர்த்தருக்கு எப்போதும் பயந்து வாழ்வார்கள். புதிய உடன்படிக்கை அவர்களுக்கு உடன்படிக்கையை உடைத்து வாழ்ந்து விடாபடிக்கு அவசியமான கிருபையை அளிக்கிறது. அந்தக் கிருபை புதிய உடன்படிக்கையின் அங்கத்தவர்களைப் பாதுகாக்கிறது (பிலி. 1:5; 1 யோவான் 3:9). பதிய உடன்படிக்கையின் அங்கத்தவர்கள், பழைய உடன் படிக்கையின் மூலம் இஸ்ரவேலின் குடிமகனானவர்களைப்போல உடன் படிக்கையை மீறி, வழி தவறி வாழ்ந்து அழிந்துபோவதற்கு வழியில்லை. பழைய உடன்படிக்கையின்படி உடன்படிக்கையின் குடிமகனாக, அங்கத்தவராக,*

*விசுவாசிகளான சிலரே இஸ்ரவேலரில் இருந்தனர். அவிசுவாசிகள் உடன்படிக்கையின் அங்கதவர்களாக இருப்பதற்கு பழைய உடன்படிக்கை வசதியளித்தது. அதற்கு புதிய உடன்படிக்கையில் இடமில்லை. அத்தகையோரை நித்தியமான புதிய உடன்படிக்கை ஒருபோதும் கொண்டிராது. அந்தளவுக்கு புதிய உடன்படிக்கை நிரந்தரமான கிருபையின் ஜீவனைத் தன்னுடைய அங்கத்தவர்களுக்கு அளித்து உடைக்கப்பட முடியாத உறுதியைக் கொண்டிருக்கிறது. இதை எரேமியா 31:31–34 வசனங்கள் விளக்குகின்றன.*

**(3)** புதிய உடன்படிக்கை பழையதைப் போலல்லாது அதன் சொந்தக்காரர்களுக்கு நித்திய ஆத்மீக விடுதலை அளிக்கிறது**.**

அ**.** புதிய உடன்படிக்கை ஆவிக்குரியது**.** – *பழைய உடன்படிக்கையைப் பற்றி விளக்கும் பவுல் 2 கொரி. 3:7ல் அது "மரணத்திற்கேதுவான ஊழியம்" என்று கூறுகிறார். அது மட்டுமல்லாமல் "எழுத்துக்குரிய" அந்த உடன்படிக்கை "கொல்லுகிறதாயிருக்கிறது" என்கிறார். இதெல்லாம் பழைய உடன்படிக்கை இஸ்ரவேலர் மத்தியில் எந்தவிதத்தில் செயல்பட்டிருக்கிறது என்பதை விளக்குவதாயிருக்கிறது. பழைய உடன்படிக்கையால் இஸ்ரவேலருக்கு ஆத்மீக விடுதலையளிக்க முடியவில்லை; அவர்களை உயிர்ப்பிக்க முடியவில்லை. ஆனால், புதிய உடன்படிக்கை "ஆவிக்குரியதாக" (2 கொரி. 3:6) இருந்து ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கிறது. பழைய உடன்படிக்கை விருத்தசேதனத்தின் மூலம் ஒருவனை இஸ்ரலேரின் குடிமகனாக்கியது. புதிய உடன்படிக்கையோ ஒருவனை கிறிஸ்துவில் அவன் வைக்கும் விசுவாசத்தின் மூலம் பரலோகத்தின் குடிமகனாக்குகிறது (பிலி. 3:20). இதனால்தான், கர்த்தர் எரேமியா 31ல் புதிய உடன்படிக்கையை ஆத்துமாக்களின் இருதயத்தில் தனிப்பட்ட முறையில் எழுதுவேன் என்று கூறியிருக்கிறார். இந்த ஆவிக்குரிய தன்மையைப் பழைய உடன்படிக்கை கொண்டிருக்கவில்லை. ஆபிரகாம், மோசே, தாவீதைப் போல வெகு சிலரே பழைய உடன்படிக்கையின் கீழ் பரலோக பாக்கியத்தை அடைந்தார்கள். பெரும்பாலான இஸ்ரவேலர் கர்த்தரை வாயால் மட்டும் துதித்து உடன்படிக்கையை இருதயத்திலும், வாழ்க்கையிலும் மீறுகிறவர்களாக இருந்தார்கள். பழைய உடன்படிக்கையின் கீழ் இதுவரை தொடர்ச்சியான மீறுதலையும், கீழ்ப்படிவின்மையையுமே இஸ்ரவேல் கொண்டிருந்தது. புதிய உடன்படிக்கையின் கீழ் இப்போது ஆவிக்குரிய நித்தியமான கீழ்ப்படிதலுக்கு வழி ஏற்பட்டிருக்கிறது. இது பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்கும் இடையில் காணப்பபடும் பெரும் வேறுபாடு. இதன் மூலம் புதிய உடன்படிக்கை இதுவரை பழைய உடன்படிக்கையில் காணப்படாத புரட்சிகரமான ஆவிக்குரிய அம்சத்தைத் தன்னில் கொண்டிருப்பதைக் கவனிக்கிறோம்.*

ஆ**.** புதிய உடன்படிக்கையின் அங்கத்தவர்கள் அனைவரும் ஒருவர் தவறாமல் கர்த்தரை மெய்யாக விசுவாசிப்பார்கள்**.** – *பழைய உடன்படிக்கையைப் பெற்றுக்கொண்ட இஸ்ரவேலர் எல்லோரும் கர்த்தரைத் தேவனாகப் பாவித்து வாழவில்லை. புதிய உடன்படிக்கையைப் பெற்றுக்கொள்ளுகிற*

*அனைவருக்கும் கர்த்தர் தேவனாக இருப்பார். அவர்கள் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். இதையே எபிரேயர் 8; எரேமியா 31 பகுதிகள் வலியுறுத்துகின்றன. சிறியவன், பெரியவன் என்ற வேறுபாடில்லாமல், ஆண், பெண் என்ற வேறுபாடில்லாமல், யூதன், புறஜாதியான் என்ற பிரிவு களில்லாமல் கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தைக் கொண்டிருக்கும் அனைவரும் புதிய உடன்படிக்கையின் பங்காளர்களாக கர்த்தரின் ஜனங்களாக இருப் பார்கள். அந்த வசதி பழைய உடன்படிக்கையில் இருக்கவில்லை. புதிய உடன்படிக்கையின் பங்காளர்கள் அனைவரும் கர்த்தரைத் தங்களுடைய தேவனாக விசுவாசிப்பார்கள்; விசுவாசித்து வாழ்வார்கள். அவர்கள் அனைவருடைய பாவங்களும் மன்னிக்கப்பட்டிருக்கும். இந்த ஆசீர்வாதங் களைப் பழமையான பழைய உடன்படிக்கை இஸ்ரவேலுக்கு தரவில்லை; தரும் வல்லமையையும் தன்னில் கொண்டிருக்கவில்லை. அதனாலேயே அது தன் கடமை நிறைவேறியபின் உருவழிந்துபோவதாக இருக்கிறது. நாள்பட்ட அது பழமையாகி, அழிவுற்று புதிய உடன்படிக்கைக்கு இடங்கோடுக்க வேண்டியிருந்தது. இக்காரணங்களால் புதிய உடன்படிக்கையைப் பழைய உடன்படிக்கையின் சீர்திருத்தமாக மட்டும் அல்லது புதிப்பிக்கப்பட்ட உடன் படிக்கையாக மட்டும் பார்ப்பது தகாது; புதிய உடன்படிக்கை முற்றிலும் புதிய உடன்படிக்கையாக, புரட்சிகரமான புதிய அம்சங்களைக் கொண்ட தாக இருப்பதைப் புதிய ஏற்பாடு விளக்குகிறது.*

*இதுவரை நாம் கவனித்து வந்துள்ள புரட்சிகரமான புதிய உடன் படிக்கையின் புதிய அம்சங்களை மேலும் விளக்கமாக இனி வரப்போகின்ற இதழ்களில் படிக்கப்போவதோடு அவை வேதத்தின் ஏனைய இறையியல் கோட்பாடுகளை எந்தவிதத்தில் பாதிக்கிறது என்பதையும் ஆராய விருக்கிறோம்.*

**“சிறியவன், பெரியவன் என்ற வேறுபாடில்லாமல், ஆண், பெண் என்ற வேறுபாடில்லாமல், யூதன், புறஜாதியான் என்ற பிரிவுகளில்லாமல் கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தைக் கொண்டிருக்கும் அனைவரும் புதிய உடன்படிக்கையின் பங்காளர்களாக கர்த்தரின் ஜனங்களாக இருப் பார்கள். அந்த வசதி பழைய உடன்படிக்கையில் இருக்கவில்லை. புதிய உடன்படிக்கையின் பங்காளர்கள் அனைவரும் கர்த்தரைத் தங்களுடைய தேவனாக விசுவாசிப்பார்கள்; விசுவாசித்து வாழ்வார்கள். அவர்கள் அனைவருடைய பாவங்களும் மன்னிக்கப்பட்டிருக்கும். இந்த ஆசீர்வாதங்களைப் பழமையான பழைய உடன்படிக்கை இஸ்ரவேலுக்கு தரவில்லை; தரும் வல்லமையையும் தன்னில் கொண்டிருக்கவில்லை. அதனாலேயே அது தன் கடமை நிறைவேறியபின் உருவழிந்துபோவதாக இருக்கிறது. நாள்பட்ட அது பழமையாகி, அழிவுற்று புதிய உடன்படிக்கைக்கு இடங்கொடுக்க வேண்டியிருந்தது.”**

# நம்மினத்துக்கு இன்று தேவை நல்ல தலைவர்கள்

[நல்ல தலைமை வீட்டுக்குத் தேவை; நாட்டுக்கும் தேவை. நாட்டிலிருக்கும் எந்த அமைப்பும் திறமையாக செயல்பட நல்ல தலைமைதான் எப்போதும் காரணமாக இருந்திருக்கிறது; நல்ல தலைமையையே அந்த அமைப்புகள் நாடியும் வந்திருக்கின்றன. திருச்சபை நலமாக வளர நல்ல தலைமை அவசியம் தேவை. அதனால்தான், திருச்சபைத் தலைமைக்குரிய இலக்கணங்களை விளக்கும் பவுல் அப்போஸ்தலன், 1 தீமோத்தேயு 3ல், "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்" என்று கேட்கிறார். இதன் மூலம் ஒருவன் வேத அடிப்படையில் நல்ல குடும்பத் தலைவனாக இருந்து குடும்பத்தை வழிகாட்டினால் மட்டுமே திருச்சபையில் எந்தத் தலைமைப் பொறுப்புக்கும் தகுதியுள்ளவன் என்பதை வேதம் சுட்டிக்காட்டுகிறது. ஒரு கிறிஸ்தவனுக்கு வேறு எந்தத் தகுதிகள் இருந்தாலும் இந்தத் தகுதியில்லாவிட்டால் அவன் திருச்சபைத் தலைமைக்குப் பொறுத்தமானவனல்ல. திருச்சபையில் நல்ல தலைமைக்கு என்ன வழி? என்று ஆதங்கத்தோடு கேட்காத ஆத்துமாக்கள் இன்று இருக்க முடியாது. அந்தளவுக்கு தலைமைப் பஞ்சம் இன்றைக்கு கிறிஸ்தவ சமுதாயத்தை வாட்டி வருகிறது. திருச்சபைத் தலைமையை எப்படி வளர்ப்பது? என்பதை விளக்குவது இந்தப் புதிய தொடரின் நோக்கம். இது உங்களுக்குப் பயனுள்ளதாக அமைய கர்த்தர் துணை புரியட்டும். - ஆசிரியர்]

*ஆவிக்குரிய நல்ல தலைவர்களை திருச்சபைகளில் எப்படி உருவாக்குவது என்பதை ஆராயுமுன்பு தமிழினத்து கிறிஸ்தவ உலகில் காணப்படும் நல்ல சபைத் தலைமைத்துவப் பஞ்சத்திற்கான காரணங்களை எண்ணிப் பார்ப்பது இந்தப் பஞ்சத்தை நீக்க நாமிருக்கும் திருச்சபைகளில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு துணையாக இருக்கும். எந்தவொரு டாக்டரும் நோயாளிக்குரிய வியாதியை முறையாக அறிந்து கொள்ளாமல் மருந்து கொடுக்க மாட்டார். அதேபோல் எல்லாவித ஆத்மீகக் குறைபாடுகளுக்கும் உரிய காரணங்களை சரிவர அறிந்துகொள்ளாமல் அவற்றின் நிவர்த்திக்கான வழிகளை அறிந்துகொள்ள முடியாது. எனவே, நல்ல சபைத் தலைவர்கள் உருவாகத் தடையாக நம்மத்தியில் இருந்துவரும் மூன்று காரணிகளைப் பற்றி சிந்திப்பது நல்லது.*

**1. நல்ல கிறிஸ்தவ தலைவர்கள் தோன்ற முடியாமல் இருப்பதற்கு நம்மினத்தில் காணப்படும் 'கிறிஸ்தவம்' ஒரு முக்கிய காரணம்.**

*கடந்த இருபது ஆண்டுகளாக தமிழினத்துக் கிறிஸ்தவத்தைப் பற்றி நான் பேசுகிற இடங்களிலும், என்னுடைய எழுத்துக்களிலும் அதிகமாகவே சொல்லியும் எழுதியும் வந்திருக்கிறேன். இதை ஏதோ குறை கூறுவதை மட்டும் தொழிலாகக் கொண்டு நான் செய்து வருகின்ற ஒரு காரியமாக சிலர் எண்ணிவிடலாம். அதுவல்ல உண்மை. தமிழினத்தில் பிறந்து வளர்ந்து*

கிறிஸ்துவை ஆண்டவராக விசுவாசித்து திருச்சபையில் வாழ்ந்து வளர்ந்து ஊழியத்தில் இருபத்தியேழு வருடங்கள் இருந்து வருகின்ற அனுபவத்தில் பார்த்தது, படித்தது அத்தனையினதும் பலனாகவே என்னுடைய கருத்துக்கள் இருக்கின்றன. இவற்றை உதறிவிட்டு நல்ல திருச்சபை தலைமைத்துவத்தை வளர்ப்பது என்பது என்னைப் பொறுத்தவரையில் நிச்சயம் வெற்றிதரப் போகிற முயற்சியாக இருக்கப் போவதில்லை. குறை கூற வேண்டுமென்பதற்காக சொல்லப்படுகின்ற குறைகளாக நான் விளக்கப் போகின்றவைகளைப் பார்க்காமல் இந்தக் குறைகளைப் போக்கிக் கொள்ளு வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் ஏன் சிந்திக்கக் கூடாது? “எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு” என்ற நல் மொழியை நாம் கேட்டதில்லையா? உண்மை யிலேயே நம்மினத்துக் கிறிஸ்தவத்தின் வளர்ச்சியில் நமக்கு வைராக்கியம் இருக்குமானால் குறைகளை எவர் சுட்டிக்காட்டினாலும், அவை எங்கிருந்து வந்தாலும், ஆத்தும விருத்தியைக் காரணமாகக் கொண்டு சொல்லப்படும் குறைகளாக அவை இருக்குமானால் அவற்றின் நிவர்த்திக் காக முயற்சி எடுக்கிறவன்தான் உண்மையான கிறிஸ்தவன்.

தமிழினத்தில் கிறிஸ்தவம் எப்போதோ அறிமுகப்படுத்தப்பட்டுவிட்ட போதிலும் இன்றும் அது பெருமளவுக்கு சுவிசேஷ வல்லமையற்றதாக, இறையியல் போதனைகளற்றதாக, ஆத்மீக ஜீவனற்றதாகவே இருந்து வருகின்றது என்பது நான் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகின்ற குறைபாடு. பெருமளவுக்கு தொடர்ந்தும் இன்று சுவிசேஷப் பணிகள் எப்படியாவது ஆத்துமாக்களைக் கிறிஸ்துவை நம்ப வைத்து ஞானஸ்நானம் எடுக்க வைத்துவிட வேண்டும் என்பதில் குறியாக இருக்கின்றனவே தவிர மெய்யான மனந்திரும்புதலையும், விசுவாசத்தையும் சுவிசேஷப் பணி மூலம் அடைகின்றவர்களை அடையாளம் காண்பதில் அக்கறை காட்டுவ தில்லை. இதனால் ஞானஸ்நானம் எடுத்திருக்கும் அநேகர் ஆத்மீக ஜீவனில்லாமல், பெயரளவில் ‘கிறிஸ்தவர்களாக’ பல்லாயிரக்கணக்கில் தமிழினத்தில் வாழ்ந்து வருகின்றார்கள். ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும், கடற்கரைகளிலும், முகாம்களிலும் தொகையானவர் களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதாக வருகின்ற செய்திகளை நாம் வாசிக்கின்றோமே தவிர அவர்கள் எப்படி, எந்தத் திருச்சபைகளில் இணைக்கப்பட்டு, போதகக் கண்காணிப்பையும் (Pastoral oversight), ஒழுங்குக் கட்டுப்பாட்டையும் (Biblical discipline) தொடர்ச்சியாகப் பெற்று வருகிறார்கள் என்பதையும், ஆத்தும விருத்தியிலும், பரிசுத்தத்திலும் எந்தள வுக்கு வளர்ந்திருக்கிறார்கள் என்பதைப் பற்றியும் ஒருபோதும் வாசிக்க முடிவதில்லை. சுவிசேஷம் சொல்லுவதையும், ஞானஸ்நானம் கொடுப் பதையும் மட்டுமே கிறிஸ்தவ ஊழியமாகக் கொண்டு வேதம் போதிக்கும் முறையான திருச்சபை வாழ்க்கையை நிராகரிக்கின்ற, வேதத்தில் காணப்படாத ஒரு நவீன ‘கிறிஸ்தவம்’ நம்மினத்தில் ஆல்போல் வளர்ந் திருக்கிறது.

வேதத்தில் காணமுடியாத இந்தக் கிறிஸ்தவம் வேதம் போதிக்கும் பத்துக் கட்டளைகளை அடிப்படையாகக் கொண்ட பரிசுத்த வாழ்க்கைக்கு

முக்கியத்துவம் கொடுப்பதில்லை. வேதத்தில் நாம் வாசிக்கின்ற, ஒருவருக் கொருவர் கணக்குக் கொடுத்தும், போதகர்களுக்குக் கணக்குக் கொடுத்தும் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ வேண்டிய திருச்சபை வாழ்க்கை முறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. வேதம் விளக்குகின்ற தெளிவான திருச்சபை அமைப்புக்கும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. சக கிறிஸ்தவர் களுக்கு கணக்குக் கொடுத்து வாழும் வழக்கத்தைக் கொண்டிராதவர்கள் அந்த வழக்கத்தை ஏற்படுத்தி வைத்திருக்கின்ற ஆண்டவருக்குக் கணக்குக் கொடுத்து வாழ்வதை வழக்கமாகக் கொண்டிருக்க மாட்டார்கள். இத்தகைய வேத ஒழுங்கற்று, வேதப் பரிசுத்தத்தை நாடாது, வேத அதிகாரத் துக்கு உட்படாது கிறிஸ்தவம் என்ற பெயரில் இருந்து வரும் போலி ஆத்மீக அமைப்பில் மெய்யான வேதபூர்வமான தலைமைத்துவம் உருவாவதற்கோ அதன் வளர்ச்சிக்கோ இடமிருக்காது. இதன் காரணமாகவே இன்றைக்கு தமிழினத்து கிறிஸ்தவத்தில் எந்த சபையிலும், எந்த அமைப்பிலும் தலைமை வகிப்பவர்களைக் குறித்த சந்தேகம் ஆத்துமாக்களுக்கு இருப்பதோடு, தலைமைத்துவம் ஜீவனற்றதாகவும், ஆத்தும வலிமையற்றதாகவும் இருந்து வருகிறது. சமீபத்தில் “இந்தியன் எக்ஸ்பிரெஸ்” (Indian Express) செய்திப் பத்திரிகையில் பதினெட்டு வருடங்களில் 1040 கோடிப் பணத்தை செகரித் துள்ள ஒரு கிறிஸ்தவ நிறுவனத்தைப் பற்றிய செய்தி விபரமாகத் தரப்பட் டிருந்தது. கிறிஸ்தவப் பணிகளுக்கு பணம் அவசியமான போதிலும் இந்தளவுக்கு கிறிஸ்துவை அறியாத நாட்டு மக்களும் கேள்வி எழுப்பும் அளவுக்கு கிறிஸ்தவ நிறுவனங்கள் பணத்தைச் சேகரிக்கத்தான் வேண்டுமா? பணத்தைக் கிறிஸ்தவத்தோடு நேரடித் தொடர்பில்லாத விஷயங்களில் முதலீடு செய்ய வேண்டுமா? என்ற கேள்விகளை எழுப்பா மல் இருக்க முடியவில்லை. கிறிஸ்து இந்த உலகில் வாழ்ந்தபோது நமக்கு இலக்கணம் வகுத்துக் காட்டித் தந்த தாழ்மையையும், எளிமையான வாழ்க்கை முறையையும், அப்போஸ்தலர்கள் தங்கள் வாழ்க்கை மூலம் நமக்கு காட்டித் தரும் எளிமையையும் இன்று கிறிஸ்தவ அமைப்புக்களில் தலைமை வகிப்பவர்களிடம் காணமுடியவில்லை.

இதற்காக கிறிஸ்தவ தலைவர்களெல்லோரும் தங்களுடைய தாழ்மையை வெளிப்படுத்த வேண்டுமென்பதற்காக குடிசைகளில் வாழும்படி நான் எதிர்பார்க்கவில்லை; மலைவாசிகளைப் போல கோவணத்தை மட்டும் அணிந்து வெறும் உடம்போடு திரியும்படி சொல்ல வரவில்லை. ஆடம் பரமும், சொகுசு வாழ்க்கையும் அவர்களுக்கு நிச்சயம் தேவையற்றது; அநாவசியமானது. அதற்காக அவர்கள் அழைக்கப்படவில்லை. இந்த வகையிலான தலைமைக்கும், வாழ்க்கைக்கும் காரணம் அவர்களுடைய கிறிஸ்தவ விசுவாசத்தில் காணப்படும் குறைபாடுதான். வேத அடிப் படையில் மெய்யான மனந்திரும்புதலோடும், விசுவாசத்தோடும் கிறிஸ்தவம் அமைந்திருந்தால் மட்டுமே அதில் ஜீவனையும், ஆத்மீக வல்லமையையும், ஆடம்பரமற்ற தாழ்மையையும், நம்பகத் தன்மையையும் பார்க்க முடியும். இன்று நம்மினத்தில் பரவலாகக் காணப்படும் கிறிஸ்தவம் சந்தேகத்தை எழுப்புகின்ற ‘கிறிஸ்தவமாக’, ஆயிரம் கேள்விகளைக் கிறிஸ்தவர்கள் கேட்கும்படிச் செய்கின்ற ‘கிறிஸ்தவமாக’, வேற்று மதத்தினரும் முகத்தைச்

*சுளிக்கின்ற 'கிறிஸ்தவமாக' இருந்து வருகின்றது. இயேசு காட்டித் தந்த வாழ்க்கையைக் கொண்ட தலைமையை இதில் எப்படிப் பார்க்க முடியும்? வளர்க்க முடியும்?*

**2. நல்ல கிறிஸ்தவ தலைவர்கள் தோன்ற முடியாமல் இருப்பதற்கு நம் சமுதாயத்தின் கலாச்சாரமும், வளர்ப்பு முறையும் ஒரு காரணம்.**

*இதுவரை நம்மினத்தில் பரவலாகக் காணப்படும் கிறிஸ்தவத்தைப் பற்றியும், அதன் பாதிப்பால் ஏற்பட்டிருக்கின்ற தலைமைத்துவப் பிரச்சனைகளையும் பார்த்தோம். அதைத் தவிர நம்மினத்து கலாச்சாரப் பாதிப்புகளையும், நாம் வளர்க்கப்படுகின்ற, வளர்ந்து வருகின்ற முறைகளையும் சிறிது ஆராய வேண்டியது அவசியம். ஏனெனில், இவையெல்லாம் நம் விசுவாசத்தையும், விசுவாச வாழ்க்கையையும் நிச்சயம் பாதிக்கின்ற அம்சங்கள். கிறிஸ்தவ வாழ்க்கையை நாம் மனிதர்களேயில்லாத காட்டில் தனிமையில் வாழ்வதில்லை. சமுதாயத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். சமுதாயத்தின் எண்ணப்பாடுகளும், பழக்க வழக்கங்களும், பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வாழ்க்கை முறைகளும், கலாச்சாரமும் நம்முடைய விசுவாசத்திலும், வாழ்க்கை முறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தத்தான் செய்யும். அதைத் தவிர்க்க முடியாது.*

*தமிழினத்தில் நாம் அறிந்து வைத்திருக்க வேண்டிய, புரிந்துகொள்ள வேண்டிய ஓர் உண்மை இருக்கிறது. நம்மினத்துப் பண்பாடு இந்து மதத்தினால் அதிக தாக்கத்தை அடைந்திருக்கிறது. இன்னொருவிதத்தில் கூறப்போனால் இந்து மதத்தையும், நம்மினத்துப் பண்பாட்டையும் பிரித்துப் பார்ப்பது சுலபமல்ல. அந்தளவுக்கு இந்து மதமும், நமது பண்பாடும் ஒன்றரக் கலந்து காணப்படுகின்றன. நம்மினத்துப் பண்பாட்டில் இந்து மதத்தின் நேரடிப்பாதிப்பில்லாத பழக்க வழக்கங்கள் நிச்சயம் இருக்கின்றன. கிறிஸ்தவ விசுவாசிகள் அவற்றை எந்தவித மனக்குழப்பமும், சந்தேகமும் இல்லாமல் பின்பற்றலாம். ஆனால், நாம் பின்பற்றக்கூடிய, கிறிஸ்தவ வாழ்க்கைக்கு முரண்படாத நம்மினத்துப் பண்பாடுகள் யாவை என்பதை அத்தனை சுலபமாகத் தீர்மானித்துவிட முடியாது. ஒவ்வொன்றையும் நாம் வேத அடிப்படையில் சிந்தித்து ஆராய்ந்து பார்த்துப் பின்பற்றவோ அல்லது தள்ளி வைக்கவோ வேண்டும். ஆரம்பத்தில் நம்மினத்தில் பணியாற்றிய மிஷனரிகள் நமது பண்பாட்டைப் பற்றிய ஞானமில்லாததால் பல விஷயங்களைக் கிறிஸ்தவர்கள் தொடர்ந்து பின்பற்றும்படி விட்டுவிட்டார்கள். அவர்களைக் குறை சொல்லுவதற்காக இதை நான் சொல்லவில்லை. வேற்று நாட்டவர்கள் இலகுவாக புரிந்துகொள்ளும்படியான பண்பாடல்ல நம்மினத்துப் பண்பாடு. வேற்று நாட்டு மிஷனரிகளுக்கு நமது பண்பாடு மிகவும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கும். அதில் எதைத் தொடலாம், தொடக்கூடாது என்று அவர்கள் நிச்சயம் குழம்பிப் போயிருப்பார்கள். அதனால், அவர்கள் அதில் கைவைக்க விரும்பவில்லை. இதன் காரணமாக அநேக கிறிஸ்தவர்கள் நமது பண்பாட்டில் இரண்டறக் கலந்திருக்கும் இந்துப் பண்பாட்டை இன்றும் விடாமல், அறியாமையினால் தொடர்ந்து பின்பற்றி வருகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.*

*சாதி, குலம் என்பதெல்லாம் இந்து மதத்தில் இருக்கும் வழக்கம். சாதியில்லாமல் இந்து மதமில்லை; இந்து மதமில்லாமல் சாதி உயிர் வாழ முடியாது. ஆனால், இன்றைக்கும் கிறிஸ்தவ சமுதாயத்தில் சாதி, குலம், தராதரம் பார்க்கும் வழக்கம் பரவலாகக் காணப்படுகின்றது. சாதி, குலம், தராதரம் பார்ப்பது தவறு என்று தட்டிக் கேட்பவர்களை மேலை நாட்டுக் கலாச்சாரத்தால் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிற சாதிப் பித்தும், போலிப்பண்பாட்டுப்பித்தும் பிடித்த போதகர்கள் நம்மத்தியில் இருக்கிறார்கள். சாதி அடிப்படையில் அமைக்கப்பட்ட சபைகளும் கூட நம் சமுதாயத்தில் இருக்கின்றன.*

*திருச்சபைகளில் எதிர்காலத்துக்கான நல்ல தலைவர்களை வளர்ப்பதற்கு பண்பாடு மட்டும் குறுக்கீடாக இருக்கவில்லை; நம்மினத்துக் குடும்ப வாழ்க்கையும், வளர்ப்பு முறையும்கூடத் தடையாக இருக்கின்றன. உதாரணத்திற்கு பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைக்கும் வழக்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இதில் நல்லது இருந்தாலும் பாதகமானதும் கலந்து காணப்படுகின்றது. கிறிஸ்தவரான மகனுக்கும் அல்லது மகளுக்கும் கிறிஸ்தவர்களல்லாத பெற்றோர்கள் மணமுடித்து வைக்கும்போது கிறிஸ்தவ வழிமுறைகளைப் பின்பற்றி கிறிஸ்தவ மாப் பிள்ளையையோ, மணப்பெண்ணையோ தேடப்போவதில்லை. மகன் மெய்க் கிறிஸ்தவனாக இருந்து அவனுக்கு பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருக்கும் பெற்றோர்கள் இருந்தால் மகனுக்கு அவனுக்குத் தகுந்த ஆத்மீக வாழ்வில் சிறப்புடன் இருக்கும் மணப்பெண்ணை அந்தப் பெற்றோர்கள் தேடப்போவதில்லை. மெய்க்கிறிஸ்தவர்களாக இருக்கும் மகனோ, மகளோ மெய்க்கிறிஸ்தவர்களாக இருக்கும், தங்களுடைய வாழ்க்கைக்குத் துணை யானவர்கள் என்று கருதுகின்ற துணைகளை சபையிலோ சபைக்கு வெளியிலோ தேடிக்கொண்டால் அதற்குப் பெற்றோர்களும், போதகர் களுமே தடையாக இருந்து விடுவார்கள். ஆகவே, திருமணமாகாத மெய்க் கிறிஸ்தவர்கள் வேத இலக்கணங்களைக் கொண்ட, தகுந்த வாழ்க்கைத் துணையைத் தேடிக்கொள்ள முடியாமல், பெற்றோர்களின் வற்புறுத்தலா லும், சபை சரியான வழியில் வழிநடத்தாததாலும், தகுதியற்ற, ஆத்மீக ஜீவனற்ற துணைகளைத் திருமணம் செய்து குடும்ப வாழ்க்கையை ஆரம்பிக்க நேரிடுகிறது. கிறிஸ்தவ குடும்ப வாழ்க்கையின் ஆரம்பத்திற்கே இது பேராபத்தானது என்ற உணர்வே தமிழினத்தில் இன்று அநேகருக்கு இல்லை. வயதுக்கு வந்துவிட்டால் எப்படியாவது, எதைச் செய்தாவது திருமணம் செய்துவிட வேண்டும் என்ற உலகப் பிரகாரமான எண்ணம் மட்டுமே எல்லோரிலும் ஆட்சி செய்கிறது.*

*ஆத்மீகத்தில் ஒருவன் சிறந்திருந்தாலும், அவன் பெற்றோரின் கட்டுப் பாட்டினால் தகுதியற்ற, ஆத்மீக ஜீவனில்லாத ஒருத்தியைத் திருமணம் செய்திருந்தால் அவனுக்கு எத்தனை ஆவிக்குரிய தகுதிகள் இருந்தாலும் சபைத் தலைவனாக வளர்வதற்கு வாய்ப்பில்லை. சபைத் தலைவர்களுக் குரிய இலக்கணங்களை விபரிக்கும் 1 தீமோத்தேயு 3, தீத்து வேதப் பகுதிகள் விசுவாசத்தில் சிறந்த மனைவியைக் கொண்டிருப்பவனாகவும், குடும்பத்தை நன்றாக நடத்துபவனாகவும் சபைத் தலைவன் (போதகர்கள், உதவிக்*

காரர்கள்) இருக்க வேண்டும் என்று போதிக்கின்றன. விசுவாசத்தில் சிறந்த மனைவிகளைக் கொண்டிராதவர்களும், குடும்பத்தை சிறப்பாக நடத்தாதவர்களும் சபைத் தலைமைக்கு அருகதையற்றவர்கள் என்பதை வேதம் வெளிப்படையாகப் போதிக்கின்றது. இந்த விஷயங்களில் சபை மக்களுக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டாதவர்கள் சபைத் தலைமைக்கு பொறுத்தமானவர்களல்ல. ஆகவே, நம்மினத்தில் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வரும் குடும்ப வாழ்க்கை முறையும், திருமணம் முடிக்கும் வழக்கங்களும் திருச்சபைக்குத் தேவையான தலைவர்களை உருவாக்கப் பெருந்தடையாகத் தொடர்ந்திருந்து வருகின்றன.

நம்மினத்தில் குடும்பம் நடத்துவதில் காணப்படும் இன்னொரு தவறான வழக்கத்தையும் கவனிக்க வேண்டும். பிள்ளைகளின் திருமண விஷயத்தில் பெற்றோர்கள் தீர்மானங்களை எடுப்பது மட்டுமல்லாமல் பிள்ளைகள் தலைக்கு மேல் வளர்ந்த பின்னும் அவர்களுடைய வாழ்க்கையில் தீர்மானங்களை எடுக்கும் வழக்கத்தையும் பெற்றோர்களே கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு சில கிறிஸ்தவ குடும்பங்கள் விதிவிலக்காக இருக்கலாம். பெரு நகரங்களில் வாழ்கின்ற கிறிஸ்தவ குடும்பங்களும் விதிவிலக்காக இருக்கலாம். நான் பரவலாக எங்கும் நடந்துவரும் வழக்கத்தையே விளக்குகிறேன். வளர்ந்து பெரியவனாகி 26–28 வயதில் வேலையில் இருக்கும் மகன்கூட சம்பளத்தைப் பெற்றோர்களிடம் அப்படியே கொடுத்துவிடுவதில் இருந்து வாழ்க்கையில் சகல தீர்மானங்களையும் பெற்றோர்களே எடுக்கும்படி விட்டுவிடுகிறான். இது கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், வேதம் போதிக்கும் பிள்ளை வளர்ப்பின்படி இதைவிடவும் மோசமானதொன்றுமில்லை. உண்மையில் வளர்ந்து வேலையில் இருக்கும் ஒரு நல்ல கிறிஸ்தவ வாலிபன் இப்படி வாழ்க்கையில் சகல விஷயங்களையும் பெற்றோர்கள் கையில் விட்டுவிட்டால் அவன் வீட்டுப்பிள்ளையாய், தவறாக வளர்ந்தவனாக, வாழ்க்கையில் எந்தத் தீர்மானத்தையும் எடுக்கத் தெரியாதவனாக, தீர்மானங்களை எடுக்கப் பயந்தவனாக, துணிவில்லாதவனாக, தனியாகக் குடும்பம் நடத்தி மனைவி பிள்ளைகளை எடுக்க வேண்டிய தீர்மானங்களை எடுத்து வளர்க்கத் தெரியாதவனாகவே வளர்ந்திருப்பான். அவன் ஆவிக்குரியவனாக இருந்து வேறு தகுதிகளைக் கொண்டிருந்தபோதும் திருச்சபையில் தலைவனாக இருக்கத் தகுதியில்லாதவனாக இருப்பான். அவனுக்கு சுயமாக வேதம் போதிக்கும் தீர்மானங்களை மட்டும் எடுத்து ஆத்துமாக்களை ஆண்டவரின் வழியில் வழிநடத்தக் கூடிய தைரியம் இருக்காது. சுயமாக சிந்திக்கத் தெரியாதவனாக, மற்றவர்களுடைய பேச்சைக் கேட்டு நடந்துவிடக்கூடியவனாக இருப்பான். இதற்கெல்லாம் நம் சமுதாயத்தின் பிள்ளை வளர்ப்பு முறையே காரணம். ஏதோ, வளர்ந்து, திருமணமாகி பிள்ளைகளைப் பெற்றுக்கொண்ட பிறகு மட்டுமே தங்களுடைய பிள்ளைகளுக்கு சுயமாக சிந்திக்கும் தகுதி வரும் என்ற எண்ணத்தைக் கொண்டிருப்பதுபோல் பெற்றோர்கள் நம்மினத்தில் நடந்து வருகிறார்கள். அதுவும் கிறிஸ்தவ பெற்றோர்களும்கூட இந்தவிதமாகவே நடந்து வருகிறார்கள். வேத போதனையின்படி வளர்த்து தன்னம்பிக்கையோடு சிந்தித்து செயல்படும்

*படியாக அவர்கள் பிள்ளைகளை வளர்ப்பதில்லை. தங்களுடைய பேச்சைக் கேட்டு வளர வேண்டும் என்பதில் மட்டும் குறியாக இருந்து எந்தக் காரியங்களில் நம் பேச்சைக் கேட்க வேண்டும், எந்தக் காரியங்களில் சுயமாக சிந்தித்து செயல்பட வேண்டும் என்ற ஆலோசனைகளை யெல்லாம் சொல்லிப் பிள்ளைகளை வளர்ப்பதில்லை. இதன் காரணமாக நம்மினத்து கிறிஸ்தவ வாலிபர்களுக்கு தன்னம்பிக்கை* (Self belief) *குறைவாக இருக்கிறது. அநேகர் தாழ்வு மனப்பான்மை* (Inferiority complex) *கொண்டவர்களாக இருக்கிறார்கள். எதையும் சாதிக்க முடியும் என்ற விடா முயற்சி அவர்களில் அருகிக் காணப்படுகிறது. ஒரு பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதற்குரிய வரம்பின் அடிப்படையில் சிந்தித்து அதைப் பொறுப்போடு நிறைவேற்றுகிற பொறுப்புணர்வும், தன்னம்பிக்கையும் இல்லாமலிருக்கிறது. கொடுத்த பணியைக் கணக்குக் கொடுத்து* (Accountability) *நிறைவேற்றும் வழக்கத்தை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். சொந்த வாழ்க்கையில் ஒழுங்கு முறையைக் கடைப்பிடித்து* (Discilpined personal life) *வரம்போடு வாழ்வது அவர்களுக்குத் தெரியாமலிருக்கிறது. இந்த முறையில் பெற்றோர்களால் வளர்க்கப்பட்ட ஆண்கள் திருமணமான பின் அதிகமாக மனைவியின் சொல்லுக்கு அடங்கி வாழ்கிறவர்களாகவும் இருந்துவிடுகிறார்கள். தொட்டதற்கெல்லாம் பெற்றோர்களின் சொல்லைக் கேட்டுக் கேட்டே வாழ்ந்து பழகிவிட்ட அவர்களுக்கு மனைவியை வழி நடத்திச் செல்லத் தெரியாதிருக்கிறது. இன்றைக்கும் இருபத்தி ஐந்து வயதாகியும், தூங்குவதற்கும் ஆறுதலுக்கும் தாயின் மடியைத் தேடுகிற வாலிபர்களை நாம் காண்பதில்லையா?*


## சிறப்புச் சலுகையில் நல்ல நூல்கள்

மூன்று நல்ல நூல்களை வாசகர்கள் சிறப்புச் சலுகையாக முப்பது ரூபாய் மட்டும் (ரூபாய் 30/-) நன்கொடை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி.

**பரிசுத்த வேதாகமம்**
**பிரசங்கம் ஏன்!**
**கிறிஸ்தவன் யார்!**

இந்த நூல்களை வாசகர்கள் கீழ்வரும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

**இவாஞ்சலிக்கள் பாப்திஸ்து சபை**
57/2 டி. பி. கே. மெயின் வீதி, பைகாரா, மதுரை 625004
தொலைபேசி எண்: 9994181010

# சீர்திருத்த கிறிஸ்தவ சத்தியங்களை விளக்கும் நூல்கள்

- சீர்திருத்த விசுவாசம்
- திருச்சபை சீர்திருத்தம்
- பரிசுத்த வேதாகமம்
- தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு (ஜேம்ஸ் அடம்ஸ்)
- கிறிஸ்தவன் யார்! (அல்பர்ட் என். மார்டின்)
- கிறிஸ்தவ இறையியல் (அறிமுகம்)
- வேதாகமத்தை விளங்கிக் கொள்ளுவது எப்படி?
- வியாக்கியானப் பிரசங்கம்
- ஏன் பிரசங்கம்!
- சுவிசேஷக் கோட்பாடும்
  புதிய சுவிசேஷக் கோட்பாடும்
- ஆதிசபையின் அற்புத வரங்கள் (ஜனவரி 2006)
- வில்லியம் கேரி (ஜனவரி 2006)
- பத்துக் கட்டளைகள் (ஜூன் 2006)
- சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் (ஜூன் 2006)

நூல்களின் விலை மற்றும் தபால் செலவுபற்றிய விபரங்களுக்கு கீழ்வரும் முகவரிகளோடு தொலேபேசி மூலமோ எழுதியோ தொடர்புகொள்ளுங்கள்.

இவாஞ்சேலிக்கள் பாப்திஸ்து சபை
57/2 டி. பி. கே மெயின் வீதி பைகாரா, மதுரை 625004
தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி எண்: 9994181010

கிருபை இலக்கிய சேவை
19. இராஜசிங்க வீதி, கொழும்பு 6
ஸ்ரீ லங்கா

*பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகி, வேலை செய்ய ஆரம்பித்தவுடன் சுயமாக சிந்தித்து வேதபூர்வமான தீர்மானங்களை எடுத்து தன்னம்பிக்கை யுடன் செயல்படக்கூடியவர்களாக இருக்க வேண்டும். அப்பா சொன்னார், அம்மா சொன்னார், மாமா சொன்னார் என்று கையில் எடுத்த கலப்பை யைப் பாதியில் விட்டுவிட்டுப் போய்விடக்கூடிய தன்னம்பிக்கையற்ற, சுயமாய் சிந்திக்க முடியாதவர்கள் சபைத் தலைமைக்கு பொறுத்தமான வர்களில்லை. இருபத்தி நான்கு வயதைத் தாண்டிய, கிறிஸ்தவ வாலிபர்கள் வேதத்திற்கு பணிந்து, சுயமாக சிந்தித்து தீர்மானங்களை எடுக்க முடியாத நிலையில் வாழ்ந்து வந்தால் அவர்கள் இருக்கின்ற சபை அவர்களை வைத்து என்ன செய்ய முடியும்? அவர்களை நம்பி எந்தப் பொறுப்பைக் கொடுக்க முடியும்? அவர்களைத் திருத்தாத வரையும், சுயமாக சிந்தித்து செயல்படக்கூடியவர்களாக அவர்களை மாற்றாத வரையும் எதிர்காலத்துக் குரிய நல்ல தலைவர்களாக அவர்களை வளர்க்க முடியாது. கிறிஸ்தவர் களல்லாத பெற்றோர்களைக் கொண்டிருக்கும் கிறிஸ்தவ வாலிபர்களும், பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருந்து வேத வாழ்க்கை நடத்தாத பெற்றோர்களைக் கொண்டிருக்கும் வாலிபர்களும் இப்போதே இவற்றைப் பற்றி சிந்தித்து செயல்பட ஆரம்பிப்பது நல்லது. கிறிஸ்தவப் பெற்றோர் களும் பிள்ளைகளை வளர்க்கும்போது, அவர்கள் பத்துப் பன்னிரெண்டு வயதைத் தாண்டுகிறபோது வேதபூர்வமாக சுயமாக சிந்திக்கக்கூடியவர் களாக இருக்கும்படி அவர்களுக்கு வழிகாட்டி வளர்க்க வேண்டும்.*

*நம்மினத்தில் இருக்கும் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையும் கிறிஸ்தவ வேத போதனைகளுக்கு முரணானது. திருமணமான கணவனும், மனைவி யும் தங்களுடைய குடும்பத்தைக் கர்த்தரின் வழியில் நடத்த வேண்டு மானால் கூட்டுக்குடும்ப முறை உதவாது. கூட்டுக்குடும்ப வாழ்க்கை, குடும்ப வாழ்க்கையில் பிறர் தலையீட்டுக்கு வழிவகுத்து, வேதபூர்வமான பிள்ளை வளர்ப்புக்கும் வழியில்லாமல் செய்துவிடும். இது வேதம் அறியாத, கர்த்தர் ஏற்படுத்தாத ஒரு முறை. "மனிதன் தனிமையாய் இருப்பது நல்ல தல்ல, ஏற்ற துணையை அவனுக்கு ஏற்படுத்துவேன்" (ஆதி. 2:18) என்று சொன்ன தேவனாகிய கர்த்தர் அவன் தனிமையில் இருக்காதபடி ஒரு கூட்டுக்குடும்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. அவனில் இருந்து உருவாக்கிய மனைவியை மட்டுமே கொடுத்தார். அத்தோடு, அவர்கள் பிறர் தலையீடின்றிக் குடும்பம் நடத்துவதற்கு இசைவாக "இதனிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்" (ஆதி 2:24) என்றார் கர்த்தர். இந்தப் பகுதியைக் கிறிஸ்த வர்கள் மிகக் கவனமாக வாசிக்க வேண்டும். இங்கே 'இதனிமித்தம்' என்ற வார்த்தையின் மூலம் கர்த்தர், ஏன் கணவனும், மனைவியும் பெற்றோர் களை விட்டுப் பிரிந்து தனிக்குடித்தனம் நடத்த வேண்டும் என்பதற்கான காரணத்தைச் சொல்கிறார். அதாவது, மனுஷனில் இருந்து மனுஷி உருவாக் கப்பட்டதாலும், அவனுடைய மாம்சத்தின் மாம்சமுமாய் அவள் இருப்பதாலும், அவர்கள் இருவரும் இசைவாய், ஒரே மாம்சமாய், இணை பிரியாதபடி, சரீர மற்றும் ஆத்தும உறவுக்கு எந்தப் பங்கமும் வந்துவிடாத படி பவுல் எபேசியர் 5ம் அதிகாரத்தில் விளக்கியிருக்கின்ற (எபேசி. 5:22–33)*

குடும்பம் பற்றிய கர்த்தரின் சித்தத்தைக் குடும்ப வாழ்க்கையில் பின்பற்றி வாழ வேண்டுமானால் அதற்குத் தனிக்குடித்தனத்தைத் தவிர வேறு வழியில்லை என்பதைக் கர்த்தர் உணர்த்துகிறார். கூட்டுக் குடும்ப வாழ்க்கை அதைக் குலைத்துவிடக்கூடியதாய்த்தான் இருக்கும். இது என்னுடைய கருத்தல்ல, என் சித்தத்தில் உருவான சிந்தனையல்ல, மேல் நாட்டுக் கலாச்சாரப் பாதிப்பால் வரும் ஆலோசனையல்ல, கர்த்தரின் நாவில் இருந்து புறப்பட்டிருக்கும் சத்திய விளக்கம். பொருளாதாரக் காரணங் களுக்காகவும், போலிப்பண்பாட்டிற்கு அடிமைப்பட்டிருப்பதாலும் கர்த்தரின் வார்த்தையை ஆராய்ந்து சிந்தித்துப் பார்த்து நடந்துகொள்ளா மல் போகிற கிறிஸ்தவ கணவனும், மனைவியும் குடும்ப வாழ்க்கையில் கர்த்தர் மட்டுமே கொடுக்கக்கூடிய சமாதானத்தையும், இனிமையையும், அன்பையும், ஆத்தும விருத்தியையும் ஒருக்காலும் அடைய முடியாது.

இதுவரை நாம் பார்த்த உதாரணங்கள் நம்மினத்தில் காணப்படும், கர்த்தரின் வார்த்தைகளுக்கு முரணான சில பண்பாட்டம்சங்களாக இருந்து சபைத் தலைமைக்குரிய, வேத இலக்கணங்களைக் கொண்ட நல்ல தலைவர்கள் உருவாவதற்குத் தடையாக இருந்து வருகின்றன. இத்தகைய தவறான பண்பாட்டு முறைகளும், வாழ்க்கை முறைகளும் வேதரீதியில் திருத்தப்படாவிட்டால் திருச்சபைத் தலைமைக்கு வருகிறவர்கள் கிறிஸ்துவின் பெயரில் போலி வாழ்க்கை வாழ்ந்து ஆத்துமாக்களும் போலி வாழ்க்கை வாழ்ந்து வருவதற்கே துணையாக இருந்து வருவார்கள்.

**3. நல்ல கிறிஸ்தவ தலைவர்கள் உருவாக முடியாமல் இருப்பதற்கு வேதம் விளக்கு கிறபடியான திருச்சபை அமைப்பு நம் சமுதாயத்தில் அருகிக் காணப்படுவதும் ஒரு காரணம்.**

இதுபற்றி நம் வாசகர்கள் அதிக தடவைகள் இந்தப் பத்திரிகையில் வாசித்திருப்பார்கள். இருந்தாலும் இந்த ஆக்கத்தோடு அது தொடர்புடைய தாக இருப்பதால் சுருக்கமாகவும், தெளிவாகவும் இந்தக் குறைபாட்டைப் பற்றி மறுபடியும் எழுத விரும்புகிறேன். திருச்சபைகள் நம்மினத்தில் இருக்கத் தான் செய்கின்றன. பலவிதமான திருச்சபைப் பிரிவுகளும் இருக்கத்தான் செய்கின்றன. பாரம்பரியத் திருச்சபைப் பிரிவுகள் என்று மட்டுமில்லாமல், சுயாதீனத் திருச்சபைகளும் இயங்கி வருகின்றன. ஆனால், இவையெல்லாம் வேதம் விளக்குகின்ற ஆவிக்குரிய ஆத்மீகத்தையும், அமைப்பு முறையையும் கொண்டிராமல் வேதத்தை ஒதுக்கி வைத்துவிட்டு தன்னிச்சையாக செயல்பட்டு வரும் நிலையைத்தான் நான் சரியல்ல என்கிறேன். இதற்கு ஒருசில திருச்சபைகள் விதிவிலக்காக இருக்கலாம். திருச்சபைக்குத் தலைவர் இயேசு கிறிஸ்து மட்டுமே என்று வேதம் சொல்லுகிறது. கிறிஸ்து தன்னுடைய திருச்சபையை இந்த உலகத்தில் தான் தெரிவு செய்யும் மனிதர்களைக் கொண்டு நிறுவும்போது அவர்கள் அந்தத் திருச்சபைகளைத் தன்னுடைய வார்த்தையை மட்டுமே பின்பற்றி நிறுவ வேண்டும் என்றும், திருச்சபை சம்பந்தமான சகல விஷயங்களையும் வேத போதனைகளின்படியே செயல்படுத்த வேண்டும் என்றும் தெளிவாக சொல்லியிருக்கிறார். இன்றைக்கு சபை நிறுவுவதில் இருந்து சபை சம்பந்தமான அத்தனை

*விஷயங் களிலும் வேதவழிகளைப் பின்பற்றாமல் தமிழினத்தில் திருச்சபைகளும், ஊழியங்களும் இயங்கி வருகின்றன.*

*திருச்சபை பற்றி வேதம் தரும் போதனைகளை ஆராய்ந்து பார்ப்போமானால் அது திருச்சபையைப் பற்றிய பின்வரும் உண்மைகளை விளக்குவதைக் கவனிக்கலாம்: (1) திருச்சபை தன்னைத் தானே ஆளுகின்ற ஓர் உள்ளூர் அமைப்பு. அதாவது, திருச்சபைக்குத் தலைவராக இருக்கும் கிறிஸ்து அமைக்கப்படுகின்ற ஒவ்வொரு உள்ளூர் திருச்சபையும் வெளியார் தலையீடின்றி வேத சத்தியங்களின் வழிப்படி தன்னைத் தானே ஆள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அந்த முறையில் ஒவ்வொரு திருச்சபையும் தன்னைத் தானே ஆளுவதற்கு அதற்குத் தேவையான இன்றியமையாத அம்சங்கள் காணப்பட்டால் மட்டுமே அது ஆளும் தகுதியுள்ள திருச்சபையாக கிறிஸ்துவைப் பொறுத்தவரையில் இருக்க முடியும். அப்படித் தேவையான அம்சங்கள் யாவை? (அ) அது முறையாக ஆராய்ந்து பார்த்து ஞானஸ்நானம் கொடுக்கப்பட்ட விசுவாசிகளைக் கொண்ட அங்கத்துவ முறையையும்* (Clearly defined baptised membership), *சபை ஒழுங்குக் கட்டுப்பாட்டோடு ஒருவருக்கொருவர் கணக்குக் கொடுத்து இயங்கி வருவதற்கு அவசியமான திருச்சபை சட்ட விதிகளையும்* (Constitutionally functioning disciplined accountable church practice) *கொண்டிருக்க வேண்டும். மெய் விசுவாசத்தைக் கொண்டிருந்து இவ்வேதவிதிகளுக்குப் பணிகிறவர்களுக்கு மட்டுமே சபை அங்கத்தவராகும் உரிமை உண்டு. (ஆ) அதனை வழி நடத்தும்படியாக, வேதபூர்வமாக அங்கத்தவர்களால் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட தகுதியுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட போதகர்களும், உதவிக்காரர்களும் இருக்க வேண்டும்* (Biblically recognized accountable Elders and Deacons to rule the church)*. இவர்களும் ஒருவருக்கொருவர் கணக்குக் கொடுத்து வாழ்ந்து சபையை வேத அடிப்படையில் வழிநடத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். (இத்தகைய நிலையை அடையாத சபைகள் அத்தகைய தகுதிகளைக் கொண்ட சபைகளின் மேற்பார்வையில், அது தன்னைத் தானே ஆளும் நிலையை அடையும் வரையில் இயங்கி வர வேண்டும்.) இது வேதம் தெளிவாக விளக்கும் திருச்சபை அமைப்பு முறை. இதை அப்போஸ்தலர் நடபடிகளும், புதிய ஏற்பாட்டின் ஏனைய நூல்களும் தெளிவாக, சந்தேகமற விளக்குகின்றன. இந்த அம்சங்களைக் கொண்டிராமல் திருச்சபை என்ற பெயரில் இயங்கி வரும் நிறுவனங்களையும், தன்னிச்சையாக செயல்பட்டு வரும் குழுக்களையும், கூடி வரும் கூட்டங்களையும் திருச்சபைகளாக வர்ணிக்க முடியாது. அப்படி வர்ணிப்பதற்கு கர்த்தரின் வேதம் இடம் தரவில்லை. வேதம் விளக்குகின்ற முறையில் அமைக்கப்பட்டு பக்திவிருத்தியோடும், இருதய சுத்தத்தோடும், ஆத்தும பாரத்தோடும் இயங்கி வரும் சபைகளை இன்று பார்க்க முடியாமலிருப்பது எதிர்காலத்தில் நல்ல கிறிஸ்தவ தலைவர்கள் தோன்றுவதற்கு பெரும் பாதகமாக இருந்து வருகிறது. சபைத் தலைவர்கள் சபைகளில் இருந்து தோன்றியிருப்பதாகத்தான் வேதம் விளக்குகிறது (எபேசியர் 4). வேதத்தைப் பின்பற்றி இயங்கும் நல்ல சபைகள் இல்லாவிட்டால் நல்ல தலைவர்கள் உருவாவதற்கு வழியேது?*

*திருச்சபை சம்பந்தமாக வேதம் விளக்குகின்ற சத்தியங்கள் தெரியாமலும், தெரிந்தும் அதன்படி நடந்தால் தன்னுடைய சுயநல நோக்கங்கள் நிறைவேறாது என்ற எண்ணப்போக்காலும் ஆண்டாண்டு காலமாக தமிழினத்தில் கிறிஸ்தவ ஊழியம் என்ற பெயரில் தனி மனிதர்களினதும், திருச்சபைப் பிரிவுகளினதும் செயல்கள் இருந்து வருகின்றன. இதன் காரணமாக வேத சத்தியங்களை அறியாமலும், நடைமுறை வாழ்க்கையில் அவற்றைப் பயன்படுத்தி வாழ்ந்து தீர்மானங்கள் எடுக்கும் வழிகளை அறியாமலும் வாலிபர்கள் வளர்ந்து வருகிறார்கள். வழி காட்டுவதற்கு நல்ல சபைகளோ, சபைத் தலைவர்களோ இல்லாததால் இவர்கள் ஆர்வக்கோளாறு காரணமாகவும், அறியாமையின் காரணமாகவும் யார் மூலமோ, எங்கேயோ சுவிசேஷத்தைக் கேட்டு கிறிஸ்துவை விசுவாசித்த உடனேயே ஊழியம் செய்யவும் புறப்பட்டு விடுகிறார்கள். இப்படிப் புறப்பட்டு ஊழியம் செய்து வருகின்ற ஆயிரக்கணக்கானவர்களால் தமிழினம் நிரம்பி வழிகின்றது. இவர்களுக்கு வேதம் எதிர்பார்க்கும் ஆத்மீக முதிர்ச்சியோ, வேத அறிவோ, ஆத்மீக அனுபவமோ, உலக அனுபவமோ மற்றவர்களால் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டிய சபைத் தலைவர்களுக்கான இலக்கணங்களோ இல்லாமலிருக்கிறது. இயேசு கிறிஸ்துவை நான் நேசிக்கிறேன் என்று கூறி அவரில் வைக்கும் அன்புக்கும் அவருடைய வார்த்தைக்கும் எந்தத் தொடர்பும் இல்லாததுபோல் இவர்கள் நடந்து வருகிறார்கள். இதன் காரணமாக தெளிந்த விசுவாசமும், சத்தியத்தைத் தெளிவாக அறிந்திருப்பதனால் மட்டுமே வரக்கூடிய சத்திய வாஞ்சையும், சத்தியத்திற்காக மட்டுமே போராடுகின்ற உறுதிப்பாடும், சத்தியத்தின் வழிகளில் மட்டுமே நடக்கின்ற இருதயமும் இல்லாது தானே சூட்டிக் கொண்ட 'ஊழியன்' என்ற பெயர் மட்டுமே இருக்க வேண்டிய ஒரே ஊழியத் தகுதியாகக் கருதி ஆத்மீக வல்லமையற்ற அநேகர் தமிழினத்துக் கிறிஸ்தவர்களின் தலைவர்களாக வலம் வந்துகொண்டிருக்கிறார்கள். "ஆத்துமாக்களின் ஆத்மீக வளர்ச்சி அவர்களுடைய தலைவர்களுடையதைவிட ஒருபோதும் உயர்ந்துவிட முடியாது" என்று எவரோ சொன்ன வாசகத்துக்கு ஒப்பாக இத்தகைய தகுதியற்ற தலைவர்களைக் கொண்டிருக்கின்ற ஆத்துமாக்களும் அறிவற்ற, ஆத்மீக வல்லமையற்ற மக்களாக வாழ்ந்து வருகிறார்கள்.*

*நாளைய நல்ல தலைவர்கள் உருவாகத் தடையாயிருக்கும் தமிழினத்துத் திருச்சபைகளின் அமைப்பு பற்றி நான் கொண்டிருக்கும் ஆதங்கத்தை விளக்க விரும்புகிறேன். சபை அமைக்கிறோம் என்று புறப்படுகிறவர்கள் தங்களைத் தாங்களே சபைத் தலைவர்களாக நியமித்துக்கொண்டு மற்றவர்கள் தங்களை எந்தவிதமான கேள்வியும் இல்லாமல் அங்கீகரிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது மட்டுமில்லாமல் சுவிசேஷத்தைச் சொல்லி தங்களைச் சுற்றி ஒரு சிறிய கூட்டத்தைக் கூட்டிக்கொண்டு அதற்கு சபை என்று பெயர் கொடுத்து எந்தவிதமான தெளிவான அங்கத்தவ வரம்பும், சட்ட விதிகளும் இல்லாமலும், தம்மைச் சுற்றியிருக்கும் எவரையும் எந்த விதத்திலும் கலந்து கொள்ளாமலும், ஆலோசிக்காமலும், சுயமாக சகல முடிவுகளை எடுத்தும், தம்மோடிருப்பவர்களுக்குத் தெரியாமல் கணக்கு வழக்குகளை நடத்தியும், அதுபற்றி அவர்களுக்கு தெளிவான கணக்குக்*

கொடுக்காமலும், ஊழியத்தைக் கொண்டு நடத்த வேத அடிப்படையில் சக தலைவர்களை வளர்க்காமலும், சபை அங்கீகாரத்தோடு அவர்களை நியமிக்கும் வழிமுறைகளுக்கு இடங்கொடுக்காமலும் தனக்குத் தானே தலைவனாக இருந்து கர்த்தரின் பெயரில் சில்லறைக் கடை போல் சபை நடத்தி வருவதைத்தான் நான் இங்கே மனக்கஷ்டத்தோடு குறிப்பிடுகிறேன். இத்தகைய முறைகளைக் கடைப்பிடித்து "ஊழியத்தைச்" செய்கிறவர்கள் தங்களுடைய குடும்பத்தை மட்டும் முதன்மைப்படுத்தி சுவிசேஷ ஊழியம் என்ற பெயரில் சுயநல ஊழியம் நடத்துவதற்கு சபை என்று வேதத்தில் எங்கே பெயரிடப்பட்டிருக்கிறதென்று நீங்களே சுட்டிக் காட்டுங்கள். இந்த முறையிலான தவறான ஊழிய நடவடிக்கைகளால் இளந்தலைமுறையினரும் வேதம் போதிக்கின்ற, கணக்குக் கொடுத்து வாழ்க்கை நடத்தும் நேர்மையான வேத வழிகளை அறிந்துகொள்ள முடியாமல் போக நேரிடுகிறது. இந்த வகையிலான சுயநல ஊழியம் செய்கிறவர்கள் தங்களுடைய எதிர்காலத்துக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்ற பயத்தில் தங்களோடு இணைந்து சமமாகப் பணிபுரியும்விதமாக சக சபைத் தலைவர்களை ஒருபோதும் உருவாக்க மாட்டார்கள்.

அப்போஸ்தலன் பவுலும், தீமோத்தேயுவும், தீத்துவும் ஒருவருக்கொருவர் கணக்குக் கொடுத்து வாழ்ந்து திருச்சபை ஊழியங்களில் ஈடுபட்டிருந்ததை வேதத்தில் மட்டுமே வாசிக்க முடிகின்றது. நம்மினத்தில் அதைக் கண்ணால் காண்பதற்கு வழியில்லாமலிருக்கிறது. இருக்கும் வரையும் தன் பெயர் பரவ வேண்டுமென்பதற்காக இங்கும் அங்கும் கடை திறப்பது போல் ஏதாவது ஊழியங்களை ஏற்படுத்தியும், இறந்த பிறகு அவற்றை நடத்திச் செல்ல இருக்கும்போதே தன் குடும்பத்தைப் பொறுப்பாக நியமித்துவிட வேண்டும் என்பதிலுந்தான் தமிழினத்து ஊழியர்கள் உறுதியாக இருந்து உழைத்து வருகிறார்கள். இத்தகைய சுயநல வாழ்க்கையால் வேதபூர்வமாக வளர்த்தெடுக்கப்பட்ட ஆத்துமாக்களை அங்கத்தவர்களாகவும், சபை அங்கத்தவர்களால் அங்கீகரிக்கப்பட்டு நியமிக்கப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட போதகர்களையும், உதவிக்காரர்களையும் கொண்ட திருச்சபை அமைப்பைக் கொண்டு ஒழுங்குமுறையோடு இயங்கி வரும் திருச்சபைகளையும் காணமுடியாமல் தமிழினம் வாடிக் கொண்டிருக்கிறது.

இதற்கெல்லாம் திருச்சபை பற்றிய தெளிவான வேதபூர்வமான போதனைகள் கொடுக்கப்படாததும், அந்தப்படி சபைகள் உருவாகாததுமே முக்கிய காரணங்கள். தேவசிந்தனையில் மட்டுமே உருவான மாபெரும் தெய்வீக அமைப்பு திருச்சபை என்பதும், தெய்வீக சிந்தனையில் உருவான அந்த அமைப்பு இந்த உலகத்தில் மாசற்ற மாபெரும் நிறுவனமாக, அதை உருவாக்கும் தேவனின் வழிகளில் மட்டுமே நிறுவ வேண்டுமென்பதையும் நம்மினம் இன்றைக்கும் அறியாமலும், அறிய மனதில்லாமலும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

ஜோன் மெக்காத்தர் (John McArthur) என்ற பிரசங்கி கர்த்தரின் திருச்சபையைப் பற்றிப் பின்வருமாறு சுருக்கமாக விளக்கியிருக்கிறார்.

1. தான் இந்த உலகத்தில் நிறுவி, ஆசீர்வதிக்கப்போவதாக நம்

*ஆண்டவர் அறிவித்த ஒரே ஆவிக்குரிய நிறுவனம் திருச்சபை மட்டுமே (மத்தேயு 16:18).*

*2. மெய்யாக ஆராதனை செய்பவர்கள் கூடிவருவதற்கான ஒரே இடம் திருச்சபை மட்டுமே (பிலிப்பியர் 3:3).*

*3. கிறிஸ்து தன்னுடைய திரு இரத்தபலியின் மூலம் சம்பாதித்த நாளிலிருந்து இந்த உலகத்தில் மிகவும் ஆசீர்வாதமான ஒரே நிறுவனமாக இருந்து வருவது திருச்சபை மட்டுமே. (அப்போ. 20:28; 1 கொரி. 6:19; எபே. 5:25; கொலோ. 1:20; 1 பேதுரு 1:19; வெளி. 1:6).*

*4. பரலோகத்திலே நிகழப்போகிறவைகளின் இவ்வுலக நிதர்சனமாகவே திருச்சபை இருக்கிறது. (மத்தேயு 6:10; 18:18).*

*5. இறுதியில் திருச்சபையே உலகலாவியவிதத்திலும், உள்ளூரிலும் வெற்றி பெறும். (மத்தேயு 16:18; பிலி. 1:5).*

*6. ஆத்மீக ஐக்கியத்தை அனுபவிக்கும் இடமாக திருச்சபையே இருக்கிறது. (எபிரெ. 10:22-25; 1 யோவான் 1:3; 6-7).*

*7. திருச்சபையே தெய்வீக சத்தியங்களை பிரசங்கிப்பதோடு அதைப் பாதுகாக்கவும் செய்கிறது. (1 தீமோ. 3:15; தீத்து 2:1, 15).*

*8. ஆத்மீகப் போதனையை அடையவும், அதில் வளரவும் அவசியமான பிரதானமான இடமாக திருச்சபையே இருக்கிறது (அப்போ. 20:32; எபே. 4:11-16; 2 தீமோ. 3:16-17; 1 பேதுரு 2:2-3; 2 பேதுரு 3:18).*

*9. உலக சுவிசேஷப் பணிக்கு அடிதளமாக, அதை ஆரம்பித்து வைக்கும் நிறுவனமாக திருச்சபையே இருக்கிறது (மாற்கு 16:15; தீத்து 2:11).*

*10. வல்லமையுடைய ஆத்மீகத் தலைவர்கள் உருவாகி, வளர்ந்து, முதிர்ச்சியடையும் பட்டறையாக திருச்சபையே இருக்கிறது (2 தீமோ. 2:2).*

*திருச்சபையைப் பற்றி எத்தனை அழகாகவும், ஆழமாகவும் வேத உண்மைகளை ஜோன் மெக்காத்தர் பட்டியலிட்டுத் தந்திருக்கிறார். இதில் பத்தாவதாக அவர் சுட்டிக்காட்டும் உண்மையைத்தான் இதுவரைப் பார்த்து வந்திருக்கிறோம். வேதபூர்வமாக அமைக்கப்பட்டு இயங்கிவரும் நல்ல சபைகளில்லாமல் நல்ல தலைமைக்கு இடமேயில்லை என்பதை வேதம் சுட்டிக்காட்டுகிறதல்லவா? (இனியும் வரும்)*

**"தான் இந்த உலகத்தில் நிறுவி, ஆசீர்வதிக்கப் போவதாக நம் ஆண்டவர் அறிவித்த ஒரே ஆவிக்குரிய நிறுவனம் திருச்சபை மட்டுமே"**
**- மத்தேயு 16:18 -**

# ஜோன் ஓவன்

## - இறையியலறிஞர்களின் இளவரசன் -

**- ஜெரமி வோக்கர் -**

[திருச்சபை வரலாற்றில் பதினாறாம் நூற்றாண்டு சீர்திருத்தவாத கால திருச்சபை எழுப்புதலுக்குப் பிறகு பதினேழாம் நூற்றாண்டு பெற்றுத்தந்த பெருமகன்களே பியூரிட்டன் பிதாக்களாகும் **(Puritan Fathers).** இங்கிலாந்தில் அரச ஆதரவாளராக இருந்து செயல்பட்ட ஆங்கிலேயத் திருச்சபை **(Church of England)** வேதத்தின் அதிகாரத்தை மட்டும் மதித்து நடக்காமல் அதற்குப் புறம்பான போதனைகளைப் பின்பற்றும்படி வற்புறுத்தியதால் அதனை எதிர்த்து நின்று பெருந்துன்பங்களுக்கு முகம் கொடுத்தவர்களே பியூரிட்டன் பிதாக்கள். திருச்சபையைத் தூய்மையாக வேத அடிப்படையில் மட்டுமே நடத்தவேண்டும் என்று இவர்கள் வலியுறுத்தி வாழ்ந்துகாட்டிப் போதனை செய்ததால் பியூரிட்டன்கள் (தூய்மைவாதிகள்) என்ற பெயரில் மற்றவர்களால் அழைக்கப்பட்டனர். ஆங்கிலேயத் திருச்சபை ஒரு ஜெப நூலை வெளியிட்டு அதிலிருப்பவைகளை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தியதால் அதை எதிர்த்த பியூரிட்டன்களும் ஏனையோரும் ஒத்துழையாவாதிகள் **(Non-conformist)** என்ற பெயரிலும் அழைக்கப்பட்டனர். ஜெப நூலைப் பின்பற்றி ஆங்கிலேயத் திருச்சபையின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட மறுத்தலால் இவர்கள் மீது அரசினதும் ஆங்கிலேயத் திருச்சபையினதும் கொடுமைகள் அதிகரித்து 2000க்கும் அதிகமான போதகர்கள் ஆங்கிலேயத் திருச்சபையில் இருந்து நீக்கப்பட்டதுடன் அநேகமானோர் நாட்டிலிருந்தும் வெளியேற்றப்பட்டனர். இன்னும் அதிகமானவர்கள் உயிரிழக்கவும் நேரிட்டது. இதெல்லாம் வேதத்தை விசுவாசித்துப் பின்பற்றியதற்கு அவர்கள் கொடுத்த விலை.

இந்தப் பியூரிட்டன்களின் காலப்பகுதியில் வாழ்ந்து கர்த்தருக்குப் பணியாற்றி திருச்சபையை அலங்கரித்த பெருமகனே ஜோன் ஓவன். அவர் மகா ஞானி. இறையிலறிஞர்களுக்கெல்லாம் மேலான அறிஞர். எழுத்தில் சிறந்தவர். தலை சிறந்த, எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கக்கூடிய வேதப் பொக்கிஷங்களை எழுத்தில் நமக்குத் தந்தவர். அவையெல்லாம் ஆங்கிலத்தில் இன்றும் பதிப்பில் இருந்து வருகின்றன. அவர் கருணையும், ஆத்தும பாரமும் கொண்ட போதகர். அதையே அவர் தன் ஊழியத்திலெல்லாம் சிறந்ததாகக் கருதினார். பிரசங்கம் செய்வதில் அவருக்கு இணையில்லை. தனக்கென ஒரு தனி முறையைக் கைக்கொண்டு ஆவியில் நிறைந்து அவர் பிரசங்கித்தார். கிராமத்து சபைகளிலிருந்து நாட்டின் பாராளுமன்றம்வரை அவருடைய பிரசங்க சிறப்பின் மேன்மை பரவியிருந்தது. ஒலிவர் குரோம்வெல் அவரைத் தனக்கு சாப்ளினாக விவரமறியாமல் வற்புறுத்தி நியமிக்கவில்லை. இத்தனைக்கும் மத்தியில் ஓவன் மிகவும் தாழ்மையானவர். தன்னைப் பற்றிப் பெருமை பாராட்டிக்கொள்ளாமல் தன் தலைவரான கிறிஸ்துவின் மகிமையை அனைத்திலும் நாடியவர்.

ஜோன் ஓவன் எத்தகைய மனிதர் என்பதையும், அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் சிறப்பையும், ஊழியத்தின் மேன்மையையும் ஆங்கிலத்தில் அவரைப் பற்றி வாசித்திராவர்களுக்கு வசதியாக இந்த ஆக்கத்தில் விளக்கியிருக்கிறார் ஜெரமி வோக்கர்.

ஓவன் எழுதிய நூல்களின் தலைப்புகளை தமிழில் மாற்றாமல் அப்படியே ஆங்கிலத்தில் தந்திருக்கிறோம். இந்த ஆக்கம் ஓவனின் சிறப்பை நீங்கள் அறிந்துகொண்டு அவருக்காக கர்த்தருக்கு நன்றி சொல்லவும், தொடர்ந்து அவர் எழுதியவற்றை வாசிக்கவும் உங்களைத் தூண்டுமானால் அதுவே இந்த ஆக்கத்திற்கு கிடைத்த சிறப்பாக இருக்கும். அதையும்விட ஓவன் விசுவாசித்த தேவனை நீங்கள் விசுவாசித்து, அவர் ஆத்மார்த்தமாகப் பின்பற்றிய சத்தியங்களுக்காக வாழவும், துன்பங்களைத் தாங்கவும், உழைக்கவும், ஏன் உயிரையும்கூடக் கொடுக்க உங்களைத் தூண்டுமானால் அதைவிடப் பெரிதாக இந்த ஆக்கத்தின் மூலம் நாம் எதையும் எதிர்பார்க்க முடியாது.]

---

*ஒரு கிறிஸ்தவன் எப்படி வாழ வேண்டும் என்று தன்னுடைய வாழ்க்கையின் மூலம் உதாரணமாக விளங்கிய ஜோன் ஓவன் நம்முடைய கவனத்திற்கு உரியவர். அநேக விதங்களில் அவர் தான் வாழ்ந்த காலத்துக்கு மிகவும் தேவையான மனிதராக இருந்தாலும் வேறு சில விதங்களில் தன் காலத்தையும் மிஞ்சிய மனிதராக இருந்தார். இருந்தபோதும் கிருபையின் கனிகளாக அவர் கொண்டிருந்த அநேக குணாதிசயங்களும், வாழப் பயன்படுத்திய விதிமுறைகளும் எக்காலத்துக்கும் உரியவை. நேர்மையானவராகவும், உழைப்பாளியாகவும், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து காட்டிய சிறந்த கிறிஸ்தவ மனிதர் என்ற முறையில் ஓவன் நம்முடைய கவனத்திற்கு உரியவராகிறார்.*

*ஒரு சிறந்த இறையியல் அறிஞர் என்ற முறையிலும் ஓவன் நம் கவனத்துக்குரியவராகிறார். விண்மண்டலத்தில் பளீரெனக் கண்சிமிட்டிக் காட்சியளிக்கும் அநேக நட்சத்திரங்களுக்கு மத்தியில் ஜொலிக்கும் நட்சத்திரங்களில் ஒன்றாக ஜோன் ஓவன் விளங்குகிறார். ஒரு சில விஷயங்களில் சம காலத்து அறிஞர்கள் அவரைவிட சிறப்பானவர்களாக இருந்திருந்தாலும், கர்த்தரின் வேதத்தில் அவர் கொண்டிருந்த ஆழமான அறிவு, இணக்கமான ஈடுபாடு என்பவற்றைப் பொறுத்தவரையில் அவர் காலத்தில் அவருக்கு இணையானவர்கள் இருக்கவில்லை.*

*அழிவில்லாத படைப்புகளைத் தந்த படைப்பாளி என்ற அடிப்படையிலும் ஓவன் நம் கவனத்துக்குரியவராகிறார். ஆங்கிலம் பேசப்படும் தேசங்களில் அநேக சீர்திருத்த கிறிஸ்தவர்கள் ஓவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் அவருடைய நூல்களில் ஒன்றையாவது வைத்திருப்பார்கள். ஆனால், அவருடைய நூல்கள் பல இடங்களில் வாசிக்கப்படாது தூசி படர்ந்து காணப்படுகின்றன. சம காலத்து மக்களுக்கு அக்கறையெடுத்து பெரிய நூல்களை வாசிக்கப் பொறுமையில்லை; கவனத்தோடு ஆராய்ந்து படிப்பதில் அக்கறையில்லை; விடாமுயற்சியோடு பல பக்கங்களை வாசிக்கவும் அவர்களுக்கு மனதில்லை. ஓவனின் எழுத்துக்களும், நூல்களும் ஒரு பெரும் சிக்கலான பழத்தோட்டத்தைப் போன்றவை. அவற்றில் பழ அறுவடை செய்வதென்பது இலகுவான காரியமல்ல. ஒவ்வொரு மரத்திலும் தொகையான பழங்கள் இருக்கின்றன. ஓவனின் நூல்களில் பல ஆங்கிலத்தில் பல்வேறு பதிப்புகளில் வாசகர்*

களின் வாசிப்புத் திறனுக்கும், தேவைக்கும் ஏற்ற முறையில் இலகுவான ஆங்கிலத்தில் வெளிவந்திருக்கின்றன. ஓவனின் எழுத்துக்களைப் படிக்க ஆரம்பித்திருப்பவர்கள் மேலும் மேலும் அவருடைய எழுத்துக்களோடு பரிச்சயப்பட்டு அவரை அறிந்துகொள்ளும்படி அவை வசதியளிக்கின்றன. இருந்தபோதும் ஓவனின் எழுத்துக்களில் ஆர்வமும், அவற்றைப் படித்துப் புரிந்துகொள்ளும் திறனும் உள்ளவர்கள் அவருடைய ஆக்கங்களை மூலத்தில் வாசிப்பது நன்மை பயக்கும். விஷயமேயில்லாத இக்காலத்தவர்களின் எழுத்துக்களோடு ஒப்பிடும்போது ஓவன் ஆங்காங்கு தந்திருக்கும் சாதாரண குறிப்புக்கள்கூட மிகவும் ஆழமானவையாகவும், சத்தானவையாகவும் இருக்கின்றன.

ஓவனுடைய ஆற்றலையும், பெருமையையும் படம்பிடித்துக் காட்ட முயலும் நான் ஓவனின் எழுத்துக்களில் பாண்டித்தியம் பெற்றவனல்ல. ஓவனுடைய வாழ்க்கையைப் பற்றிய இந்த ஆக்கத்தில் ஓவனைப் பற்றிய புதிய ஆராய்ச்சிகளின் பலன்கள் எதையும் நான் வெளியிடவில்லை; அத்தோடு அவருடைய எழுத்துக்களின் சிறப்பை அறிவிப்பதில் தேர்ந்தவனாகவும் என்னைக் காட்டிக்கொள்ளவில்லை. ஓவனுடைய எழுத்துக்கள் என்னைத் தாழ்மைப்படுத்தி என்னுடைய ஞானக்குறைவையே வெளிப்படுத்துகின்றன. இந்த ஆக்கத்தை எழுதுகிறபோது ஓவனிடமிருந்து கற்றுக்கொள்ளுகிற எண்ணத்தோடேயே அதை ஆரம்பிக்கிறேன். அதுமட்டுமல்லாமல் இந்த ஆக்கம் நீண்டுவிடக்கூடாதென்பதற்காக ஓவனுடைய ஆக்கங்களில் இருந்து ஒரு சில நேரடிக் குறிப்புகளை மட்டுமே இதில் தந்திருக்கிறேன். இந்த ஆக்கம் ஓவனுடைய எழுத்துக்களை நீங்களே நேரடியாக வாங்கி வாசித்து அவை தரும் பெரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள உதவட்டும்.

**ஓவனின் வாழ்க்கை**

ஜோன் ஓவன் 1615ல் ஹென்றி ஓவனின் (Henry Owen) இரண்டாவது மகனாகப் பிறந்தார். ஹென்றி ஓவன் ஸ்டெட்ஹாம்டனில் (Stadhampton) இருந்த ஆக்ஸ்போர்ட்ஷயர் (Oxfordshire) கிராமத்தில் "ஒத்துழையாவாத" ஆங்கிலிக்கன் குருவாக (Non-conformist Anglican vicar) இருந்தார். (1662ம் ஆண்டில் ஆங்கிலிக்கன் திருச்சபையில் இருந்து அகற்றப்படுவதற்கு முன்பாக ஆங்கிலிக்கன் திருச்சபை பயன்படுத்திய ஜெபநூலில் கொடுக்கப்பட்டிருந்த சில கட்டுப்பாடுகளை ரோமன் கத்தோலிக்க மதப்போதனைகளை சார்ந்ததாகக் கருதி எதிர்த்து நின்ற ஆங்கிலிக்கன் குருமார்களே "ஒத்துழையாவாதிகள்" என்ற பெயரில் அழைக்கப்பட்டனர்.) ஓவனுடைய முன்னோர்கள் பிரிட்டனின் வேல்ஸ் பகுதியைச் சேர்ந்தவர்கள். ஓவனின் தந்தை அவருடைய குடும்பத்தின் பதினைந்து பிள்ளைகளில் இளையவராக இருந்தார். ஓவனின் தாயின் குடும்பக் குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. பிள்ளைப் பருவத்தில் ஆரம்பப்படிப்பை வீட்டில் இருந்தே பெற்றுக்கொண்ட ஓவன் பின்பு எட்வர்ட் சில்வஸ்டர் (Edward Sylvester) என்பவரிடம் ஆக்ஸ்போர்டில் ஒரு சிறப்பு வாய்ந்த தனியார் கல்லூரியில் கல்வி பெறும்படி அனுப்பிவைக்கப்பட்டார்.

ஓவன் சிறுவயதிலேயே கல்வியில் மிகவும் திறமை வாய்ந்தவராக இருந்து தன்னுடைய ஆசிரியர் அதற்கு மேல் கற்றுக்கொடுப்பதற்கு எதுவும் இல்லை என்ற நிலையில் பதினைந்தோ அல்லது பதினேழோ வயதுள்ளவர்களே அனுமதி பெறும் பல்கலைக்கழகத்துக்கு தன்னுடைய பன்னிரெண்டாம் வயதில் சேர்ந்தார். சேர்ந்த நாளில் இருந்தே மிகவும் ஊக்கமாகவும் கடுமையாகவும் படிப்பில் கவனம் செலுத்த ஆரம்பித்தார். வெகுவிரை விலேயே நான்கு மணிநேரம் மட்டுமே உறங்குவதற்கு தன்னைப் பழக்கப் படுத்திக்கொண்டார் ஓவன். இந்தப் பழக்கம் சில வருடங்களுக்கு அவருடைய வாழ்வில் தொடர்ந்தது. அதுமட்டுமல்லாமல் படிக்கும் நேரத்தைத் தவிர்ந்த நேரங்களில் இளைப்பாறுவதற்காக சில விளையாட்டு களையும், உடற் பயிற்சி முறைகளையும் தனக்கு வசதியாக ஏற்படுத்திக் கொண்டார். இசை கற்றுக்கொள்வதிலும் ஓவன் ஈடுபட்டிருந்தார்.

இங்கே ஓவனுடைய வாழ்க்கையில் இருந்து இரண்டு விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். முதலில், இளம் வயதில் தான் இழந்த சரீர நலனைப் பெற்றுக்கொள்வதற்கு தன்னுடைய கல்வி அனைத்தையும் கொடுக்கத் தயாராக இருப்பதாக ஓவன் பிற்காலத்தில் கூறியிருந்தார். தான் இந்த விஷயத்தில் தவறிழைத்திருந்ததை ஓவனே உணர்ந்து ஒத்துக் கொண்டிருந்தார். இரண்டாவதாக, பல்கலைக்கழகத்தில் இருந்த காலத்தில் மனிதர்களுக்கு முன்பும், சபையிலும் உயர் பதவிகளை அடையும் உலக ஆசை மட்டுமே ஓவனிடத்தில் இருந்தது.

ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தன்னுடைய இறுதிக் காலங்களி லேயே ஓவன் முதன் முறையாக கர்த்தரைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தார். இக்காலத்தில் அவருடைய இருதயத்தில் கர்த்தர் எத்தகைய சூழ்நிலை களைப் பயன்படுத்திக் கிரியை செய்ய ஆரம்பித்தார் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியவில்லை. வீட்டில் அவர் பெற்றுக்கொண்டிருந்த ஆரம்பக் கல்வி இதற்கு துணைபோயிருந்திருக்குமா? பக்திமான்களாக இருந்த அவருடைய ஆக்ஸ்போர்ட் ஆசிரியர்களும், விரிவுரையாளர்களும் இதற்குக் காரணமாக இருந்திருப்பார்களா? படித்துக்கொண்டிருந்த காலங் களில் அவர் கற்றுக்கொண்ட சத்தியங்களைப் பரிசுத்த ஆவியானவர் அவருடைய இருதயத்தில் பதிய வைத்து வல்லமையாகக் கிரியை செய்திருப்பாரா? அக்காலத்தில் சபை வாழ்க்கையும், மதவாழ்க்கையும் பொது மக்கள் மத்தியில் முக்கிய இடம் பெற்றிருந்தது. மத, சபை சம்பந்த மான விவாதங்களும், தர்க்கங்களும் அவரைக் கர்த்தரைப் பற்றி சிந்திக்க வைத்திருக்குமா? இல்லாவிட்டால் சமகாலத்து கிறிஸ்தவ ஜாம்பவான்கள் அவரைக் கிறிஸ்துவிடம் அறிமுகப்படுத்தி வைத்திருப்பார்களா?

நாமிருக்கும் இடத்தில் இருந்து கர்த்தர் எந்த வகையில் ஓவனின் இருதயத்தில் செயல்பட்டிருந்திருப்பார் என்பதை நாம் விளக்குவது கஷ்டம். ஆனால், 1637ம் ஆண்டில் வில்லியம் லோட் (William Laud) ஆக்ஸ்போர்டில் தலைவராக இருந்தபோது ஓவன் ஏற்கனவே கிறிஸ்தவ நம்பிக்கைகளையும், வாழ்க்கை விதிகளையும் தனக்குள் வளர்த்துக் கொண்டிருந்தார். பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்த லோட்

ரோமன் கத்தோலிக்க மத வழக்கங்களை அங்கே அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார். அவற்றைப் பின்பற்ற மறுப்பவர்களைப் பல்கலைக் கழகத்தில் இருந்து நீக்கப் போவதாக பயமுறுத்திக் கொண்டிருந்தார். 1632ல் ஓவன் கலைப் பட்டதாரியாகவும் (Bachelor of Arts) 1635ல் முதுகலைப் பட்டதாரியாகவும் (Master of Arts) அங்கீகரிக்கப்பட்டார். அதே வருடம் அவர் அடுத்த ஏழு வருடங்களுக்கான Bachelor of Divinity பட்டப்படிப்பை ஆரம்பித்தார். ஏற்கனவே அவர் உதவிக்காரராக (Deacon) நியமிக்கப் பட்டிருந்தார். இருந்தபோதும், பல்கலைக்கழகத் தலைவரின் கட்டளை களை மனச்சாட்சியோடு ஏற்றுக்கொள்ள முடியாததால் தன்னுடைய இருபத்தோராவது வயதில் அவர் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் இருந்து விலகினார்.

ஆரம்ப வயதில் வீட்டில் கற்றுக்கொண்ட வாழ்க்கை விதிகளின்படி நடந்து ஓவன் உலக ஆசைகளுக்கு தன் வாழ்க்கையில் இடமில்லை என்பதை இச்செய்கை மூலம் நிரூபித்தார். அதுவரை அவருடைய பல்கலைக்கழகப் படிப்புக்கு உதவி வந்த அவருடைய செல்வந்தரான வேல்ஸில் இருந்த உறவினருக்கு ஓவனின் செய்கை ஆத்திரத்தை எழுப்பியது. இந்நடவடிக்கை மூலம் சுவிசேஷத்தின் எதிரிகளுக்குத் தன்னை யார் என்பதையும் ஓவன் இணங்காட்டிக் கொண்டார். இதன் மூலம் ஓவன் அதிக இழப்பை விருப்பத்தோடு இருகரம் நீட்டி ஏற்றுக்கொண்டார்.

ஆக்ஸ்போர்ட்ஷயரின் எஸ்கொட் (Ascot) என்ற பகுதியில் வாழ்ந்த சர் ரொபட் டோர்மர் (Sir Robert Dormer) என்பவரின் குடும்ப ஆசிரியராகவும், சாப்ளினாகவும் ஓவன் நியமனமானார். அதன் பிறகு அவர் பேர்க்ஷயர் (Berkshire) கவுன்டியில் வாழ்ந்த ஹர்லியைச் சேர்ந்த லோர்ட் லவ்லேஸ் (Lord Lovelace) என்பவருக்கு சாப்ளினாக சேர்ந்தார். 1642ம் ஆண்டு உள் நாட்டு யுத்தம் ஆரம்பமாகும்வரை இந்த நியமனங்கள் ஓவனுக்கு வாழ்வூதிய மளித்தன. அரச குடும்ப ஆதரவாளராக இருந்த லவ்லேஸின் குடும்பத்தை விட்டு விலகி இலண்டனுக்கு பயணமானார் ஓவன். இக்காலத்தில் அரசாதரவாளரும், செல்வந்தராகவும் இருந்ததோடு ஆக்ஸ்போர்டில் படித்தபோது ஓவனுக்கு பணஉதவி செய்துவந்த உறவினர் ஓவனோடிருந்த தொடர்புகளை அடியோடு துண்டித்துக்கொண்டார்.

ஆக்ஸ்போர்டில் இருந்த இறுதிக் காலங்களில் ஓவனை ஆத்மீகம் தொடர்பான ஒருவித மனச்சோர்வு பாதித்திருந்தது. அது இறுதிவரை அவரைவிட்டு முற்றாக விலகவில்லை. இதற்கு நோயும், வேலைப்பளுவும் கூட காரணங்களாக இருந்தபோதும் அவருடைய ஆத்துமாவின் நிலையைப் பற்றி அவருக்கு இருந்த ஆதங்கமே இதற்கு முக்கிய காரணம்.

இக்காலத்தில் தன் வாழ்க்கையில் ஓவனுக்கு பூரண சமாதானம் இருக்கவில்லை. அது ஏன் என்பதை நிர்ணயிப்பதும் கடினம். அவருடைய உள்ளத்தில் நிகழ்ந்துகொண்டிருந்த போராட்டங்களை அவரெழுதிய The Forgiveness of Sin, An Exposition of the 130th Psalm ஆகிய நூல்கள் விளக்குவ

தாக சிலர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதையும்விட மேலாக கர்த்தர் ஒரு மனிதனுக்கு விதித்திருக்கும், அவன் இலக்காகக் கொண்டிருக்கும் பணியில் அவன் பயன்படும்படியாக இத்தகைய உளப் போராட்டங்கள் அம்மனிதனின் குணாதிசயங்களை வரைமுறைப்படுத்தி அமைக்கின்றன என்று சொல்லலாம். இதை மார்டின் லூதர், ஸ்பர்ஜன் ஆகியோரிலும் நாம் காணலாம். ஏன், அப்போஸ்தலன் பவுலின் வாழ்க்கையிலும் காணலாம்.

ஒருநாள் அல்டர்மன்பரியில் (Aldermanbury) செயின்ட் மேரி திருச்சபையில் அன்றைய பிரசங்கிகளில் பிரபல்யமானவராக இருந்த டாக்டர் எட்மன்ட் கெலமியின் (Dr. Edmund Calamy) பிரசங்கத்தைக் கேட்பதற்காக ஓவன் சென்றார். டாக்டர் கெலமிக்குப் பதில் முன்பின் தெரியாத ஒரு நபர் பிரசங்க மேடைக்கு பேசுவதற்கு வந்தபோது ஓவனுக்கு சலிப்புத் தட்டியது. தன்னோடு வந்திருந்த நண்பன் இன்னொரு சபைக்கு பிரசங்கம் கேட்கப் போவோம் என்று சொன்னபோது சரீர அசதியின் காரணமாக அதன்படி நடக்க ஓவனுக்கு மனதிருக்கவில்லை. பிரசங்க மேடைக்கு வந்த புதிய பிரசங்கி ஜெபம் செய்த பிறகு தான் பிரசங்கிக்கப் போகும் வசனமாக மத்தேயு 8:26ஐ அறிவித்தார். "அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள்" என்பதே அந்த வசனம். அதைக் கேட்டவுடன் ஓவன் அந்த வசனத்தின் மூலம் தன்னோடு பேசும்படிக் கர்த்தரிடம் உடனேயே ஜெபித்துக் கேட்க ஆரம்பித்தார். பிரசங்கி பிரசங்கத்தில் ஓவனின் சந்தேகங்கள், பயங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாகத் தொட்டு அலச ஆரம்பித்தார். பிரசங்கம் முடிவுற்றபோது ஓவனுக்கு கிறிஸ்துவில் கர்த்தரின் அன்பு பற்றிய புதிய நம்பிக்கையும், கர்த்தரின் நிலைத்திருக்கும் சமாதானமும் கிட்டியது. பின்னால் எத்தனையோ முயற்சிகள் செய்தும் அன்று பிரசங்கித்த அந்தப் பிரசங்கி பற்றிய விபரங்களை ஒருபோதும் ஓவனால் பெற்றுக்கொள்ள முடியாமல் போயிற்று. இந்த முறையில் அறிமுகமற்றவர்களைப் பயன்படுத்தி பரலோக ஜீவியத்துக்கு ஆத்துமாக்களை அழைத்துக் கொள்ளும் பணியைக் கர்த்தர் அன்று முதல் தடவையாக செய்யவில்லை. இதே முறையிலேயே பெரல், ஜோன் கல்வின், ஸ்பர்ஜன் போன்றோரையும் கர்த்தர் மனந்திரும்புதலை அடையும்படிச் செய்தார்.

சரீரத்திலும், மனதிலும், உணர்விலும், ஆத்மாவிலும் அதுவரை அனுபவித்த போராட்டங்களில் இருந்து விடுபட்டு 1642ம் ஆண்டு ஆரம்பத்தில் எழுத்துலகில் பாதம் பதித்து நடக்க ஆரம்பித்தார் ஓவன். அவ்வருடமே The Display of Arminianism என்ற அவருடைய நூல் வெளியானது. அதில் தான் கல்வி பயின்றபோது ஆக்ஸ்போர்டில் தலைவராக இருந்த ஆர்ச்பிஷப் லோடின் ரோமன் கத்தோலிக்க, ஆர்மீனிய, பெலேஜியனிசப் போதனைகளைத் தோலுரித்துக் காட்டியிருந்தார் ஓவன். ஓவனின் முதல் நூலில் குறைகளில்லாமல் இருக்கவில்லை. அது வாசிப்பதற்கு இலகுவானதாக இல்லாமலிருந்தாலும் முற்றும் வேதபோதனைகளின் அடிப்படையில் அமைந்திருந்தது.

*அதன்பிறகு ஓவன் எஸ்செக்ஸில்* (Essex) *இருந்த போர்ட்ஹாம்* (Fordham) *என்ற இடத்தில் சிறிய சபைக்கு போதகராக நியமிக்கப்பட்டதற்கு இந்த நூலும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். அதே வருடம் ஓவன் மேரி ரூக்* (Mary Rooke) *என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இந்தத் திருமணத்தின் மூலம் அவர்களுக்கு அமைதியான தாம்பத்திய வாழ்க்கை அமைந்ததோடு, பதினொரு குழந்தைகளும் பிறந்திருந்தன என்பதைத் தவிர வேறு விபரங்களை அறிய முடியவில்லை. அந்தக் குழந்தைகளில் ஒரு பெண் குழந்தை மட்டுமே வாலிப வயதை அடைந்தது. அந்தப் பெண்ணும் திருமணத்திற்குப் பிறகு தாம்பத்திய வாழ்க்கையில் அமைதியின்றி வாலிப வயதிலேயே மரிக்க நேர்ந்தது.*

*ஓவனின் போதக ஊழிய முறை பியூரிட்டன்களுக்கே உரித்தான போதனைமுறையை ஒத்து அமைந்திருந்தது: வீடு வீடாகப் போய் வினா விடைப் போதனையளிப்பதும், சத்துள்ள பிரசங்கங்களை அளிப்பதையுமே ஓவன் வழக்கமாகக் கொண்டிருந்தார்.*

*1643ல் ஓவன்* The Duties of Pastor and People Distinguished *என்ற நூலையும் இரண்டு சிறு வினாவிடைப் போதனை நூல்களையும் வெளியிட்டார். இவற்றின் மூலம் சமூகத்தின் சகல பகுதியினரோடும் அறிவுபூர்வமாக தொடர்புகொள்ளும் ஓவனின் திறமை வெளிப்பட்டது. நல்ல படிப்பாளியான ஒருவரால் இலகுவாக மக்களைக் குழப்பிவிட முடியும். அதைவிட கடுமையானது தன்னுடைய பேச்சைக் கேட்கும் சமூகத்தின் சகல பகுதியினரும் அதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளச் செய்வது. தான் எழுதியவற்றை வாசிக்கும் மக்களை அடைய ஓவன் தனக்கேயுரிய சிறப்பான எழுத்து நடையைக் கையாண்டார்.*

*ஓவனின் மதிப்பு சிறிது சிறிதாக வளர ஆரம்பித்து அவருக்கு முப்பத்தி இரண்டு வயதாயிருக்கும்போது 1646ம் ஆண்டு 29ம் நாள், மாத உபவாசத்தின்போது அவருக்கு பாராளுமன்றத்தில் பிரசங்கமளிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அன்று அப்போஸ். 16:9ம் வசனத்தில் இருந்து அவர் பிரசங்கமளித்தார். அன்று அவரளித்த பிரசங்கம் அவருக்கிருந்த பிரசங்கத் திறமையை வெளிப்படுத்தியது. கிறிஸ்தவ போதனைகளைப் பெற்றுக் கொண்டிராத நாட்டின் பகுதிகளுக்குச் சென்று அத்தகைய போதனைகளை அளிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியபோது அவருடைய பேச்சில் சுவிசேஷ வைராக்கியம் வெளிப்பட்டது.*

*இதற்குப்பிறகு போர்ட்ஹாமில்* (Fordham) *அவருடைய பணி ஒரு முடிவுக்கு வந்தது. ஆங்கிலிக்கன் திருச்சபை பின்பற்றி வந்த போதக நியமிப்பு வழிமுறைக்கு அவர் பலியானார். உடனடியாகவே அவருக்கு கொக்கஸ்ஹோல் என்ற இடத்திலிருந்து அழைப்பு வந்தது. அங்கிருந்த சபையை அதுவரை விசுவாசமிக்க ஊழியர்கள் கவனித்து வந்திருந்தனர். அங்கே ஓவன் நல்ல அத்திவாரத்தோடு தன்னுடைய ஊழியத்தை ஆரம்பித்தார். சபை 2000 பேருடைய விசுவாசமுள்ளவர்களைக் கொண்டு வளர்ந்தது. (இனியும் வரும்)*






கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உறவினராகிய பாஸ்டர் ஒருவர் வீட்டில் உங்கள் பத்திரிகையைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. வரி வரியாக ஒவ்வொரு ஆக்கத்தையும் வாசித்துப் பயனடைந்தேன். அவை என்னை சிந்திக்க வைப்பதாய் இருந்தன. தமிழ்நாட்டில் இதுபோன்ற ஆவிக்குரிய அறிவார்ந்த பத்திரிகையைப் பார்க்கும் சந்தர்ப்பம் எதுவும் இல்லை என்று சொல்ல முடியும். நாங்கள் ஒரு பத்திரிகையை நடத்திக் கொண்டிருக்கிறோம். உங்கள் பத்திரிகை எங்கள் எல்லோருக்கும் மிகவும் பயனுள்ளதாகவும், எழுச்சியூட்டுவதாகவும் இருக்கும் என்று நம்புகிறேன். பழைய இதழ்களையும் சேர்த்து அனுப்புவீர்களேயானால் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்.

***– டேவிட் ராஜ், தமிழ்நாடு, இந்தியா***



பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்பி வருவதற்காக தேவனைத் துதிக்கவும், உங்களுக்கு நன்றி சொல்லவும் கடமைப்பட்டிருக் கிறேன். அந்தளவுக்கு பத்திரிகை எனக்கு பிரயோஜன மாயிருக்கிறது. இவ்வாண்டுக்குரிய மூன்றாம் இதழில் ஜோன் சார்ள்ஸ் ரைல் அவர்களின் வாழ்க்கை வரலாறும், அவர் எழுதிய மலைப்பிரசங்க விளக்கவுரையும், ஆசிரியரின் “வேத வெளிச்சமில்லாமல் வேதப் பிரசங்கமா!” என்ற தலைப்பும் பயனுள்ளவையாய் இருந்தன. 2000ம் ஆண்டு முதலுள்ள இதழ்களை எனக்குத் தயவு செய்து அனுப்பி வையுங்கள். நன்றி.

***– ஜீ. ராஜா, தமிழ்நாடு, இந்தியா***


# மீண்டும் அச்சில்

## - குடும்ப ஆராதனை -

**நல்ல முறையில் அச்சிடப்பட்டு மீண்டும் வெளிவந்திருக்கிறது. உரிய நன்கொடையை செலுத்தி நூலைப் பெற்றுக் கொள்ள வேண்டிய முகவரி:**

57/2 டி. பி. கே. மெயின் வீதி

பைகாரா, மதுரை 600425

தமிழ்நாடு

கைத்தொலைபேசி: 9994181010

மலர் 14 | அக்டோபர் - டிசெம்பர் 2008 | இதழ் 4

1. மலைப்பிரசங்கம் - ஜோன் சார்ள்ஸ் ரைல்
2. புரட்சிகரமான புதிய உடன்படிக்கை
3. நம்மினத்துக்கு இன்று தேவை நல்ல தலைவர்கள்
4. ஜோன் ஓவன் - இறையியலறிஞர்களின் இளவரசன்
5. எண்ணங்கள்!

Terau Print